134

# சுதந்திரத் தமிழ் வாசகம்

## மூன்றாவது பாரம்



TB
031 (80)
N49
13562.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
மதுரை சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1950
MADRAS

# SUDHANTHIRA
# TAMIL VACHAGAM

## FORM III

[ Prepared according to the Finalized Syllabus—1949 ]

Vidwan R. MEENAKSHISUNDARAM
&
R. KRISHNAMOORTHY B. A., B. O. L., L. T.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JAN 1950
MADRAS

E. M. GOPALAKRISHNA KONE

MATHURAI :: :: MADRAS

Rights Reserved ] 1949 [ Price Rs. 1.

# நூன்முகம்

"சுதந்திரத் தமிழ் வாசகம்" என்ற பெயர் கொண்ட இவ்வாசகத் தொடர், அரசியலார் அண்மையில் ஆராய்ந்து வெளியிட்ட புதிய பாடத்திட்ட முறைப்படி அமைக்கப்பெற்றது. தாய் மொழியில் பற்றும் பயிற்சியும், நாட்டுப் பற்றும், நல்லோர் நடந்த வகையில் நாட்டமும், பண்பாடும் பெருகும் முறையில் உரைநடைப் பகுதியில் பலவகையான பாடங்கள் எழுதப் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடமுடிவிலும் பயிற்சியும், வினாக்களும், இலக்கணமும் சேர்க்கப்பட்டுள்ளன. செய்யுட் பகுதியும் அந்தந்த வகுப்பிற்கேற்ற முறையில் முற்கூறிய திட்டப்படி தொகுக்கப் பெற்றுள்ளது.

இதனைக் கண்ணுறும் தமிழாசிரியர்களும் தலைமையாசிரியர்களும், தங்கள் தங்கள் கலாசாலைகளில் பாடப் புத்தமாக வைத்து ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

பதிப்பாசிரியர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008.
13564

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை-'49

# பொருளடக்கம்


| எண் | பொருள் | SYLLABUS | பக்கம் |
| --- | --- | --- | --- |
| 1. | விபுலானந்த அடிகள் | (Biography) | 1 |
| 2. | ஏறு தழுவுதல் | (Adventure) | 8 |
| 3. | நெய்தல் தொழில் | (Cottage Industry) | 13 |
| 4. | உயிர்களுக்குதவியஉத்தமன் | (Literature) | 20 |
| 5. | எழுவரை வென்ற ஏந்தல் | (Historical Incidents) | 26 |
| 6. | மீகாமன் ஜேம்ஸ் குக் | (Pioneering of Colonization) | 32 |
| 7. | கடலாராய்ச்சி | (Exploration) | 39 |
| 8. | உயிரளித்துதவிய உத்தமப் புறு | (Short story of good taste) | 44 |
| 9. | இசைக் கருவிகள் | (Music) | 51 |
| 10. | மருத்துவக் கலை | (Art) | 57 |
| 11. | நிலக்கடலை | (Agriculture) | 63 |
| 12. | வான் செலவு | (Excursion) | 69 |
| 13. | ஈசுவர சந்திர வித்தியாசாகரர் | (Biography of famous personality of the past) | 76 |
| 14. | வானொலி | (Science) | 81 |
| 15. | அறிவால் உயர்ந்தோன் | (Historical incident of India) | 86 |
| 16 | அமர சிற்பம் | (Sculpture) | 92 |
| 17. | குதிரை பிடிக்கத் தூண்டில் போட்டது | (Humorous story) | 99 |
| 18. | ஐக்கிய நாணயச் சங்கம் | (Co-operation) | 105 |
| 19. | வீரத்தாய் | (Classical Select prose-play) | 111 |
| 20, | செல்வர் உலகம் | (Lives of people in other countries) | 118 |

21. எக்ஸ்-கதிர் அசைவுப் படக் கருவி (Interesting article of good quality from Magazines) 125
22. கிருஷ்ண ராஜ சாகரம் (Achievement-Engineering & Irrigation Project) 130
23. அன்பின் வெற்றி (Short story in other countries) 136
24. கோவில் திருப்பணி (Interesting article of good quality from Newspapers) 144

## செய்யுள்

### வாழ்த்துப் பகுதி (LYRICS AND HYMNS)

1. தேவாரம் 149
2. திருமாலை ,,
3. திருவருட்பா ,,
4. திருப்பள்ளி யெழுச்சி 150
5. இரக்ஷணிய யாத்திரிகம் ,,
6. தாயுமான அடிகள் திருப்பாடல் ,,

### நீதிப் பகுதி(ETHICAL VERSES)

1. திருக்குறள் 151
2. நான்மணிக் கடிகை 152
3. இனியவை நாற்பது 153
4. நாலடியார் ,,
5. பழமொழி 154
6. குமரேச சதகம் ,,
7. அறப்பளீசுர சதகம் 155

## வருணனைப் பகுதி (DESCRIPTIVE POEM)


| | | |
|---|---|---|
| 1. | மழை | 156 |
| 2. | கடல் | 157 |
| 3. | உடற் பயிற்சி | 158 |


## கதைப் பகுதி (STORY POEMS)


| | | |
|---|---|---|
| 1. | புத்தர் | 159 |
| 2. | நளவெண்பா | 162 |
| 3. | கம்பராமாயணம் | 165 |
| 4. | வில்லிபுத்தூரார் பாரதம் | 168 |
| 5. | சிலப்பதிகாரம் | 171 |
| 6. | மணிமேகலை | ,, |


## பல்சுவைப் பகுதி (EPIGRAMMATIC FOLK SONGS)


| | | |
|---|---|---|
| 1. | தனிப் பாடல்கள் | 172 |
| 2. | செண்பகராமன்பள்ளு | 173 |
| 3. | காரைவிடுதூது | ,, |
| 4. | திருவரங்கக் கலம்பகம் | ,, |
| 5. | புறநானூறு | 174 |
| 6. | குறம் | ,, |
| 7. | நாடோடிப் பாடல் | 175 |
| 8. | திரிகைப் பாட்டு | ,, |
| 9. | கயிறு திரித்தல் | ,, |
| 10. | கதராடை | 176 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1950
MADRAS

# சுதந்திரத் தமிழ் வாசகம்

## மூன்றும் பாரம்

### 1. விபுலானந்த அடிகள்

அறிவும் ஆராய்ச்சித் திறனும் மிக்கு விளங்கும் இக்காலத்திலே, பற்பல பெரியார்கள் தோன்றிப் பல பல துறைகளிலே தம்மாலியன்றவளவு உழைத்துக் குன்றாப் புகழ்பெற்று நின்று நிலவுகின்றனர். இத்தகைய பேரறிஞர்களில் நமது தாய்மொழிக்கு உழைத்த தக்கார் ஒருவரது வரலாற்றைத் தமிழகம் அறிந்து நன்றி செலுத்தக் கடமைப்பட்டுளது. ஆதலால், விபுலானந்த அடிகளது வரலாற்றைச் சுருக்கமாக இங்கு எடுத்துக் கூறுவோம்.

இப்பெரியார் இலங்கைத் தீவின் கீழ் மாகாணத்தைச் சேர்ந்த மட்டக்களப்பிலுள்ள காரேறு மூதூர் என்னும் இடத்தில் முத்தமிழும் செய்த தவப் பயனாக 1892-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 29-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை யன்று பிறந்தார். இவரது தந்தையார் சாமித்தம்பியார் என்பவராவர். தாயார் பெயர் கண்ணம்மையார் என்பது. இவருக்குப் பெற்றோர்களால் இடப்பட்ட பெயர் மயில்வாகனன் என்பதாகும்.

மயில்வாகனனார் தக்க பருவமடைந்ததும் பள்ளியில் சேர்க்கப்பட்டார். இவர் கல்வியில் பெருவிருப்பு

உடையராய் நன்கு கற்றுத் தமிழிலும், வடமொழியிலும், ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றார். இவர் லண்டன் பல்கலைக்கழகத்தார் நடத்தும் பௌதிகநூல் புலமைப்பட்டத்தையும் (B. SC) உரிய காலத்தில் பெற்றார். பிறகு அவர் பால் இயல்பாகப் பெருக்கெடுத்து நின்ற தமிழார்வத்தால் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பரீட்சையிலும் தேர்ச்சி பெற்றுத் தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்தார். இவ்வாறு அறிவியல் துறையில் மட்டுமன்றி தமிழ், வடமொழி, ஆங்கிலமாகிய மும்மொழிகளிலும் புலமை நிறைந்ததால் அவர் உள்ளம் உண்மையை நாடுவதில் ஊக்கம் கொண்டது.

இவர் சைவ நூல்களை ஆராய்ந்தார்; அவற்றுடன் ஆங்கில மொழியில் வெளிவந்துள்ள தத்துவ நூல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தார். அதன் விளைவாக அவர் உள்ளத்தில் வேதாந்த அறிவு வேரூன்றிக் கிளைத்தது. அவ்வேதாந்த அறிவின் விழுப் பயனை எய்தத் துறவு பூணுதலே சிறந்த வழி எனத் துணிவு பூண்டார். அதற்குத் தகுதியான காலத்தையும் ஏற்ற நல்லாசிரியரையும் எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்.

அக்காலத்தில் சென்னையிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவராகிய ஸ்ரீசுவாமி சர்வானந்தர் என்ற பெரியார் வேதாந்த ஞானத்தை இலங்கையில் பரப்பும் பொருட்டு அங்குச்சென்று சொற்பொழிவுகள் ஆற்றிவந்தார். அவரது சீரிய ஒழுக்கத்தையும், அறிவின் ஆழத்தையும் அன்புப் பெருக்கையும் கண்ட மயில்வாகனனார், அவரை அடைந்து தன்னை ஆட்கொள்ளுமாறு வேண்டினார்.

அவரது திருந்திய தகுதி நிலையை யுணர்ந்த சர்வானந்தர் அவரைச் சென்னைமாநகர் வந்து மடத்தைச் சார்ந்த மாணவர்களுடன் பழகுமாறு பணித்தார். குருவின் ஆணையைச் சிரமேற்கொண்ட மயில்வாகனனார் 1921-ல் சென்னை வந்து சேர்ந்தார்.

சென்னையில் மயில்வாகனனார் தமது தமிழ்ப்புலமையால் மடத்திற்கும் தமிழுக்கும் ஒருங்கே தொண்டு புரிவாராயினர். ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அருள் மொழிகளை இனிய எளிய செய்யுள் வடிவில் மொழி பெயர்த்தமைத்தார். கர்மயோகம், உரையாடல்கள் முதலிய அருள்நூல்கள் சில இனிய தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன.

மடத்துத் தலைவரால் உரியகாலத்தில் மயில்வாகனனாருக்குத் தீக்ஷை யளிக்கப்பட்டது. மடத்தைச் சேர்ந்த 'இராமகிருஷ்ணவிஜயம்' 'வேதாந்தகேசரி' என்ற பத்திரிகைகளின் ஆசிரியராகப் பொறுப் பேற்று நடத்தியதுடன், பல அரிய கட்டுரைகளையும் எழுதியுதவினர் மயில்வாகனனார்.

1923-ம் ஆண்டு பிரபோதசைதன்யர் என்ற பெயர் பூண்டு பிரமசரிய நிலையை எய்தினர். அப்பொழுது அவர் அப்பெயரின் தமிழ்ச் சொல்லாகிய அறிவுடைய அரனார் என்ற பெயரில் பல கட்டுரைகளை எழுதி வந்தார். பிறகு 1924-ல் துறவு பூண்டு அடிகள் ஆனார். அன்று முதல் அவர் விபுலானந்தர் என்று அழைக்கப் பெறுவாராயினர்.

துறவுபூண்ட பின் அவர் இலங்கையிலும் இந்தியாவிலும் ஆற்றிய சொற்பொழிவுகள் கேட்பார் உள்

ளத்தைப் பிணித்துச் செந்நெறிப் படுத்தும் திறத் தனவாயமைந்து விளங்கின. துறவுக் கோலத்துடன் துலங்கும் அடிகளைக் கண்ட இலங்கை மக்கள் இறும்பூதெய்தினர். ஏனெனின் இலங்கையில் தமிழுக்கும் சமயத்திற்கும் ஆற்றிய பணியில் இவருக்கு முன் புகழ் பெற்று விளங்கிய ஆறுமுக நாவலரவர்கள் கூடத் துறவுபூண்டவரல்லர். ஆகவே இவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டாயிற்று.



இவரது சொற்பொழிவுகளால் அத்தீவில் சமயம், சரித்திரம், தமிழ் என்ற மூன்று துறைகளிலும் புத்துணர்ச்சி உண்டாயிற்று. இலங்கையில் பல தமிழ்ப் பாடசாலைகள் நிறுவப்பெற்றன. பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் விருப்பப்படியே அங்குச் சென்று, தமிழ்த்தலைமை பூண்டு இரண்டாண்டுகள் தமிழ்ப்பணி ஆற்றினர். அக்காலத்தில்

அவரது ஊதியமெல்லாம் அறச் செயல்களுக்கே பயன்படுத்தப்பட்டன.

பின்பு அடிகள் மீண்டும் இலங்கை சென்று ஆங்குள்ள நிலையங்களை யெல்லாம் சிறக்கச் செய்தார். ஐந்தாண்டுகளுக்கு அப்பால் கைலாய யாத்திரை செய்யப் புறப்பட்டார்; இமயமலையின் பனி மூடிய சிகரங்களைக் கண்டு களித்தார்; இறைவனருட் கோலம் கண்டு மகிழ்ந்தார்; தனித்திருந்து சிந்தனை செய்ய அடிகளுக்கு அதிக நேரம் கிடைத்தது. இங்குத்தான் புகழ் பெற்ற 'இமயம் சேர்ந்த காக்கை' என்ற கட்டுரை மூகிழ்த்தது. இங்கேதான் நீண்ட காலமாகத் தமிழ் இலக்கியப் பயிற்சியால் தமிழருக்குத் தனிப்பெருஞ் செல்வமாகவும் தமிழ்க்கலையறிவின் சிகரமாகவும் அவருணர்ந்திருந்த யாழினைப் பற்றிய பல உண்மைகள் அவருள்ளத்திற்கு விளக்கமாயின. அடிகள் இவ்வாறு யாத்திரை செய்து திரும்புகையில் இமயமலைச் சாரலில் உள்ள சம்பாவதி நகருக்கடுத்த மாயாவதி தவப் பள்ளியிலே தங்கியிருந்தார்; அங்கு, பிரபுத்த பாரதம் என்னும் பத்திரிகையின் ஆசிரியத் தொழிலை யேற்று அதனைச் செவ்வனே நடத்தினர்.

1941-ம் ஆண்டில் கல்கத்தாவிலுள்ள தலைமை மடத்திற்குச் சென்றார். ஆங்குள்ள செயற்குழுவினருள் ஒருவராயமர்ந்து பணியாற்றினர். அக்காலங்களில் தமிழிசைப் பணியை நழுவவிடாது, மேன்மேலும் ஆராய்ச்சி செய்து பல கட்டுரைகள் எழுதினார். 1943-ம் ஆண்டில் இலங்கை சென்று, இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக விளங்கினார்.

இப்பெரியாரது குணங்கள் போற்றுதற்குரியன. அடிகள், 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதற்கு இலக்கியமாகத் திகழ்ந்தார்; சான்றாண்மையின் உருவாகவே வாழ்ந்து வந்தார்; சிறியார், பெரியார், பாமரர், பண்டிதர் என்னும் வேறுபாடின்றி யாவருடனும் அன்புடன் பழகிவந்தார். அடிகளது சமயப்பற்று மிகவும் வியத்தற்குரியது. பெரும்பாலும் அடிகள் சொற்பொழிவாற்றத் தொடங்குமுன் ஸ்ரீ குமரகுருபரர் பாடியருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிலுள்ள 'தொடுக்கும் கடவுட் பழம் பாடல்' என்று தொடங்கும் பாடலைப் பாடிவிட்டுத்தான் சொற்பொழிவைத் தொடங்குவது வழக்கம். இவர் தலைமை வகித்த மாநாடுகள் பல. இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் பல. அவருடைய பேச்சு கம்பீரமானது; கேட்பவரைப் பிணிக்கும் இனிமையும் அறிவும் வாய்ந்தது.

அவரது நூல்களுள் ஒன்று நாடகத் தமிழ் நூலான மதங்க சூளாமணியாகும். ஆங்கில நாடகங்கள், வடமொழி நாடகங்கள், சிலப்பதிகாரம் ஆகியவற்றின் அமைந்த இலக்கண அமைதிகளையெல்லாம் அந்நூலில் பரக்கக் காணலாம். ஆங்கிலப் பாடல்களை இவர் தமிழில் ஆக்கியமைத்திருக்கும் தன்மை மெச்சத்தக்கது. அவர் தாம் பலகாலமாக அரிதின் ஆராய்ந்து வெளியிட்ட இசைத்தமிழ் பற்றிய 'யாழ்நூல்' என்பது ஒப்புயர்வற்ற நூலாகும். மகாமகோபாத்தியாய, பண்டிதமணி, மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் மணிவிழா மலரில் 'ஆங்கில வாணி' என்ற கட்டுரை யொன்றே அடிகளின் ஆங்கிலப் புலமையினை விளக்கப்போதிய சான்றாகும்.

அடிகள் தாம் தோன்றிய கடனை நன்கு நிறைவேற்றிய பிறகு 1947-ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 19-ஆம் நாளன்று தமது பூதவுடலை நீத்துப் புகழுடம்பை யெய்தினர்.

சொற்பொருள்:— துறை - வழி, திளைக்க - மூழ்க, சீரிய - சிறந்த, இறும்பூது-வியப்பு, ஆற்றினர்-செய்தார்.

## வினாக்கள்

1. மயில்வாகனனார் விபுலானந்தர் என்ற பெயர் பெற்றதெவ்வாறு ?

2. இலங்கையில் விபுலானந்தரால் புத்துணர்ச்சி யூட்டப்பெற்ற துறைகள் யாவை ?

3. விபுலானந்தர் இயற்றிய நூல்களைப்பற்றி வரைக.

4. இவரது நல்லியல்புகள் யாவை ?

## பயிற்சி

பின் வரும் வாக்கியங்களின் வகைகளைக் கூறுக:

1. இலங்கையில் இவரைக் கொண்டாடாதவர் யார்?
2. அன்று முதல் இவர் துறவியாயினர்.
3. தமிழ் மொழிக்கே தொண்டு செய்.

## இலக்கணம்

பின் வருவனவற்றில் சுட்டுப் பெயர்களையும், வினாப் பெயர்களையும் கூறுக:

அரசன், யார், இவர், யானை, இன்மை, எது, அவன், நானோ, ஏணி, எலி, ஏது, நீயா, உலகம்.

## கட்டுரை

விபுலானந்தர் தமிழுக்குச் செய்த தொண்டைப்பற்றி ஒரு கட்டுரை வரைக:

# 2. ஏறு தழுவல்

மனிதன் உடல் உரம் பெற்று வாழ்வதற்குக் கைக்கொள்ள வேண்டிய சுகாதார நெறிகளுடன் பலவிதமான தேகப் பயிற்சிகளையும் ஒழுங்காகச் செய்து வரவேண்டும். உடற் பயிற்சிகளை விளையாட்டு வடிவில் செய்துவந்தால் அப்பயிற்சிகளில் வெறுப்பு ஏற்படாது. இது கருதியே கலாசாலைகளில் மாணவர்களுக்குப் பலவகையான விளையாட்டுக்களைக் கற்பித்துப் போட்டிகளையும் ஏற்படுத்தி, அவற்றில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்குகின்றனர்.

விளையாட்டுக்கள் காலத்திற்கேற்ப மாறுதல்களையடைகின்றன. இந்நாளில் உலக அரங்கில் நம்மவர் ஹாக்கியில் நிகரற்று விளங்கி வருகின்றனர். கிரிக்கெட், கால் பந்து முதலிய விளையாட்டுக்களிலும் புகழ் பெற்ற பலர் நம் நாட்டில் இருக்கின்றனர்.

உடற் பயிற்சி விளையாட்டுக்களில் வியக்கத் தக்க வலிமையைக் காட்டுவன பலவுள. சில பயிற்சிகள் பழக்கத்தால் பார்ப்பதற்கு அற்புதமாயிருக்கும். விளையாட்டுக்களைத் தனித்தும் பலர் சேர்ந்தும் செய்வதுண்டு. கழைக்கூத்தர்களிடத்தில் நாம் காணும் விளையாட்டுக்கள் வியக்கத்தக்கன வல்லவா? சிலம்ப விளையாட்டுக்கள், கத்தி விளையாட்டுக்கள், பாரமான கல்லைச் சுமத்தல் போன்றன இன்னும் வியப்பை யூட்டுவனவாம். இவற்றையெல்லாம் ஒருங்கே சர்க்கஸ்களில் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

இந்நாளிற் போலவே முன்னாளிலும் பல விளையாட்டுக்கள் இருந்தன. அவற்றுள் பல, காலத்தால் மறைந்தொழிந்தன. எஞ்சியவை சிலவே. அவற்றுள் 'ஏறுதழுவல்' என்பது ஒன்று. இந்



நாளில் அதை 'மஞ்சிவிரட்டு' என்றும், 'சல்லிக் கட்டு' என்றும் சொல்வார்கள்.

தமிழ் நாட்டில் மிகப் பழங்காலத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற இயற்கை நிலப் பிரிவின்படி மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் விளையாட்டுக்கள் அவர்கள் வாழும் நிலத்தின் இயல்புக்கேற்றபடியே அமைந்திருந்தன. குறிஞ்சி நில மக்கள் குரவைக் கூத்தாடி மகிழ்வர். மருத நில மக்களும் முல்லை நில மக்களும் பொங்கல் புது நாளையடுத்து மறுநாள் இவ்வேறு தழுவி விளையாடுவர். நெய்தல் நில மக்களுக்குக் கடல் விளையாட்டில் விருப்பம் அதிகம்.

ஏறு தழுவல் என்பது காளைகளைக் கட்டிப் பிடித்து அடக்குதலாகும். மாடுகள் முல்லை நில மக்களின் சிறந்த செல்வம். ஆகவே, அவர்கள் தங்கள் வீர இயற்கைக்கேற்ற வண்ணம் அதனைக் கைக்கொண்டனர். ஏறுதழுவல் எளிதான செயலன்று. கட்டுக்கடங்காது ஓடிவரும் காளைகளைத் தழுவும்போது, அவற்றின் கூரிய கொம்புகளால் வயிறு கிழிந்தும், குடர் சரிந்தும், கீழ் வீழ்ந்து முடமாகியும், சிற்சில சமயங்களில் உயிரையே யிழந்தும் வீழ்வர். அவர்கள் இவ்வாபத்துக்களைப் பொருட்படுத்தாது எதிர் மண்டிப்பாய்ந்து, காளைகளைத் தழுவுவது காண்பதற்குப் பயங்கரமான காட்சியாகும்.

முல்லை நில ஆடவர்களின் மார்பில் காளைகளின் கொம்புகள் பதிந்த வடுக்களைக் காணலாம். இத்தகைய வடுக்களையே தனக்குப் பரிசாகக் கருதுவான் அந்நிலத்து ஆண் மகன். அப்படிப்பட்ட வீரனையே மணக்க விரும்புவாள் அம்முல்லை நிலத்து வீர மகள். நல்ல உடல் உரமும், அஞ்சா நெஞ்சமும், உயிரைத் துரும்பென மதிக்கும் வீர வுணர்ச்சியும் உடைய மகனை மணமகனாகத் தேர்ந்தெடுத்தல் அவ் விழாவின் முக்கிய நோக்கமாகும். இன்றும் மாட்டுப் பொங்கலன்று, தமிழ் நாட்டார் இதனைக் கொண்டாடி வருகின்றனர். மஞ்சி விரட்டு நடக்கும் இடத்தில் காளைகள் நிற்பதற்காக ஓரிடம் அமைக்கப் பெறும். அதற்குத் தொழுவம் என்று பெயர். அது வாடி வாசல் என்றும் சொல்லப்படும். இவ்வாடி வாசலுக்கு மேலும் அதன் இரு புறத்தும், மக்கள் வண்டிகளின் மேலும், மரங்களின் மேலும் ஏறியிருந்து

வேடிக்கை பார்ப்பர். இந்நாட்களில் பல ஊர்களி லிருந்தும் காளைகள் வந்து சேரும். அவை பார்ப்ப தற்கு வெகு அழகாகவும் கம்பீரமாகவும் இருக்கும்.

காளைகளுக்கு உரியவர்கள் காளைகளின் கொம்புகளை நன்ருகச் சீவி,புதிய ஆடைகளையும், பூமாலைகளையும் அணிந்து அலங்கரித்திருப்பார்கள். பொது மக்கள் வாடி வாசலின் இருபுறங்களிலும், காளை வீரர்கள் காளைகளை அணையும் காட்சியைக் காணக் காத்துக்கொண்டிருப்பர். காளைகள் தொழுவத்தினின்று குபீரென்று வெளியேறும். உடனே அஞ்சா நெஞ்சம் படைத்த வீரன் அதன் கழுத்தை உடும்புபோல் பற்றுவான். காளை என்ன உதறித் தள்ளினுலும் விடாது நின்று அதனை அடக்கி விடுவான். அதன் உதறல்களுக்கு ஆற்ருதவன் வானத்தே தூக்கி எறியப்பட்டு அதன் கால்களாலே மிதிக்கப்படுவான். சில காளைகள் பயந்து ஓடாமல் நின்று தன்னைத் தழுவுபவரை நிமிர்ந்து பார்க்கும் காட்சி, 'வாருங்கள் உங்களுக்கு வழி காட்டுகிறேன்' என்று சொல்வது போலிருக்கும்.

இம்மஞ்சிவிரட்டு இக்காலத்திலும் மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களில் சில இடங்களில் நடைபெற்று வருகிறது. மக்கள் இதை ஒரு பெருந் திருவிழாவாகவே நடத்தி மகிழ்கின்றனர். இவ் விளையாட்டில் மகிழ்ச்சியோடு துயரமும் சமயங்களில் கலந்து விடுகிறது. காளைகளைப் பிடிக்க முயலும் பொழுது சில சமயம் உயிர்ச்சேதம் ஏற்படுவதும் உண்டு. காளைகளைப் பிடிக்கும் போட்டியில் அடிதடிகளும் மூண்டு விடுகின்றன. இதனுல் இவ்விளையாட்டு வரவரக் குறைந்து வருகிறது.

இவ்வீர விளையாட்டைக் கண்ணன் ஆடி மகிழ்ந்ததாக நூல்கள் கூறுகின்றன. நமது பழந்தமிழ் நூலாகிய கலித் தொகையிலும் இதைப்பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

சொற்பொருள்:— உரம்-வலிமை, ஏறு-காளை, கழை - மூங்கில், முல்லை-காடு, குறிஞ்சி-மலை சார்ந்த இடம், நெய்தல்-கடல் சார்ந்த இடம், பரிசு-வெகுமதி.

வினாக்கள்

1. நமது நாட்டில் எவ்வெவ்வகை விளையாட்டுக்களில் தேர்ச்சி பெற்றவர் இருக்கின்றனர்?

2. ஏறு தழுவுதல் என்றால் என்ன?

3. தமிழ் நாட்டின் நிலப்பிரிவுகள் யாவை?

4. மஞ்சி விரட்டின் முக்கிய நோக்கம் என்ன?

5. வாடி வாசல் என்று எதற்குப் பெயர்?

பயிற்சி

பின்வரும் சொற்றொடர்களையும், மரபுத் தொடர்களையும் வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

*அமிழ்தினும் இனிய, உள்ளும் புறமும், கைதேர்ந்த, தலைகவிழ்ந்து, அடியற்ற மரம் போல்.*

இலக்கணம்

பின்வரும் பெயர்களில் இடுகுறி காரணப் பெயர்களைத் தனித்தனியே காட்டி, அவற்றுள் போதுப் பெயரும் சிறப்புப் பெயரும் இவையெனக் கூறுக:

*பறவை, கல், மரம், வானம்பாடி, தென்னை, காதணி, காளை, மாடு.*

கட்டுரை

*மாட்டுப் பொங்கலைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.*

# 3. நெய்தல் தொழில்

நமது வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளில் உணவும் உடையும் மிகச் சிறந்தனவாகும். உடலை நன்கு வளர்க்க உணவு வேண்டும். ஆனல் அதனினும் உடல் இயங்குதற்குக் காரணமாக வுள்ள உயிரினும் சிறந்த மானத்தைக் காக்கவும், உடல் தட்ப வெப்ப முதலியவற்ருல் தாக்கப்படாது பாது காக்கவும் உடை இன்றியமையாததாகின்றது. மேலும் ஆடை உடலுக்கு அழகு தருவதாகவும் அமைகின்றது. 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்', 'அணியெல்லாம் ஆடையின் பின்', 'இரக்கப்போனலும் சிறக்கப்போகவேண்டும்' என்பனவெல்லாம் ஆடையின் சிறப்பை விளக்க எழுந்த பழமொழிகளேயாம். ஆகவே, ஆடை நெய்யும் தொழிலைப்பற்றித் தெரிந்துகொள்வது அவசியம் அல்லவா?

மக்கள் முதன் முதல் செய்யத் தொடங்கிய தொழில் உழவுத்தொழிலாயினும், மக்களது மானங் காத்த தொழில் நெசவுத் தொழிலே யாதலின் 'நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை' என்று பாராட்டப்படும் உயரிய தொழிலாயிற்று. இத்தொழில் பழங்காலத்தில் எவ்வாறு நடைபெற்றது என்பதைப் பற்றியும், இந்நாளில் எந்நிலையிலுள்ளது என்பதைப் பற்றியும் சிறிது ஆராய்வோம்.

இந்நெசவுத் தொழிலானது ஆதிமக்கள் அறிவு தோன்றிய காலத்திலிருந்தே தோன்றிப் படிப்படியாக வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும். மிகப் பழங் காலத்தில் உணர்ச்சி பெற்ற மனிதன் முதலில்

இலைதழைகளாலும், பிறகு தான் உணவிற்காகக் கொன்ற விலங்குகளின் தோல்களாலும் தன் மானத்தைப் பாதுகாத்துக்கொள்ள வழி தேடினன் என்று சரித்திரம் கூறும். அதன் பிறகே மரப் பட்டைகளை உரித்துப் பின்னி ஆடையாக அணிந் தான் என்பர். மரவுரி யாடைகளைத் துறவிகள் உடுத்தி வந்ததாக நூல்கள் கூறுகின்றன.

மனிதன் பருத்தியின் பயனைக்கண்ட பிறகே நெய்தல் தொழில் தொடங்கியது. அவ்வாறு தொடங்கிய தொழிலில் மூதன் முதலில் நம் முன் னோர்களே தலைசிறந்து நின்று பின் வழிவழியாகத் தம் அறிவாலும், ஆற்றலாலும் அத்தொழிலை வளம்பெறச் செய்தனர். பண்டைக் காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் பருத்தியாலும், பட்டா லும், மரநார்களாலும், எலி மயிர் போன்ற உரோமங் களாலும் ஆடைகளை நெய்தனர். அவர்கள் மிக நுண்ணிய இழைகளை நூற்று மெல்லிய ஆடை-கள் நெய்தனர் என்பதையும், தாங்களும் நாகரிக மாக வுடுத்தி எஞ்சியவைகளைப் பிற நாடுகளுக்கும் அனுப்பி வந்தனர் என்பதையும் நமது பழந்தமிழ் நூல்களால் நன்கறியலாம்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஆடைகளைத் தயா ரிப்பதில் நம் நாட்டுப் பண்டை மக்கள் எவ்வளவு பண்பட்ட தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதை நாம் அறியின், இக்காலத்தில் வாழ்கின்ற நமக்கு வியப் பும் திகைப்பும் உண்டாகும். இனி இத்தொழில் முற்காலத்தில் எவ்வாறு நடைபெற்று வந்தது என் பதைத் தெரிந்துகொள்வோம்.

நமது நாட்டில் நீர்வளமற்ற வெப்பமான இடங்களிலும், கரிசல் மண்ணிலும் பருத்தி மிகுதியாகப் பயிராகின்றது. இதற்கு மிகுந்த மழை தேவையில்லை. ஆகவே பருத்தி மிகக் குறைந்த செலவில் பயிர் செய்யப்படுகின்றது. பருத்திச் செடி நன்ருகக் காய்த்து, காய்கள் முற்றி வெடிக்கும் காலங்களில் நம் நாட்டிலுள்ள எளிய பெண் மக்கள் பஞ்சை எடுத்து ஒன்று சேர்ப்பார்கள். இவ்வாறு பல நாளாக ஒன்று சேர்க்கப்பட்ட பஞ்சை அரைமணையில் இட்டு அரைத்துப் பஞ்சையும் கொட்டையையும் வேறு வேருகப் பிரிப்பார்கள்.



பிறகு அப்பஞ்சை வில்லால் கொட்டித் துகளில்லாது போக்கி நூற்பதற்கேற்றவாறு சிறுசிறு திரிகளாகச் செய்வார்கள். இவ்வாறு செய்யப் பெற்ற பஞ்சிற்குக் கோட்டை என்று பெயர். வில்லால் கொட்டப் பட்டதால் அப்பெயர் பெற்றது. பஞ்சின் மெல்லிய பகுதிக்குப் பஞ்சுத்துய், என்றும் பஞ்சுயடர் என்றும் பெயர். பஞ்சுத்துய்யின் பண்புககேற்ப நூல் நயமாயிருக்கும். நூலின் மென்மைக்குத் தக்கபடி ஆடைகள் அழகுடன் விளங்கும்.

அக்காலத்தில் தக்ளியைப் போன்ற கருவிகளாலும் இராட்டினத்தாலும் நூற்று வந்தனர். வீடு

தோறும் இராட்டினம் இருக்கும். இந்நூற்றல் தொழிலைப் பெரும்பாலும் பெண் மக்களே செய்து வந்தனர். கணவனை யிழந்த மகளிரே இத்தொழிலில் பெரிதும் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் தம் வீட்டு வேலைகளை



யெல்லாம் செய்து முடித்தபின் ஒழிந்த நேரங்களில் நூற்று வந்தனர்.

இவ்வாறு நூற்ற நூலைத் தேய்த்துப் பதஞ் செய்து பாவாற்றி என்னும் கருவியால் பசையிட்டு உலரச்செய்து நெசவுக்குக் கொண்டு வருவார்கள். இந்த நூலுக்குப் பாவு என்று பெயர். குறுக்கு நூலுக்கு உண்டை



என்று பெயர். குறுக்கு நூலிடும் கருவிக்கு குழல் எனவும் நூல் நாழிகை எனவும் பெயர். இதனை இக்காலத்தில் நாடா என வழங்குவர். பாவு நூலைத் தறியிலிட்டுநெய்யும் பொழுது இந்தக் குழல் பாவின் குறுக்கே சென்று வரும். அப்பொழுது அதனுள் இருக்கும் நூல் குறுக்கிழையாகப் பாவுடன் இணைந்து கொள்ளும்.



இப்படி நெய்யப்பெற்ற ஆடை நூல் நயத்தாலும் நெருக்கத்தாலும் கண் பார்வை நுழையாதபடி

உறுதியாக விளங்கும். இந்த ஆடைகளுக்குப் பாம்பின் சட்டையையும் மூங்கிலினுள் இருக்கும் வெண்புடையையும் பால் ஆவியையும் பழந்தமிழ்ப் புலவர் உவமை கூறுவர். ஆடைகள் நெசவின் நயத்தாலும் நிறத்தின் வேறுபாட்டாலும் பல பெயர் களால் வழங்கப்பட்டன; நுண்டுகில், பீதகம், பச்சிலை, அரத்தம் முதலாகப் பலவகைப்படும். பீதகம் என் பது பொன்னிற ஆடை. பச்சிலை என்பது பச்சை நிறமுள்ள துகில். அரத்தம் என்பது செந்நிற ஆடையைக் குறிக்கும். ஆடைகளில் பல வடிவங் கள் எழுதுவதும் அக்காலத்திலே இருந்தது. கரை களில் எழுத்துருவங்களும் பூக்களும் வர 'பேட்' தூக்கி நெய்யப்பெற்ற ஆடைகள், கரை வேறு நிறம், உடல் வேறு நிறமாகப் பாவோடி உண்டை மறித்துக் கோத்துவாங்கிய ஆடைகள் முதலியனவும் இருந்தன.

இத்தகைய ஆடைகள் நமது நாட்டில் பல இடங்களிலும் நெய்யப்பட்டு வந்தன. கலிங்க நாட் டில் நெய்யப்பெற்ற ஆடை சிறந்திருந்த காரணத் தால் ஆடைக்குக் கலிங்கம் என்றே பெயர் வழங்கலா யிற்று. தொண்டி என்னும் துறைமுகத்திலிருந்து கலங்களில் ஆடைகள் ஏற்றி அனுப்பப்பட்டதாகச் சிலப்பதிகாரம் கூறும். 'காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிப் பிழைக்கலாம்' என வழங்கும் பழ மொழியிலிருந்து அக்காலத்தில் காஞ்சிபுரத்தில் நெசவுத் தொழில் பெருகியிருந்தது என்பது இனிது விளங்கும்.

இவ்வளவு பெருக்கமாக நடந்துவந்த நெய்தல் தொழில் மேனாடுகளில் பொறிகளைக் கொண்டு நெய்

யப்பெற்ற ஆடைகள் ஏராளமாக நம் நாட்டில் இறக்குமதி செய்யப்பெற்று மிகவும் குறைந்த விலைக்கு விற்கத் தொடங்கிய காரணத்தாலும், அரசியல் குழப்பத்தாலும் நாளடைவில் வரவரக் குறைந்து தாழ்ந்த நிலையடையத் தொடங்கிற்று. அந்நியராட்சியில் நம் நாட்டுக் கைத்தொழில்கள் பலவும் சிதைவுற்றதுபோல இத்தொழிலும் அழிவுற்றது.

இந்நிலையில் மகாத்மா காந்தியடிகள் கதராடை இயக்கத்தை நாடெங்கும் பரப்பினர். எல்லோரும் கையால் நூல் நூற்கவேண்டுமென்று கூறியதுடன் தாமும் ஓய்வு நேரங்களில் நூற்றும் வந்தார். ஆடைகளுக்காகப் பிற நாடுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலை மிகவும் இழிவானது என்று வற்புறுத்தினர். இதனல் ஓரளவு பயனேற்பட்டது. கதரியக்கம் பெருகிற்று. நம்மவர் மறந்த பழந் தொழிலைப் புதிதாகக் கைக்கொள்ளலாயினர். ஆயினும் நாம் கையால் செய்வதைவிட இயந்திரங்களின் துணையால் இத்தொழிலைச் செய்தால் மிகக் குறுகிய காலத்தில் குறைந்த செலவில் மிகுந்த அளவில் ஆடைகளை நெய்துகொள்ளலாம். மக்களுக்கும் குறைந்த விலையில் நயமான ஆடைகள் கிடைக்கும். இயந்திர சாதனங்களால் முன்னேறிய உலகத்தார் முன் நாமும் சமமாக நிற்கமுடியும். துணிப்பஞ்சமும் நம்மைவிட்டு நீங்கும். இக்காரணத்தாலேயே இப்பொழுது நம் நாட்டில் பல இடங்களிலும் நெசவாலைகள் நிறுவப்பட்டு நெசவுத் தொழில் நடைபெற்று வருகின்றது.

சொற்பொருள்:—துகள் - குற்றம், பதம் - பக்குவம், பாவு - நெசவு நூல், உண்டை - குறுக்கு நூல், கலிங்கம் - ஆடை, தொண்டி - சேரர் துறைமுகப் பட்டினம்.

## வினாக்கள்

1. நம்மவர்க்கு வியப்பும் திகைப்பும் உண்டாக்கும் செயல்கள் யாவை?

2. கொட்டை, குழல், பீதகம், அரத்தம் இவற்றை விளக்குக.

3. பலவகைப்பட்ட ஆடைகள் யாவை?

4. காஞ்சிபுரத்தைப்பற்றிய பழமொழி என்ன? அதனால் விளங்குவதென்ன?

## பயிற்சி

ஏற்ற இடங்களில் தகுந்த நிறுத்துக் குறிகளை இடுக:

ஆடையில்லா மனிதன் அரை மனிதன் அணியெல்லாம் ஆடையின் பின் இரக்கப் போனாலும் சிறக்கப் போகவேண்டும் என்பன வெல்லாம் ஆடையைப்பற்றிய பழமொழிகளாம்

## இலக்கணம்

பின் வருவனவற்றுள் இயற் பெயர் இவை, ஆகுபெயர் இவை எனக் கூறுக:

இந்தியா நமது தேசம்.
மகாத்மாவை உலகம் புகழ்கிறது.
என் சட்டையின் நிறம் வெள்ளை.
வண்ணான் வெள்ளை கொணர்ந்தான்.
கார் காலத்தில் மழை பெய்யும்.
கார் விளைந்தது.
எனக்கு, தலை வலிக்கிறது.
தலைக்கு ஐந்து ரூபாய் சம்பளம் கொடுத்தனர்.

## கட்டுரை

நெசவுத் தொழிலின் மேன்மைபற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

## 4. உயிர்களுக்குதவிய உத்தமன்

முன்னொரு காலத்தில் மதுரையை அடுத்துள்ள வயனங்கோடு என்னும் ஊரில் இளம்பூதி என்னும் அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவ்வந்தணன் ஒரு சமயம் தன்னூர்க்கு அணித்தாயுள்ள ஒரு சிற்றூர்க்குச் சென்று, கருதிய செயல் முடிந்த பின் திரும்பி வந்து கொண்டிருந்தான்; வரும் வழியில் மிக்க அழகான பச்சிளங்குழந்தை யொன்றைக் கண்டான்.

அக்குழந்தையைப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு பசுவானது நாவால் நக்கிப் பாலைச் சுரந்து பாதுகாத்துக் கொண்டிருந்தது. குழந்தை தன் வாயில் விழுந்த பாலைப் பருகி மகிழ்ந்திருந்தது. இந்த நிலையில் அக்குழந்தையைக் கண்ட இளம்பூதி, மக்கட் பேறற்ற தன் குறை நீக்கக் கடவுள் அருளால் பெற்றதாகக் கருதி மகிழ்ந்து, அதனை எடுத்துச் சென்று தன் மனைவி கையிற் கொடுத்தான். அவன் மனைவியும் மிக மகிழ்ந்து தன் மகவே போல் சீராட்டிப் பாலூட்டி வளர்க்கலாயினள். இளம்பூதி அக்குழந்தையைப் பசு காத்தமைக்காக ஆபுத்திரன் எனப் பெயரிட்டுத் தன் குலமுறைப்படி நான்மறை ஓதுவித்து வளர்த்து வரலாயினன்.

ஆபுத்திரன் இளமையிலிருந்தே அன்பும் அருளும் நிறைந்த உள்ளமுடையவனாக விளங்கினன். கலைகளை ஐயந் திரிபறக் கற்றான்; கற்றவழியில் நிற்பதே கடனெனக் கொண்டான். அவனது அறிவையும், அன்பு கனிந்த உள்ளத்தையும், அறச் செயல்களையும் அவ்வூரார் போற்றினர்.

இந் நிலையில், அவ்வூர் மறையவர் ஒருங்குகூடி வேள்வி யொன்றைச் செய்ய முனைந்தனர். வேள்விக் கென ஒரு பசுவைக் கொணர்ந்து, வேள்விச் சாலையிற் கட்டி யிருந்தனர். இயல்பாகவே இளகிய வுள்ளமுடைய ஆபுத்திரன் இச்செயலை வெறுத்தான். "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன் றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று" என்ற மறை



மொழியை உணர்ந்தவனாதலின், அவன் அப்பசுவைக் காக்க வுறுதி கொண்டு, ஒருநாள் நள்ளிரவில் அற்றம் பார்த்து அப்பசுவைக் கட்டவிழ்த்து விட்டான். அவ்வமயம் தற்செயலாக அங்கு வந்த வேதியனொருவன், ஆபுத்திரன் செயலைக் கண்டு, கடுஞ் சினங்கொண்டு 'அடா அறிவிலி! என்ன செய்தாய்,'

எனக் கூவினன். அவ்வளவில் மறையவர் பலர் கூடி விட்டனர். ஆபுத்திரன், மறையவர்களை நோக்கி, "ஐயா! நீங்கள் தெய்வ விலங்காகக் கருதி வழிபடும் இதனை, நீங்களே கொல்லத் துணிவது நேர்மையாகு மா? உயிர்க்கொலையால் புண்ணியம் தேட முயல்வது, உங்கள் அறிவிற்கே பொருந்துகின்றதா? மேலும்,

விடுநில மருங்கில் படுபுல் லார்ந்து
பிறந்த நாள் தொட்டுச் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சொ(டு) அருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்ற மென்னை"

எனப்பல கேள்விகளைக் கேட்டான். அந்தணர் அவன் வினாக்களுக்கு நேரில் விடை கூறாது, அவனை வாய்க்கு வந்தவாறு வசைமொழி புகன்று, "வேள் விக்கு ஊறு செய்தாயாதலின் நீ ஆவின் மகனாதலைக் காட்டி விட்டாய்" எனக் கூறித் துரத்தினர். அவ னாற் கட்டவிழ்த்து விடப்பட்ட பசு அவனை மிகத்துன் புறுத்திய வேதியனைக் கொம்பால் குத்திவிட்டுக் காட் டில் ஓடி மறைந்தது.

இளம்பூதியும் ஆபுத்திரனை வீட்டை விட்டுத் துரத்தி விட்டான். ஆபுத்திரன் இருக்க இடமின்றிச் சிலநாள் அலைந்து உணவுக்கு வழியின்றிப் பிச்சை யெடுத்துண்ண முயன்றனன். அதனையும் அவ்வூரார் தடுக்கவே, பசுமகன் வேறுவழியின்றி மதுரைமா நக ரம் போந்து பிச்சை எடுத்து,

"காணார் கேளார் கான்முடம் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்"

யாவரும் வருகவென்று கூவி, அவர்க்கும் உணவ ளித்துத் தானும் உண்டு, அவ்வூர்ச் சிந்தா தேவி

யின் கோவில் மண்டபத்தில் படுத்துறங்கிக் காலங் கழித்து வந்தான். இவ்வாறிருக்கையில் ஒரு நாள் நள்ளிரவில் சிலர் போந்து, ‘கொடும் பசியால் வாடும் எங்கள் கடுந்துயரைப் போக்குவார் யாரும் இல்லையா’ எனக் கதறினர். அது கேட்டுத் துயிலுணர்ந்த ஆபுத்திரன் உளம் நைந்து, கலைமகளை நோக்கி, ‘‘சிந்தாதேவி! இவ்வேளையில் இவர் உற்ற இடுக்கண் களைவாய்’’ என வேண்டினன்.

அவனது அருளுள்ளத்திற் கிரங்கிய கலைமகள் அவன் முன் தோன்றி, ‘‘வருந்தாதே’’! எனக் கூறி எடுக்க எடுக்கக் குறையாது உணவளிக்கும் அமுத சுரபி என்ற அட்சய பாத்திரம் ஒன்றைக் கொடுத்து மறைந்தாள்.

ஆபுத்திரன் மகிழ்ந்து பசித்து வந்தவர் துயரம் போக உணவளித்துப் போக்கிய பின், அன்று முத லாக எல்லோர்க்கும் வரையாது உணவளித்துப் பசிப் பிணி மருத்துவனாக விளங்கினான். அவனிருந்த அம்பலம் இடையறாது உண்ண வருவோர் பேரொலி நிறைந்ததாயிற்று.

இதனைத் தன் பாண்டு கம்பள நடுக்கத்தால் உணர்ந்த இந்திரன், ஆபுத்திரனிடம் போந்து அவன் அறச்செயலுக்கு மகிழ்ந்ததாகக் கூறித் தன் உலகம் வருமாறு வேண்டினன். ஆபுத்திரன் இந் திரனை எள்ளி நகையாடி, ‘‘வருந்தி வந்தவர் அரும் பசி போக்கும் அறச் செயலும், அதனால் அவர் மகிழ்ச்சி கண்டு மகிழும் இன்பமும் நின் நாட்டில் உளவோ? இவையில்லாத நின் நாட்டை நான் விரும் பவில்லை’’ எனக் கூறினான். இந்திரன் சினங் கொண்டு அவன் செருக்கொழியக் கருதி, நாடெங்

கும் மழைவளம் பெருகச் செய்தான். மழை வளம் பெருகவே, மக்கள் வழக்கம் போல் தொழில்களைச் செய்து நல்லுணவு பெற்று இன்புற்று வாழலாயி னர். ஆபுத்திரனிடம் உணவு வேண்டி வருவார் அரு கினர்.

இங்நிலையில் சாவக நாடு பஞ்சத்தால் வாடுவதா கக் கேள்வியுற்று, அந்நாட்டிற்குச் செல்லும் ஒரு கலத்தில் ஏறிப் புறப்பட்டான். இடைவழியில் மணி பல்லவம் என்ற அழகிய தீவினைக் காண விரும்பிச் சிலர் அங்கு இறங்கினர். ஆபுத்திரனும் இறங்கி அத் தீவின் இயற்கை யழகினைக் கண்டு மகிழ்ந்தவனாகத் தனித்து நெடுந்தூரஞ் சென்று விட்டான். சின்னா ழிகையில் இறங்கியவர் யாவரும் கப்பலுக்கு வந்து விட்டனர். ஆபுத்திரனும் அவர்களுடன் வந்திருப் பான் எனக் கருதிய கப்பல் தலைவன் கப்பலைச் செலுத்திக் கொண்டு சென்று விட்டான்.

சிறிது நேரத்தில் கப்பலை நாடிவந்த ஆபுத்தி ரன் அதனைக் காணாது மயங்கி, 'ஐயோ! என் செய் வேன்? பல உயிர்களுக்குப் பயன்படவல்ல இப்பெ ருஞ் செல்வத்தை நான் மட்டும் நுகர்ந்து இத்தீவில் வாழ்வதால் என்ன பயன்? எனது புன் செயலுக்கு ஏற்ற தண்டனை பட்டினி கிடந்து உயிர்விடுவதே யாகும்' எனத்துணிந்து, 'என்போன்ற அறச்சிந்தை யுடையார் கையிற் புகுக' எனக் கூறி, அமுத சுர பியை அத்தீவில் இருந்த கோமுகி என்னும் பொழு கீரிலஞ்சியில் விட்டுவிட்டு, உண்ணா நோன்புகொண்டு உயிர்துறந்தான்; உயிர் துறக்கும் பொழுது அவன் கொண்ட நினைப்பின்படி சாவக நாட்டின் இறைவன் மகனாகப் பிறந்தான். அவன் தோன்றியதும், சாவக நாடு மழை வளம் சுரந்து செழிப்புற்றது.

சொற்பொருள்:— மகவு-குழந்தை, ஐயம்-சந்தேகம், திரிபு-மாறுபாடு, அற-இல்லாமல், செகுத்து-கொன்று, அற்றம் பார்த்து-சமயம் பார்த்து, செற்றம்-கடுஞ்சினம், வறங்கூராது-பஞ்சம் மிகாது, இலஞ்சி-தடாகம்.

## வினாக்கள்

1. ஆபுத்திரன் தன்னைத் துன்புறுத்திய மறையவர்களை நோக்கி வினவுவன யாவை?

2. இந்திரன் அழைத்தபொழுது ஆபுத்திரன் கூறிய விடை என்ன?

3. ஆபுத்திரன்மேற் சினம்கொண்ட இந்திரன் செய்த செயல் என்ன?

4. ஆபுத்திரனது தியாகச்செயலை விளக்குக.

## பயிற்சி

பின்வருவனவற்றிலுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி வரைக:

வாளைப்பளம் தின்ரான். இறவில் நெடுநேறம் விளிக்கக் கூடாது. பாடங்கலை நன்ருகக் கற்றுக் கொல்.

## இலக்கணம்

ஆகுபெயர்களைக் கூறி இன்ன ஆகுபெயர் என்றும் கூறுக:

ஆபுத்திரனை அவ்வூர் முழுதும் புகழ்ந்தது.
சுவரில் வெள்ளை யடித்தான்.
கடவுள் வாழ்த்துப் படி.

## கட்டுரை

நீ படித்த கதையொன்றை வரைக.

## 5. எழுவரை வென்ற ஏந்தல்

பிள்ளைகளே! முற்காலத்தில் நமது தமிழ் நாடானது மூன்று பெரும் பிரிவுகளையுடையதாயிருந்தது என்றும், அவை சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு எனவும் தெரிந்துகொண்டீர்கள். சேரநாடு என்பது கருவூர்ப் பிரதேசமும், கோயமுத்தூர், சேலம், நீலகிரி ஜில்லாக்களும், மைசூர் நாட்டின் தென் பகுதியும், மேற்கடற் பிரதேசமும் சேர்ந்த நிலப் பரப்பாகும். இதற்குத் தலைநகர் வஞ்சி மாநகர் என்பது. சோழ நாடென்பது கிழக்குக் கடற்கரைப் பிரதேசமும், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களும் சேர்ந்த பகுதியாகும். இதன் தலைநகரங்கள் உறையூர், புகார் என்பனவாம். பாண்டிய நாடாவது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களும் அவற்றைச் சார்ந்த கடற்கரைப் பிரதேசமும் சேர்ந்த பூபாகமாகும். இந்நாட்டின் தலைநகரங்கள் தென் மதுரை, கபாடபுரம், மதுரை என்பன. இந்த மூன்று நாடுகளையும் ஆண்டவர்கள் சேர சோழ பாண்டியர் ஆவர். இவர்கள் முடியுடை மூவேந்தர் எனவும் வழங்கப் பெற்றனர்.

இம் மூவேந்தர்களும் சில காலம் ஒற்றுமையோடும் சில காலம் பகைமை கொண்டும் இருந்து வந்தனர். வன்மை பெற்ற அரசன் ஏனையோரை வென்று, தனக்கு அடங்கச் செய்தல் வழக்கமாயிருந்தது. என்றாலும், இம் மூன்று நாடுகளும் சேர்ந்து தமிழ்நாடு, தமிழகம் எனும் பெயர் பெற்றன. தமிழ் மொழியே இந் நாடுகளில் பேசப்பட்டு வந்தது. இதனால் அரசர் தமிழரசர் எனப்பட்டனர்; குடிகள் தமிழர் எனப்பட்டனர்.

இம்மூன்று நாடுகளிலும் பாண்டிய நாடே பழம் பகுதியாகும். மூவேந்தரும் தமிழை வளர்த்தார்களாயினும் பைந்தமிழைப் போற்றி வளர்த்த பெருமை சிறப்பாகப் பாண்டியர்களுக்கே யுரியதாகும். அவர்களே மூச்சங்கங்களையும் போற்றி வளர்த்தவர்; அவருள் கவியரங் கேறினரும் உளர். இத்தகைய பாண்டியருள் நெடுஞ்செழியன் என்பவன் சற்றேறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் பாண்டியநாட்டை ஆண்டு வந்தான். அதே காலத்தில் சேரநாட்டுப் பெரும் பகுதியைச் சேர வேந்தனும், சிறுபகுதியை யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பவனும் ஆண்டு வந்தனர். சோணாட்டை இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவன் ஆண்டுவந்தான்.

பாண்டியன் நெடுஞ்செழியன் பரந்த நோக்கமும் விரிந்த சிந்தையும் உடையவன்; அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்டகை; குடிகளைத் தன்னுயிர் போல் எண்ணும் தண்ணளியுடையான்; தமிழ் மொழியினிடத்தும், தண்டமிழ்ப் புலவரிடத்தும் குறையாப் பற்றுடையான்; தன்னை நாடி வருவோர்க் கெல்லாம் நயந்தே யளிக்கும் நாகரிகன்.

இத்தகைய மேம்பாடுடைய வழுதியர் கோனைத் தமிழ்நாட்டு மக்களே யன்றி ஏனைய நாட்டு மக்களும் புகழ்ந்தனர். புலவர், பாணர், கூத்தர் முதலியோர் அவனது ஒப்பற்ற கொடைப் பெருமையையும், கோதற்ற புகழையும் நாடெங்கும் பரப்பினர். பாண்டியனது புகழ் தமிழகமெங்கும் பரவியது. மக்கள் யாவரும் கொண்டாடினர்.

செழியனது புகழ், சேர சோழ மன்னரைப் பொறாமைச் சேற்றில் ஆழ்த்தியது. அதனால் அவ் விருவரும் அவனுடன் பொருதற்கெண்ணினர்; எனினும் மாபெரு வீரனான பாண்டியனை எதிர்க்க மனம் மறுகினர்.

பாண்டியனது சிறப்பியல்புகளை உணராத சேர நாட்டுச் சிறு பகுதியை ஆண்டு வந்த இரும்பொறை தன் சேனையோடு சென்று பாண்டியனை எதிர்த்தான். பாவம்! பொறாமை அவனைப் பிடர் பிடித்துந்த அவன் பாண்டியனை எதிர்த்ததில் வியப்பில்லை. 'தன் வினை தன்னைச் சுடும்' என்றபடி, அவன் பாண்டியனால் தோற்கடிக்கப்பட்டுத் தன் பெருமையை இழந்தான். நற்குணக்குன்றாகிய அந் நெடுஞ்செழியன் அவனுக்கு நல்லறிவு புகட்டி விடுத்தனன்.

தனது தோழனது தோல்வியை யுணர்ந்த சேரன், சீற்றம் மிக்கவனாய், சோழனையும் சிற்றரசர் ஐவரையும் தனக்குத் துணையாகக் கொண்டு பாண்டியனோடு பொருதற்கெழுந்தனன். சேர சோழரும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற ஐம்பெரு வேளிரும் தத்தம் படைகளுடன் தன்னை எதிர்க்க வருவதைப் பாண்டியன் தன் ஒற்றரால் உணர்ந்தான். ஒரு புறம் சீற்றமும் ஒரு புறம் வருத்தமும் கொண்டான்; அவர்கள் தன்னை இழித்துரையாடியதையும் செவியுற்றான். கோபத்தால் அவனுடல் துடித்தது; இரு கண்களும் கோவை போற் சிவந்தன.

அரசிருக்கை மண்டபத்தில் அமைச்சர் குழாம் சூழ அரியணையில் வீற்றிருந்த வேம்பலர்தாரான்,

"ஆ! என்ன விந்தை! சேரனுஞ் சோழனும் சிற்றரசர் ஐவரும் என்மீது போருக்கு வருகின்றனராம்! இவர்கள் என் வாள் வலியும் தோள் வலியும் படை வலியும் மறந்தனர் போலும்; ஏதும் அறியாதாரைப் போல் இவ்வாறு போருக்கு வருவதை எண்ண எண்ண எனக்கு நகைப்புண்டாகின்றது.

இவர்கள் என்னைச் சிறியவன் எனவும், சிறு படையுடையான் எனவும் இகழ்ந்துரையாடித் தமது படை வலிமையைப் புகழ்ந்து பெருமிதங் கொள்வது வியப்பே! இவர்கள் ஒன்று கூடி வந்தால், என்னை எளிதில் வென்று விடலாம் என்று எண்ணினார்கள் போலும். இவர்கள் மட்டுமின்றி, இத்தமிழகமே ஒருங்கு திரண்டு வரினும், பாண்டியன் நெடுஞ்செழியன் அஞ்சுபவன் அல்லன். இவர்களைப் போரில் புறங்கண்டு வெற்றி கொள்ளாவிடின், 'குடிகளை வருத்துங் கோலோன் ஆகுக' என்றும் 'மாங்குடி மருதனார் போன்ற புலவர்களால் என்நாடு பாடப் படாது போவதாக' என்றும் வஞ்சினங் கூறிப் போருக்குப் புறப்பட்டான்.

மதுரைக்கு அருகில் இரு திறப்படைகளும் ஒன்றையொன்று எதிர்த்தன. கரியொடு எதிர்த்துக் கரி கலக்கியது; பரியொடு பரிபாய்ந்து தாக்கியது. தேரொடு தேர் சென்று முட்டியது. வீரரொடு வீரர் முனைந்து பொருதனர். சிறிது பொழுதில் எங்கும் பிணங்கள் குவிந்தன. செந்நீர் வெள்ளம் பிணங்களினூடே புரண்டோடியது. காண்போரைத் துணுக்குறச் செய்யும் அப்போர் மாபெரும் போரேயாகும்.

பாண்டியனது படை வலியைக் கண்ட பகைவர் அஞ்சிப் புறங் கொடுத்தனர். தமது அறியாமைக்கு வருந்தினர். செழியன் சேனை சீற்றங் கொண்டு அவர்களைத் துரத்திக் கொண்டு சென்றது. முடிவில் பாண்டியன் அவர்களைத் தலையாலங்கானம் என்னும் இடத்தில் சுற்றி வளைத்துக் கொண்டான். அவர்களும் இனி ஓடித்தப்ப வழியில்லை என்பதையுணர்ந்து ஆவேசத்துடன் எதிர்த்தனர். மீண்டும் கடும் போர் நடந்தது. குருதி ஆறாக ஓடியது. பிணங்கள் மலைபோற் குவிந்தன. நெடுஞ்செழியன் இளமை கண்டு எள்ளிநகையாடிய வாய்கள் அவனது போர்த்திறம் கண்டு வியந்தன. அறியாமையால் அவதியைத் தேடிக்கொண்டமைக்கு வருந்தினர். தலைவர்கள் அவ்விடத்திலேயே மாண்டனர். சேனையுட் பெரும் பகுதி அழிந்தது. எஞ்சிய சிலர் துறவிகளாகவும், குறிசொல்வோராகவும், மற்றும் பலவாறாகவும் வேடம் புனைந்து ஓடி ஒளிந்தனர்.

பாண்டியர் பெருமானாகிய இவ்விளங்கோ தனியனாய்த் தலையாலங்கானத்தில் எழுவர் அரசரை முற்றிலும் முறியடித்த இம்மாபெரும் போரை இம்மாநிலம் என்றும் மறவாது. அவன் தனியனாயிருந்து வெற்றி கொண்டமைக்குக் காரணங்கள், அவன் மக்கள் பாற் காட்டிய பேரன்பும், அவனது குன்றாவொழுக்கமும் நீதி நெறியுமேயாம். இவ்வெற்றிச் சிறப்பால் பாண்டியன், தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றுச் சிறக்க வாழ்ந்திருந்தான்.

சொற்பொருள்:— ஏந்தல் - தலைவன், இராஜசூயம் - ஒருவகை யாகம், ஆண்டகை-ஆண்மை யுடையவன்,

அளி - கருணை, வழுதி-பாண்டியன், ஒற்றர் - வேவுகாரர், சீற்றம் - கோபம், தார் - மாலை, பெருமிதம்-பெருமை, கரி - யானை, செந் நீர்-இரத்தம், மாநி லம்-உலகம்.

## வினாக்கள்

1. பாண்டிய நாட்டின் தலைநகரங்கள் யாவை?
2. நெடுஞ் செழியனது குணங்களை விளக்குக.
3. நெடுஞ் செழியன் கூறிய வஞ்சினம் யாது?
4. நெடுஞ்செழியனை எதிர்த்த எழுவர் யாவர்?
5. போர் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுக.

## பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைத் திருத்தமாக எழுதுக:

1. மரங்கள் சிறிதாய் இருந்தன.
2. எனக்கு அவை தெரியாது.
3. அவைகள் நல்லதில்லை.
4. பல மக்கள் கூடினர்.

## இலக்கணம்

பின் வரும் வாக்கியங்களில் வினையாலணையும் பெயர் களைக் கூறுக:

நேற்றுப் பேசியவர் இவர்.
கற்றது கைம்மண்ணளவு.
நேற்றுப் போனவன் இன்னும் வரவில்லை.
நீ பாடியதைக் கேட்டேன்.
கற்றாரை உலகம் போற்றும்.
ஈன்றாளை வணங்கு.

## கட்டுரை

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றிக் கட்டுரை வரைக.

## 6. மீகாமன் ஜேம்ஸ் குக்

'செயற்கரிய செய்வார் பெரியர்' என்பது மெய்ம்மொழி. இதற்கு எடுத்துக் காட்டாக, மக்கள் இந் நிலவுலகின் முழு நிலப் பரப்பையும் அறியாதிருந்த காலத்து, அறிவும் ஆண்மையும் உடையோர் சிலர் தமது தளரா முயற்சியால் பல நிலப் பரப்புக்களையுங் கண்டறிந்து, மற்றை உலக மக்கள் எல்லோரும் அந் நாடுகளோடும் தொடர்புகொண்டு பயனடையுமாறு உதவினர். இத்தகுதியுடையோர், தாம் நாடு காணப் புகுந்த விடத்துத் தமக்கு நேர்ந்த இன்னல்கள் பலவற்றையும் பொருட்படுத்தாது வெற்றி கண்ட வரலாறுகள் பலவுள. அவை மாணவர்களுக்குப் படித்தற்கு விருப்பத்தைக் கொடுத்து, முயற்சி, இடுக்கணழியாமை, தலைமைப்பாடெய்தல் போன்ற சிறந்த பண்புகளையுங் கொடுக்குமாதலின், அத்தகைய பெரியார்களில்ஒருவராகிய மீகாமன் குக் என்பவரின் வரலாற்றை யீண்டுச் சுருக்கமாகக் கூறுவோம்.



ஜேம்ஸ்குக் என்பவர், 1728-ம் ஆண்டு நவம்பரில் கிளீவ்லாந்திலுள்ள மார்ட்டன் என்னும் ஊரில் பிறந்தவர். அவரது தந்தை

கழனிகளில் கூலிவேலை செய்பவர். அதனால் குக் தமது இளமைப் பருவத்திலேயே ஊதியந்தேட நேர்ந்தது. இடையில் சில காலம் கிராமப் பள்ளியில் சேர்ந்து கற்றார்.

இவர் தமது பதினேழாம் வயதில், பலசரக்குக் கடையொன்றில் வேலைக்கு அமர்ந்தார். ஆனால் அவ் வேலையில் அவருக்கு விருப்பம் எழவில்லை. சரக்கு வாங்க வரும் கப்பலோட்டிகள் கூறும் கடற் செலவின் பெருமையையும் அவர் சென்ற நாடுகளின் வரலாறுகளையும் கேட்குந்தோறும் அவருக்குக் கப்பலில் பணியாற்ற வேண்டுமென்றும், அந்நாடுகளைக் காணவேண்டுமென்றும் தோன்றும்.

சின்னாட்களில் பலசரக்குக் கடையினின்றும் விலகி, ஒருநிலக்கரிப் படகு முதலாளியிடம் வேலைக்கு அமர்ந்தார். ஏழாண்டு வரை வேலை செய்து மாலுமியாயினர்.

1755-ல் நடந்த போரில் அவர் கடற் படையிற் சேர்ந்து, 'கழுகு' என்னும் போர்க் கப்பலில் உதவித் தலைவராக அமர்ந்தார். இவரது திறமையை உணர்ந்த அரசியலார் 'மெர்க்குரி' என்னும் போர்க் கப்பலின் தலைமைப் பதவியை இவருககு அளித்துச் சிறப்புச்செய்தனர். இவர் அப்பதவியுடன் அமைதியுறாது, மேலும் மேலும் உயர்வடைய விரும்பி, தமது ஓய்வுக் காலங்களிலெல்லாம் கணிதம், வான நூல், கடல் நூல், நிலக் கணிதம் முதலியவைகளைப் பயின்றார். இவர் திறனைக் கண்ட அரசியலார் இவருக்கு 'லெப்டினன்ட்' பதவியைஅளித்தனர். 1762-ம் ஆண்டில் 'மிஸ். பாட்ஸ்' என்னும் பெண்மணியை

மணந்தார். இவருக்கு ஆறு குழந்தைகள் பிறந்தன.

லண்டன் ராயல்கழகத்தார் நிலத்துக்கும் கதிரவனுக்கும் இடையில் வெள்ளிக்கோள் கடந்து செல்லும் வான் நிகழ்ச்சியைக் காணவிரும்பினர்; அது நிகழும் காலமாகிய 1769-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அதைக் காணுதற்கேற்ற தென்பசிபிக் தீவுகளில் ஒன்றிற்குச் சென்று குறிப்பெடுக்கத் தக்கார் ஒருவரை அனுப்புதல் வேண்டுமென்று அரசியலாரை வேண்டினர்.

அரசியலார் அதற்கிணங்கி, வான் நிகழ்ச்சியைக் கண்டு, குறிப்பெடுப்பதுடன், வழியில் காணப்படும் புதிய நாடுகளையும் ஆங்கில ஆட்சியுடன் இணைக்கலாம் என்னும் ஆவலுடன், இவ்விரு பணிகளையும் செவ்வனே நிறைவேற்ற வல்லார், ஜேம்ஸ் குக் ஒருவரே எனத் துணிந்து, அவரைக் கடற்செலவுக்கு முயற்சியோடிருக்குமாறு பணித்தனர்.

அதற்கிசைந்த ஜேம்ஸ் குக், அரசாங்க ஆதரவுடன் தக்க துணைவர் 80 பேரை அழைத்துக் கொண்டு 1768-ல் 'எண்டவர்' என்னும் கப்பலில் சென்றார். கப்பல் தெற்கு நோக்கிச் சென்று, இடையில் பல தீவுகளைக் கடந்து, ரியோடேஜினிரோ போய்த் தங்கிப்பின் புறப்பட்டு டாஹிட்டித் தீவிலுள்ள மாடாவைக் குடாவில் தங்கியது. அத் தீவில் தான் வெள்ளியின் போக்கு நன்றாய்த் தெரியும்.

அத் தீவின் தலைவன் குக் குழுவினருடன் நட்புப் பூண்டு, அவர்கள் தமது வான ஆராய்ச்சிக்குரிய கருவிகளைத் தன் தீவில் அமைத்துக்கொள்ள உரிமை யளித்தான். அங்கு மூன்று மாதங்கள் தங்கி

ஆராய்ச்சி செய்தனர். குறிப்பிட்ட நாள் வந்ததும், வான் வெளி முழுவதும் ஒளியுடன் விளங்கியது. காலை 9-மணி, 25-நிமிடம், 12-விநாடிக்குக் கதிரவனின் ஓரத்தில் ஒரு சிறு துளி போல் வெள்ளிக் கோள் காணப்பட்டது. 18-நிமிடம், 12-விநாடிக்குப் பின் அக் கோள் முழுவதும் கதிரவனுடைய விளிம்புக்குள் வந்துற்றது.

கதிரவனை முற்றிலும் தாண்டிச் செல்ல அக் கோளுக்கு ஆறு மணி நேரத்திற் கதிகமாயிற்று. குக் கூட்டத்தார் இக் கணக்குகளைக் குறித்துக் கொண்டனர். இவ்வாறு இவர்கள் தொடங்கிய பயணம் பயன் பெற்றது. பின் இவர்கள் புறப்பட்டு நியூஸிலாந்து வடகிழக்குக் கரையை யடைந்து அங்கு ஆறு திங்கள் தங்கினர். அத் தீவின் ஒரு பகுதியில் வாழும் மக்கள், மக்களை உண்ணும் இனத்தினர். அவர்கள் இறந்தவர்களது உடலை உண்டனர். அதைக் கண்ட குக் குழுவினர் மிகுதியும் அஞ்சினர்.

1770-ம் ஆண்டு அங்கிருந்து புறப்பட்டு ஆஸ்திரேலியாவை நோக்கிச் சென்றனர். ‘கங்காரு’ என்ற விந்தை விலங்கை முதலில் அறிந்த வெள்ளையர் குக் குழுவினரே. இடையில் உள்ள தீவுகளில் வாழ்ந்த மக்களிற் சிலர் ஆடை யின்றியுங் காணப்பட்டனர். அக் காலங்களில் கப்பலுக்கு நேர்ந்த இன்னல்கள் பல. அவற்றை யெல்லாம் தாங்கிக் கொண்டு நன்னம்பிக்கை முனை வழியாகச் சென்று இங்கிலாந்தை அடைந்தனர். இவ்வாறு வெற்றியுடன் மீண்ட குக்கின் திறனையும் தொண்டினையும் பாராட்டி,

ஆங்கில அரசியலார் அவருக்கு 'கமாண்டர்' என்னும் உயர் பதவியை யளித்தனர்.

தென் பஸிபிக் கடலில் உள்ள பல தீவுகளை நோக்க, அக்கடலின் தெற்கே ஒரு பெரு நிலப்பரப்பு இருந்தாக வேண்டும் என்று அறிஞர் பலர் பிடிவாதமாக நம்பியதால், இரண்டாம் முறையும் கடற் செலவு ஒன்றைக் குக் கைக்கொள்ள வேண்டுமென்றும் அரசியலார் விரும்பினர். அவ்வண்ணமே குக் தமது அனுபவத்தை யொட்டி வேண்டியவைகளைத் தயாரித்துக்கொண்டு 1772-ல் கடற்செலவைத் துவக்கினர்.

வழக்கம்போல மடேய்ரா தீவு, நன்னம்பிக்கை முனை முதலியவைகளை யெல்லாங் கடந்து சென்று டஹிட்டித் தீவையடைந்து பழைய நண்பர்களைக் கண்டனர்; இனிது வரவேற்கப்பட்டனர். அங்குச் சில நாள் இருந்து புறப்பட்டுப் பல நாட்கள் தொடர்ந்து பயணஞ் செய்து மீண்டும் தென் துருவப் பகுதியை யடைந்தனர். பார்க்குமிடமெல்லாம் பனிக் கட்டி வயலாகக் காட்சியளித்தன.

இவ்விரண்டாம் கடற்செலவில் குக் நியூஸிலாந்துக் கடுத்த நியூகலடோனியாவைக் கண்டார். தென் துருவ எல்லை, மற்றும் பல தீவுகள் இவைகளை ஆராய்ந்து குறிப்பெடுத்தார். இவ்வாறு வெற்றியுடன் மீண்ட குக்குக்கு 'காப்டன்' பதவி அளிக்கப்பட்டது. மீண்டும் பஸிபிக் மாகடலிலிருந்து அட்லாண்டிக்மா கடலுக்குப் போக வடகடற் குறுக்குப்பாதை காணும் முயற்சியில் அரசியலார் மூன்றாம் முறையாக காப்டன் குக்கை அனுப்பினர்.

86 நாட்களில் பல தீவுகளையும் கண்டு, அமெரிக்காவின் கரையோரமாகவே வடக்கே சென்றார். அங்கு போகப்போக அடிவானம் வெள்ளைவெளேரென்றிருந்தது. கடலோ பனிக்கட்டி வயலாகக் காட்சியளித்தது. ஆகவே, மேலே போக இயலாது, வடக்கே பனி மண்டலத் துருவக்கடல் தவிர, அட்லாண்டிக் கடலையும் பஸிபிக் கடலையும் இணைக்கும் வடகடற்பாதை எதுவும் இல்லை என்ற திட்டமான முடிவுடன் காப்டன் குக் திரும்பினார்.

இக் கடற் செலவினின்று இவர் தம் தாய் நாடு திரும்புங்கால், வழியில் ஹவாயீ தீவில் தங்கிய போது, ஆங்குள்ள மக்கள் இவரோடுயுத்தம் புரிந்தனர். இவர் சிலரைச்சுட்டுக் கொன்றார். அவர்களில் சிலர் இவரைப் பின்னிருந்து ஈட்டியால் குத்திக் கொன்று, துண்டு துண்டாக வெட்டித் தின்றுவிட்டார்கள்.

கப்பல்கள் 1780-ம் ஆண்டில் இங்கிலாந்து வந்து சேர்ந்த பிறகே இவர் கொலையுண்ட விவரம் ஆங்கில அரசருக்கும் பிறர்க்கும் தெரிந்தது. தொலைவிலுள்ள பல நாடுகளையும் சேர்த்து, தமது நாட்டவர் ஆட்சி, பேரும் புகழும் அடையுமாறு செய்த காப்டன் குக்கின் அரிய தொண்டுகளைப் பாராட்டி நன்றி செலுத்தும் வகையில், கணவனை இழந்த இவர் மனைவியாருக்கு ஆண்டொன்றுக்கு 200 பவுன்களும், புதல்வர் ஒவ்வொருவருக்கும் 25 பவுன்களும் உதவிச் சம்பளமாக அரசர் அளித்தார்.

சொற்பொருள்:— **இன்னல்-துன்பம், மீகாமன்-கப்பல் தலைவன், கழனி-வயல், இடுக்கண் அழியாமை-துன்பம் கண்டு கலங்காமை, பணியாற்ற-வேலை செய்ய, கதிரவன்-சூரியன்.**

## வினாக்கள்

1. இத்தகைய வரலாறுகளை அறிவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

2. கேப்டன் குக்கை முதலில் அரசியலார் கடற் செலவிற்குப் பணித்த காரணங்கள் யாவை?

3. குக்கின் முதல் கடற் செலவு எவ்வாறு முடிந்தது?

4. மூன்றாவது கடற் செலவின் நோக்கமென்ன?

5. 3-வது கடற்செலவின் முடிவு என்ன ஆயிற்று?

## பயிற்சி

பின் வரும் வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்தி வரைக:

1. ஒவ்வொரு மாணவர்களும் இதைச் செய்ய வேண்டும்.

2. அங்கே செடிகள் நன்றாய் வளராது.

3. நீ தேர்ச்சி யடையாததன் காரணம் நன்றாகப் படிக்காததனாலேதான்.

4. குக்கையும் துணைவர்களையும் வரவேற்கப்பட்டனர்.

## இலக்கணம்

பின் வரும் பெயர்களை இயற் பெயர்களாகவும், ஆகு பெயர்களாகவும் வைத்து வாக்கியம் அமைக்க:

ஊர், நாடு, தலை, வெள்ளை, கோடை, நீலம், செவிடு, வாழ்த்து.

## கட்டுரை

நீ இமயமலைச் சிகரத்தைக் காணச் செல்வதாக ஒரு கட்டுரை வரைக.

# 7. கடலாராய்ச்சி

உலகில் கல்வியறிவு பெருகப் பெருக ஆராய்ச்சிகளும் பெருகி வருகின்றன. வானை ஆராய்ச்சி செய்து சந்திரனைப் பற்றியும், சூரியனைப் பற்றியும், கோள்களைப் பற்றியும், விண்மீன்களைப் பற்றியும் அறிந்த உண்மைகளை அறிஞர்கள் உலகத்தார்க்கு அளித்து வருகின்றனர். நிலநூல் ஆராய்ச்சியாளரும், நிலத்தைத் தோண்டிப்பூமியின் கீழ் உள்ள சுரங்கம் முதலியவற்றை ஆராய்கின்றனர். எண்ணெய்ப் பொருள்களையும், உலோகப் பொருள்களையும் கண்டுபிடித்துப் பயன் அடைவதுடன், வெளியிட்டும் வருகின்றனர். மண்ணில் மறைந்து பாழ்பட்ட நகரங்களையும், கட்டடங்களையும், மக்களால் அனுபவிக்கப்பட்ட பழங்காலப் பொருள்களையும் கண்டுபிடித்து ஆராய்ச்சி செய்கின்றனர். இவ்வாறே கடலாராய்ச்சியும் நிகழ்த்திப் பல பொருள்களைக் கண்டறிந்திருக்கின்றனர். அவைகளைப்பற்றி இங்கு ஒரு சிறிது எடுத்துக் கூறுவோம்.

நமது முன்னோர்கள் நெடுங்காலமாகக் கடலை ஆராய்ந்து கண்டறிந்த செல்வங்கள் முத்து, பவளம், சங்கு, சாளக்கிராமம் முதலியனவாகும். இவை தவிர, சென்ற நூற்றாண்டில் தீவிரமான கடல் ஆராய்ச்சி துவக்கப்பட்டுப் பல அரிய விஷயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. கடலாராய்ச்சியில் அடங்குவன, கடல் நீரின் பௌதிக ரசாயன அமைப்புகளும், கடலின் நில அமைப்பும், வரலாறும், நீரின் இயக்கங்களும், கடலில் வாழும் உயிர்களும் அவற்றின் வரலாறுகளும் ஆகும்.

விஞ்ஞானத்தின் தந்தை என்று கூறப்படும் கிரேக்க தேசத்து அறிவாளியாகிய அரிஸ்டாடில் என்பவர் முதன் முதலில் கடலில் வாழும் உயிர்களைப் பற்றி ஆராய்ந்து 180 உயிர்களைக் கண்டு பிடித்தார். மேலும், அவர், கடல்நீர், மேல் மட்டத்தில் அதிக உப்பாகவும் உஷ்ணமாகவும் இருக்கிறதென்றும், கீழ் மட்டத்தில் உப்புக் குறைவாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கிறதென்றும் கண்டார். கடல்நீர் இராக் காலங்களில் ஒளிரும் தன்மையுடையதென்றும் கண்டு பிடிக்கப்பட்டது.



1860-ல் 7500 அடிக்குக் கீழ் இருந்த கடல் தந்திக் கம்பியைச் செப்பனிட மேலே எடுத்த பொழுது அதில் ஒரு நக்ஷத்திர மீன் அகப்பட்டது. அதே சமயத்தில் மற்றோரிடத்தில் மற்றொரு தந்திக்

கம்பியில் அதே ஆழத்தில் பல உயிரினங்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. 6000 அடிக்குக் கீழ் பல முறை கடலின் தரை வெட்டி எடுத்துக் கொண்டு வரப்பட்டது. இதன் கண்ணும் ஏராளமான உயிரினங்கள் காணப்பட்டன; இவை மிகப் பழங்கால உயிர்களாகக் காணப்பட்டன. இவற்ருல் ஆராய்ச்சியில் மேலும் மேலும் ஆர்வம் மிகுந்தது. இங்கிலாந்து அரசாங்கம் 1872-ல், ஒரு மிகப் பெரிய ஆராய்ச்சிப்படையை 'சேலஞ்சர்' என்ற கப்பலில் அனுப்பியது. இக்கப்பல் 69000 மைல்கள் பிரயாணம் செய்தது; பின்னும் அட்லாண்டிக், பசிபிக், இந்துமகாசமுத்திரம் முதலிய இடங்களுக்கும் சென்றது. இவ்வாராய்ச்சி தான், தற்கால கடல் விஞ்ஞானத்திற்கு அடி கோலியது.

இவ்வாராய்ச்சிகளின் பயனுகக் கடல் தாவரங்கள், வாணிப சம்பந்தமாக மிக முக்கியமானவை என்று அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டன. இத்தாவரங்களில் கடற் செடி வகை ஒன்று. பழுப்பு நிறக் கடற்செடிகளும் பச்சை நிறக் கடற்செடிகளும் மிக உபயோகமானவை. இவற்றிலிருந்து பல முக்கியமான பொருள்களைத் தயாரிக்கிருர்கள். இவற்றிலிருந்து தீயினுல் எரியாத ஆடைகளும், காகிதங்களும், சிமெண்டும், பசையும், சோப்பு, பவுடர், பிளாஸ்டிக்ஸ் முதலியவையும் செய்யப்படுகின்றன. இவைகளிலிருந்து தயாரிக்கப்படும் ஆடை பளபளப்பாகப் பட்டுப் போல மிருதுவாகவும், இது வரையிலும் நாம் பார்த்திராத அளவு மெல்லியதாகவும் இருக்கிறது. கடற் செடிகளிலிருந்து ஆல்ஜினிக் ஆசிட் என்னும் ரஸாயனப் பொருள் கிடைக்கிறது.

இதை உலோக உப்புக்களுடன் சேர்த்து நூலிழைகளைப் போலச் செய்ய முடியும். இவற்றைத் துணிகளாக நெய்கிறார்கள். இத்துணி தண்ணீரா லும் தீயினாலும் பாதிக்கப்படாது. இது மிகவும் உறுதியானது. இச்செடிகளிலிருந்து இப்போது பல உப்புக்களையும், ரஸாயனப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும் செய்கிறார்கள். இதனை வயல்களுக்கு உரமாகவும், கால் நடைகளுக்குத் தீவனமாகவும் உபயோகிக்கலாம்.

போருக்கு முன்பு ஜப்பான், கடற்செடிகளைத் தொழிற்சாலைகளில் பல பொருள்களாக மாற்றி யதை அறிந்து, இங்கிலாந்து இப்போது இத் தொழிலை அதி தீவிரமாக நடத்தி வருகின்றது. இதிலிருந்து ரப்பர், தோல், கூரைத் தகடுகள், பாய் கள், ஆடைகள், உணவு முதலிய பல பொருள்கள் நூற்றுக்கு அதிகமாகத் தயாரிக்கப்படுகின்றன.

சமீப காலத்தில், கடலாராய்ச்சியில் கடல் நீர் இயக்கத்தைப் பற்றிய பகுதி மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. இதில் ஜெர்மனியும் நார்வே யும் தான் முதலில் பிறருக்கு வழிகாட்டின. கடலின் கீழ் பூமியின் அமைப்பு எப்படி இருக் கிறது என்பதைப்பற்றி நமக்கு அதிகம் தெரியாது. இதனை ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து வருகிறார்கள். இது பூமியின் பரப்பில் முக்கால் பங்காகும். இதை அறிவது பூமியின் வரலாற்றை அறிவதற்குத் துணை செய்யும். இதனால் பூமியின் எதிர்கால நிலையைப் பற்றியும் யூகித்தறிய முடியும். ஏனைய நாட்டார் போலவே நமது நாட்டாரும் கடலாராய்ச்சியில் ஈடுபட்டு வருந்தி உழைக்க முன்வருவாராயின், நமது நாடும் முன்னேற்ற மடையும்; நற்பயனடையும்.

சொற்பொருள்:— பௌதிகம்-உலக இயற்கை நூல், ரசாயனம்-பொருள் மாற்ற நூல், தாவரம்-மரம் செடி கொடி முதலியன, வரலாறு-சரித்திரம்.

## வினாக்கள்

1. நம் முன்னோர் கடலையாராய்ந்து கண்டறிந்த செல்வங்கள் யாவை ?

2. கடலாராய்ச்சியில் எவ்வெவை அடங்கும் ?

3. முதன் முதலில் கடலில் வாழும் உயிர்களைப்பற்றி ஆராய்ந்த அறிஞர் யாவர் ?

4. கடற் செடிகளிலிருந்து செய்யப்படுவன யாவை ?

## பயிற்சி

பிழைகளைத் திருத்துக:

படத்தைச் சுவற்றில் மாட்டினான்.
வரவுக்கு மிஞ்சிச் சிலவு செய்தான்.
நான் ஒரு கிணைக் கண்டேன்.
வயற்றுப் பசியால் வாடினான்.

## இலக்கணம்

பின்வரும் வினைமுற்றுக்களை மூவிடத்தும் வினையாலணையும் பெயராக வைத்து வாக்கியம் அமைக்க:

படித்தான், உண்டேன், நின்றாய், ஓடியது, சென்றோம், வந்தாய்.

## கட்டுரை

கடல் ஆராய்ச்சியைப்பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

# 8. உயிரளித்துதவிய உத்தமப் புரு

பிறர் துயரம் காணச் சகியாத பெரியோர் தம் உயிரைக் கொடுத்தேனும் அத்துயரத்தை நீக்க முயல்வர். அப் பெரியோர் தீமை செய்தார்க்கும் நன்மையே செய்வர். இத்தகைய சான்றோர்களாலேயே உலகம் நடைபெறுகின்றது. இவர்களது புகழ் என்றும் அழியாது நிலைத்து நிற்கும். இதற்கு எடுத்துக்காட்டாக, அடைக்கலம் புகுந்த வேடன், தம்மைக் கொல்லுகின்றவனாக இருந்த போதிலும், அவனுக்குத் தங்களுடைய உயிரைக் கொடுத்து உதவிசெய்து, உயர் நிலைபெற்ற இரண்டு புருக்களது வரலாற்றை இங்குப் புகல்வோம்.

ஒரு வேடன் ஒரு நாள் வலை, தடி முதலிய கருவிகளை எடுத்துக்கொண்டு, வேட்டைக்குப் புறப்பட்டுப் போய்ப் பல விடங்களிலும் சுற்றித் திரிந்தான். வேட்டை யொன்றும் அகப்படாமையாற் களைத்து, முடிவில் ஒரு பெண் புரு வலையில் அகப்பட, அதைப் பிடித்துக் கூட்டில் அடைத்துக் கொண்டு தன் குடிசையை நோக்கித் திரும்பிச் சென்றான்.

அவ்வாறு போகும்போது, திடுமென வான் இருள் சூழ்ந்து பெருமழை பெய்ய, பிரளய காலம் போலப் பெருங் காற்றும் எழும்பியது. அதனால் அவன் வழி தெரியாது திகைத்து, ஒரு பெரிய மரத்தின் அடியிற் போய் ஒன்றி நின்று, மனங் கலங்கி, தனக்குத் துணை செய்வார் ஒருவரும் இல்லையே எனத் துயருற்றான்.

அம் மரத்திலேயே அந்த வேடன் கையில் அகப் பட்டிருக்கும் பெண் புறுவும், அதற்குரிய ஆண் புறுவும் வசித்துவந்தன. வேடன் வந்து ஒன்றி நின்ற அச் சமயத்தில், மேற் கூறிய பெடையைப் பிரிந்த



ஆண் புறுவானது எங்கெங்கோ அலைந்து திரும்பி வந்து, அம்மரத்தில் தனித்திருந்து, திரும்பிவராத பெட்டையைக் குறித்து மனம் வருந்திக்கொண்டிருந்தது.

''ஐயோ! இரை தேடச் சென்ற என் மனைவி, காற்றும் மழையும் மிகுந்துள்ள இவ் வேளையிலும்

கூட வரவில்லையே! அவள் ஏதேனும் இடரிற் சிக்கிக்கொண்டாளோ! எனக்கொன்றும் தோன்ற வில்லையே! அவளில்லாத இவ்விடம் என் கண்ணுக் குப் பாழாகத் தோற்றுகின்றதே! 'பாழே மடக் கொடி யில்லா மனை' என்பது சரியா யிருக்கின்றது; கற்புடை மனையாளோடு கூடி யிருப்பவனே பேறு பெற்றவன். ஆயினும் இச்சமயம் அவள் இல்லாமை யால் நானும் நல்வினையற்றவனாய் விட்டேன்'' என்று பலவாறு வருந்திப் புலம்பிக்கொண்டிருந்தது.

அப்போது, வேடன் கைக் கூட்டிலிருந்த பெண் புறுவானது, அதனை நோக்கி "நாயகரே! நீர் என்னைக் காணாது மிகவும் வருந்துகின்றீர். நானோ இவ் வேடனிடத்தில் அகப்பட்டுக் கொண்டேன். நான் பண்டு செய்த தீவினையினாலே இங்ஙனம் சிறைக்குள் அகப்பட்டுக் கொண்டேன். எதுவும் வருங் காலத்தில் வந்தே தீரும். உலகில் தோன்றி யவர்கள் தங்களுக்கு எது நேரினும் அதைத் துய்த்துக்கொண்டு நற்செயல்களையே செய்ய வேண் டும். ஆதலால், நீர் என்னைப்பற்றித் துயருற வேண்டாம். என்னைப் பிடித்து வைத்திருக்கும் இவ் வேடன், உமக்குப் பகைவனாலும், மழையாலும் குளிராலும் இடுக்கணுற்று நம்மில்லத்தில் அடைக்க லம் புகுந்திருக்கின்றான். ஆதலால் இவனது துன் பத்தை நீக்குதலே சிறந்த அறமாகும். 'ஒருவனு டைய வீட்டுக்கு வந்து அடைக்கலம் புகுந்தோன் வரவேற்கப்படாது வருந்திச் செல்வானேயாயின் அவ்வில்வாழ்வானுக்குத் தீங்கு நேரிடும்' என்பது நூன் முடிவு. இதனை நீர் நன்றாக ஆய்ந்து, இவ் வேடன் மீது பகை கொள்ளாது, இவனுக்கு உம்

மால் இயன்ற உதவி செய்வீரானல் உமக்கும் எனக்கும் நன்னிலை கிடைக்கும்'' என்று கூறியது.

இந்த நன்மொழிகளைக் கேட்டலும் ஆண் புறுவானது, தனது துயரமொழிந்து, அறத்தையே மனத்திற் கொண்டு, அங்குக் குளிரால் நடுங்கிக் கொண்டு நின்ற வேடனை நோக்கி, "வனசரனே, நீ இப்போது என் வீட்டிற்கு வந்ததைப் பற்றி நான் மிகுதியும் மகிழ்ச்சி யுறுகின்றேன்; நீ சிறிதும் ஐயுறாது எனது இல்லத்தை உன் வீடாக நினைத்து, உனக்கு வேண்டியதைக் கேள்'' என்று கூறியது.

அவ்வேடன், அதனைப் பார்த்து, "புறுவே, நானே இப்போது குளிராலும், பசியாலும் மிகவும் வருந்துகின்றேன். நீ என் குளிரைப் போக்குவாயானல் யான் மெத்தவும் நன்றியறிதலுள்ளவனு யிருப்பேன்'' என்று உரைத்தான்.

இதைக் கேட்ட அந்த ஆண்புறு அந்தக் காட்டில் பறந்து சென்று, ஒரு கொள்ளியை எடுத்துக் கொண்டு வந்து, அங்குக் கிடந்த சருகுகளைக் குவித்துத் தீமூட்டியது. அது அவனது குளிரையும் பசியையும் போக்க எண்ணி, வேடனைப்பார்த்து, "வில்லியே! நீ இத் தீயின்கண் உனது குளிரைப் போக்கிக்கொள்; உனது பசியையும் போக்குவது சிறந்த அறமாகும்; ஆயினும் எனது தீவினைப் பயனல் யான் பறவையாகப் பிறந்திருக்கின்றேன்; உன் பசிக் கேற்ற உணவு என்னுடம்புதானிருக்கிறது. இஃது உனக்கு உணவானலும் எனக்குச் சிறந்த அறம்

உண்டு. ஆதலால், இதோ என்னுடலை, உனது பசியைப் போக்கி இன்பமளிக்கத் தகுந்த நல்லுணவாக நல்குகின்றேன்,'' என்று சொல்லி உதவி ஒன்றையே சிறப்பாகக் கருதி விரைந்து அத்தீயில் பாய்ந்தது.



உடனே வேடன் திடுக்கிட்டு, மிகுந்த வியப்புற்று, 'ஆ! ஆ! இஃதென்ன! புதுமை! இப் புறாவின் அறச் சிந்தனையே சிந்தனை! இஃது என் குளிரைப் போக்கியதோடு அன்றிப் பசியையும் தணிக்க எண்ணித் தன் உடலையுந் துறந்தது. உலகில் எவருமே இத்தகைய சிந்தையுடையவராய் இருக்கமாட்டார். இதற்குண்டான அறிவு எனக்குச் சிறிது மில்லையே. நான் இதனுடைய பெட்டையைப் பிடித்து வைத்திருந்தும் என் மீது பகை கொள்ளாது நான் அடைக்கலம் புகுந்ததை மாத்திரம் உயர்வாகக் கொண்டு, எனக்குதவி செய்து, யாவரும் வியக்கத் தன் உடலையுங் கொடுத்ததே! இந்தச் சிறிய புறாவும் இவ்வளவு ஞானமுடையதாயிருக்க, மானிடனுகப் பிறந்த நான் மிகுதியுந் தீயனுயிருக்கின்றேன்.

நான் தீயொழுக்க முடையவன்; உயிரைக் கொன்று தின்னும் வன்னெஞ்சனுயும் இருக்கிறேன்

உயிர்களிடத்து அன்பு என்பதைக் கனவிலும் கருதிலேன். பிறர்க்கு உதவுவதோ இல்லை; ஊனையே தின்று ஊனை வளர்த்து வந்த தீயவனுகிய எனக்கு என்ன நன்னிலை கிடைக்கும்? இதை இப் புரு தனது செயலால் எனக்கு விளக்கிக் காட்டிவிட்டது. சீ! சீ!! எனது பிறப்பும் ஒரு பிறப்பா? இனி நான் எனது குலத் தொழிலாகிய கொடுந் தொழிலைக் கை விட்டுப் பசி, நீர் வேட்கை, குளிர், வெயில் ஆகிய வற்றைப் பொறுத்து, உடலை வாட்டி நன்னிலையை அடைய வேண்டும்' என்று துணிவு கொண்டான். உடனே தனது கூடு, தடி முதலியவற்றை யெல்லாம் முறித்தெறிந்துவிட்டு, தான் கூட்டில் அடைத்து வைத்திருந்த பெண் புருவை வெளியே விட்டு விட்டான்.

அங்ஙனம் விடவே, அந்தப் பெண் புருவானது, தன்னுயிரினுஞ் சிறந்த நாயகனுகிய ஆண் புரு அறத்தின் பொருட்டுத் தீயில் பாய்ந்ததை எண்ணி, 'ஆ! எனது நாயகரோ எரியில் வீழ்ந்து உயிரைத் துறந்து நல் வினையைச் செய்தவராயினர். யானே கணவரை இழந்த தீயளாய்விட்டேன். என் உயிரினும் சிறந்த கணவனிறந்த பின்பு உயிர் வைத்திருப்பதினுல் யாது பயன்? யானும் இச் சமயத்திலேயே என் உயிரையும் விட்டுவிடுகிறேன்' என்று துணிந்து அப்பொழுதே ஆண் புரு வீழ்ந்திறந்த எரியிலே வீழ்ந்திறந்தது. அவ்விரண்டும் அறத்தைக் கருதி உயிர் விட்டமையால், துறக்கம் புகுந்தன.

பெண் புருவும், தன் துணையாகிய ஆண் புருவின் பிரிவுக்கு ஆற்ருது பெரிதும் வருந்தி, நெருப்பில் வீழ்ந்திறந்ததைப் பார்த்த வுடனே, வேடனும்,

“ஐயோ! எனக்கு உணவாக வேண்டுமென்று கருதி, ஆண் புறா முதலில் தீயில் வீழ்ந்தது; அதன் பிரிவுக் காற்றாத பெண் புறாவும் பின்னே இறந்தது. இவ் விரண்டு சாக்காடும் என்னாலேயே நேர்ந்தன. ஆதலால், யானும் இவற்றின் இறப்பைக் குறித்து உயிர் விடுதலே சிறந்த அறமாகும்” என்று எண்ணித் தானும் உடனே அத் தீயில் குதித்து உயிர் விட்டான். அந் நல்வினைப் பயனால் அவனும் நற் கதியடைந்தான். நாமும் நலஞ் செய்து நல் வாழ்வு பெறுவோமாக.

சொற்பொருள்:— எடுத்துக் காட்டு - உதாரணம், வனசரன் - வேடன், சாக்காடு - மரணம், பண்டு - முன்பு, துய்த்து - அனுபவித்து, துறக்கம் - வீடு.

## வினாக்கள்

1. பெண்புறா ஆண்புறாவுக்கறிவுறுத்தியது என்ன?
2. வேடன் வியப்புறக் காரணம் என்ன ?
3. வேடன் எவ்வாறு அறிவு பெற்றான் ?
4. இக் கதையால் அறியலாகும் நீதி என்ன ?

## பயிற்சி

தனி வாக்கியம், தொடர் வாக்கியம், கலப்பு வாக்கியம் இவற்றிற்கு இப் பாடத்தில் ஒவ்வொரு உதாரணம் தருக.

## இலக்கணம்

பின்வருவனவற்றுள் மூவிடப் போலிகளையும் கூறுக:

அறம், அரைசு, நயம், அறன், ஞயம், அரசு, பந்தல், மாதர்.

## கட்டுரை

இக் கதையைச் சம்பாஷணையாக வரைக.

# 9. இசைக் கருவிகள்

பிள்ளைகளே ! நீங்கள் இளமையில் சிறு பறை கொட்டி விளையாடியிருப்பீர்கள். பறை கொட்டி விளையாடுவது நம் நாட்டு இளஞ் சிறுவர்களது வழக்கம். நம் சிறுவர்களில் ஒருவன் மகிழ்ச்சியின் மிகுதியால் பாடும்பொழுதும், ஆடும்பொழுதும் இணக்கமாகச் சூழவிருக்கும் ஒருவரோ இருவரோ கையோடு கை சேர்த்துத் தட்டி ஓசையுண்டாக்கி மகிழ்வதைக் கண்டிருப்பீர்கள். இஃதன்றி, இவ் வோசைகள், சமயத்திற்குத் தக்கது போல, சிறுவர்கள் கைகளில் அகப்பட்ட பறைகளையோ, தட்டையான மென்மை பொருந்திய பொருள்களையோ, உலோகங்களையோ சிறு கோலால் தட்டியும் உண்டாக்கப் படுகின்றன.

இவ்வாறன்றி மேற் சொல்லப்பட்ட பொருள்கள் தன்னியல்பால் கீழே வீழ்வதனாலும், ஒன்றோடொன்று மோதுவதாலும் உண்டாகும் ஒலிகள் அச்சத்தை உண்டாக்கும்; ஒழுங்கற்றதாயிருக்கும்; செவிப் புலனுக்கும் இன்பம் பயவா. ஆனால், மக்களால் இயக்கப்படும் ஒலியோ ஒழுங்குடையதாயிருக்கும். செவிக்கு இன்பம் தரும். இதனால் இவ்வொலி இசை எனப்படும். இது ஓசை, அரவம் எனவும் பெயர் பெறும். இவ்விசை இனிமை பயக்கும் காரணம் பற்றி இன்னிசை, சங்கீதம் என்று சொல்லப் படும்.

மக்கள் அறிவு வளர வளர, நமது முன்னோர்கள் இவ் வின்னிசையைத் தோற்றுவிப்பதற்குப் பல வழிகளைக் கண்டு பிடித்தனர். அவற்றில் ஒன்று குரலால் இசைப்பது; மற்றொன்று கருவிகளால் இசைப்பது. குரலால் பாடுவதும் இசைக் கருவி

களால் இசைப்பதும் ஒருங்கே நிகழின் அவ்வின்னிசை செவிக்கு மிகுந்த இன்பம் பயக்கும். நமது நகரங்களில் பலவிடங்களிலும் அமைக்கப் பெற்றிருக்கும் வானெலி நிலையங்களுக்கும், இன்னிசையரங்குகளுக்கும், செல்வர் வீட்டுத் திருமண நிகழ்ச்சிகளில் நடைபெறும் இசையரங்குகளுக்கும் நீங்கள் சென்று இசையமுதைச் செவியாரப் பருகி இனிது மகிழ்ந்திருப்பீர்களல்லவா? இம் மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன? அரங்குகளில் இசைவாணர்களால் பாடப்படும் இசைப்பாக்களுடனே இயைந்து இசைக்கப்படும் பல்வகை இசைக் கருவிகளின் இன்னேசையும் சேர்ந்து செவிக்கு இன்பம் பயப்பதேயாம். இதிலிருந்து இன்னிசையோடு பல்லியங்கள் சேர்ந்து இசைத்தாலன்றி இன்பம் பயவாது என்பது புலனுகின்றது. ஆதலால், அறிஞர்கள் இசைக் கருவிகளைப் பலவகையிலும் கண்டுபிடித்துப் பெருக்குவாராயினர். இதனுல் பல் வேறு விதமான இசைக் கருவிகள் நாளுக்குநாள் புதுப்புது வடிவுடன் தோன்றலாயின.

இவ் வியங்கள் ஒன்றின் வழியே ஒன்று மிக இசைவாக ஒத்து நிகழும். இக் கருவிகள் பலதிறப்படும். சில இசைக் கருவிகள் இசைபாடும் பொழுது மட்டும் பயன்படும்; இவை நாடகத்திற்குப் பயன்படா. இனி நாடகத்திற்கு மட்டும் உதவக்கூடிய கருவிகள் சிலவுள. இவை இசைக்கு உதவா. இனி இசைக்கும் நாடகத்திற்கும் பயன்படக் கூடிய கருவிகள் சில. இவ்வாறு நமது முன்னேர்கள் இவ்விசைக் கருவிகளை மூன்று பிரிவில், வகை வகையாகப் பயன்படுத்தி வந்திருக்கிருர்கள்.

## தோல் கருவிகள்




## துளைக் கருவிகள்




## நரம்புக் கருவிகள்




## கஞ்சக் கருவிகள்



இனி இக் கருவிகள், தோற்கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக்கருவிகள், மிடற்றுக் கருவிகள் முதலாகப் பல தொகுப்புக்களாகவும் பிரிக்கப்படும். தோலால் செய்யப்பட்ட பேரிகை, முரசு, இடக்கை, மத்தளம், உடுக்கை, முழவு, குடமுழா, கணப்பறை, சிறு பறை, பெரும் பறை முதலியன தோற்கருவிகளாகும். மத்தென்ற ஓசையைத் தருதலால் ஒரு கருவி மத்தளம் எனப் பட்டது. இவ்வாறே ஒவ்வொன்றின் பெயர்க்கும் காரணம் அமைந்திருக்கின்றது. குழல், நாத சுரம், கிளார்னெட் முதலியன துளையிடப்பட்ட வாத்தியக் கருவிகளாதலின் துளைக்கருவிகள் எனப்படும். குழல் என்ற துணைக் கருவியிலும் பல வகையுண்டு. இது இயற்கையின் வழியாகவே அறிந்து அமைந்தது பற்றி, இக்குழலே முதல் இசைக் கருவி எனப்படும்.

யாழ், வீணை, பிடில், தம்புரா முதலியன நரம்புக் கருவிகளாகும். இவற்றுள் யாழ் வேறு; வீணை வேறு. யாழிலும் பல வகை யுண்டு என்பர். பேரியாழ் என்பது ஒன்று. அஃது இருபத்தொரு நரம்புகளை யுடையது என்பர். பத்தொன்பது நரம்புகளை யுடையது மகரயாழ் எனப்படும். பதினுன்கு நரம்பு களையுடையது சகோடயாழ் எனப்படும். ஏழு நரம்புகளை யுடையது செங்கோட்டி யாழாகும்.

வெண்கலம் முதலிய உலோகங்களால் செய்யப் படும் தாளக் கருவிகள் கஞ்சக் கருவிகளாகும். (கஞ்சம்—தாளம்) இவற்றில் சிறியனவும் பெரியன வும் உண்டு. வாய்ப்பாட்டுக்கு அமைந்த கண்டம், மிடற்றுக் கருவி எனப்படும். (மிடறு—கண்டம்) மேனாட் டார் இசைக் கருவிகளை, நரம்புக் கருவி, தாளக்

கருவி, காற்றுக் கருவி என மூவகையாகப் பிரித்துள்ளார்கள். இதுகாறும் கூறப்பட்டுள்ள இசைக் கருவிகளன்றி, இன்னும் பல கருவிகளும் பழந்தமிழ் நூல்களில் கூறப்படுகின்றன.

இந்த இசைக் கருவிகளோடும் இசையைப் பரம்பரையாகவே பயின்று, அரசர்கள், கொடையாளர்கள் முதலியவர்களிடம் சென்று, தம்முடைய இசை வன்மையைக் காட்டிப் பரிசு பெற்று வந்த மக்கள் சிலர் இருந்தனர். அவர்கள் பெரும்பாணர், சிறுபாணர், பொருநர், கூத்தர் முதலியோராவர். இவர்கள் சில சமயங்களில் பலாமரத்தில் காய்கள் தொங்குவது போலத் தோன்றும்படி இசைக் கருவிகளைச் சுமந்து கொண்டு செல்வார்களாம்.

பாணர் என்பார் பாட்டுப்பாடி வாழ்ந்து வந்தவர்கள். அவர்கள் பேரரசர்களிடத்தும், சிற்றரசர்களிடத்தும் சென்று தம்முடைய இசைவன்மையைக் காட்டிப் பரிசு பெற்றனர். இக்காலத்தில் நல்லிசைப் புலவர்கள் பொற்பதக்கங்களைப் பரிசாகப் பெறுவதைப் போலவே, அக்காலத்தில் பாணர்கள் பொன்னாலாகிய தாமரைப் பூவைப் பரிசாகப் பெற்றார்கள். பாணர்களில் பேரியாழ் வாசிப்பவர்கள் பெரும்பாணர் என்றும், சிறிய யாழை வாசிப்பவர்கள் சிறுபாணர் என்றும் சொல்லப்படுவர்.

இசைக்கலை, கேட்பவர் யாரையும் தன் வயமாக்கும் இன்பக் கலையாகும். அக்கலைக்கு அழகு செய்வன முற்கூறிய பலவகைக் கருவிகள். ஆகவே, நாமும் ஏதாவதொரு இசைக் கருவியிற் பயிற்சி பெற்று இன்புற்று வாழ்வோமாக.

சொற்பொருள்:— பயவா-கொடுப்பதில்லை, அரங்கு-சபை, ஆர-நிறைய, பல்லியம்-பலவகை வாத்தியம், பல திறம்-பலவகை.

## வினாக்கள்

1. இசையின்பம் பெற முன்னோர் கண்டுபிடித்த இருவழிகள் யாவை?
2. இசைக் கருவிகளின் பலவகைகள் யாவை?
3. தோற்கருவிகள் சிலவற்றின் பெயர் கூறுக.
4. நரம்புக் கருவிகள் யாவை?
5. பாணர் எனப்படுபவர் யாவர்?

## பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைக் குறித்தபடி மாற்றுக:

கண்ணன் பாடினான் — வினாவாக
நீ படித்தாயா — செய்தியாக
அவர் வருவார் — எதிர் மறையாக
பறவைகள் பறந்தில — உடன்பாடாக

## இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களில் விளிக்கப்பட்ட பெயர்கள் எவ்வாறு விளியேற்றன என்பதைக் கூறுக:

## கட்டுரை

பிள்ளாய் வருக!
மக்காள் வாரீர்!
நண்பனே படி!
தம்பி செய்!
அன்ப வருக!

நீ பார்த்த இசை நிகழ்ச்சிபற்றி ஒரு கட்டுரை வரைக.

# 10. மருத்துவக் கலை

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது யாவரும் அறிந்த பழமொழி. உலகில் கல்வி கற்றுச் செல்வம்தேடி அறத்தினைச் செய்து இன்புற்று வாழ்வதற்கு, மூதற் கண் உடல் நலம் இன்றியமையாததாகும். ஆகவே, நோயற்ற நல் வாழ்க்கையே நிறைந்த செல்வமாகக் கூறப்படுகிறது. நமது யாக்கையிலுள்ள உறுப்புக்கள் தத்தமக்குரிய தொழில்களை வருத்தமின்றிச் செவ்வனே செய்து முடிக்கும் வன்மையுடன் இருக்கும் நிலைமையே ஆரோக்கியம் எனப்படும். இத்தகைய ஆரோக்கியத்தினை நாம் அடைவதற்குச் சுகாதார விதிகளை யுணர்ந்து நடத்தலே சிறந்த முறையாகும். இவ்வாரோக்கியமாகிய செல்வத்தை நாம் இழப்போமாயின், கல்வி கேள்வி முதலிய பிற எல்லாச் செல்வங்களையும் நாம் இழந்தவராவோம்.

மக்கட் படைப்புத் தோன்றிய காலத்திலேயே நோய்களும் தோன்றியுள்ளன என்றே கூறலாம். நோய்கள் மக்களை நாடி வருவதில்லை. மக்கள் தாம் நோய்களை நாடிச் சென்று அவற்றால் பீடிக்கப்பட்டுத் துன்புறுகின்றனர். இதற்குத் தலையாய காரணம் அறியாமையே. காலநிலை மாறுபாடுகளாலும் சில சமயங்களில் நோய்கள் பற்றுவதுண்டு.

இவ்வாறு வரும் நோய்களைத் தீர்ப்பதற்குப் பழங் காலங்களிலிருந்த நம் மூதறிவுடைய முன்னோர்கள் தக்க முறைகளைத் தமது அனுபவத்தாலும், அறிவின் நுட்பத்தாலும் கண்டறிந்து வெளியிட்டனர். அதுவே மருத்துவக்கலை என வழங்கப்படுகிறது.

மருத்துவக்கலை கூறும் உண்மைகள் இரு பெரும் பிரிவினுள் அடங்கும். நோய் வருமுன் காக்கும் வழிகளைக் கூறுவது ஒன்று. அதுவே சுகாதார விதிகளைக் கூறுவது. நோய் வந்தபின் தீர்க்கும் வழிகளைக் கூறுவது மற்றொன்று. அதுவே மருத்துவ நூலாகும்.

சுகாதாரத்திற்குத் தூய்மை இன்றியமையாததாகும். மக்கள் ஆடை, வீடு, உடல் முதலிய புறத் தூய்மை மட்டுமின்றி உள்ளத் தூய்மையும் உடையராயிருத்தல் வேண்டும். உள்ளம் நஞ்சுறின் உடல் நஞ்சுறுவது மிகவும் எளிது. உள்ளக் கவலை எல்லா நோய்களையும் விரைந்தழைக்கும்.

இனி உடல்நலத்திற்கு நல்லுணவும் முறையான தேகப் பயிற்சியும் வேண்டும். மனம் போனவாறெல்லாம் கண்ட கண்ட உண்டிகளைக் கண்டபடி யுண்ணலாகாது.

> "இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
> கழிபே ரிரையான்கண் நோய்"
> "அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
> பெற்றான் நெடிதுய்க்கு மாறு."

என்று பொதுமறை விதிக்கின்றது.

"உண்பது ஒருபொழுதொழிய மூன்று பொழுதுண்ணோம்
உறங்குவது இராவொழியப் பகலுறக்கம் செய்யோம்."

என்றபடி நடக்க வேண்டும்.

உண்ணுங்கால்—

"நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி உண்பவர்தம்
பேருரைக்கில் போமே பிணி" என்றார் தேரையர்.

இவற்றால் உண்ட உணவு சீரணித்ததை யறிந்து உண்ணக் கூடிய உணவைக் காலமறிந்து அள வறிந்து உண்பவனிடம் இன்பம் தோன்றுவதுபோல, பேருண்டியை விரும்பும் ஒருவனிடம் நோய் தோன் றும் என்பதும், ஒருவேளை யுண்பதே உயர்ந்தது என்பதும் பிறவும் அறியக் கிடக்கின்றன.

இனி நமது முன்னோர்கள் கண்டறிந்த மருத் துவ முறைகளைப்பற்றி ஆராய்வோம். நமது பழங் குடி மக்கள் ஆதியில் இலை, காய், கனி, கிழங்கு, இறைச்சி முதலியவற்றின் இயல்புகளை அறிந்து உண்ணத் தொடங்கிய காலத்திலிருந்தே இம் மருத் துவக் கலையும் தோன்றி வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். அவர்கள் பெரும்பாலும் பச்சிலைகளையும் வேர்வகைகளையும் கொண்டே நோய்களைப் போக்கி யிருக்கின்றனர். 'ஆயிரம் வேர் கண்டவன் அரை வைத்தியன்' என்ற பழமொழியும் இக்கருத்தை விளக்க எழுந்ததேயாகும். இக் காலத்திலும் கூட நாட்டுப்புறங்களில் உள்ள மருத்துவர் உடம்பின் அகத்தும் புறத்தும் உண்டாகின்ற நோய்களைத் தீர்க்கப் பெரும்பாலும் பச்சிலை வகைகளையே பயன் படுத்தி வருவதைக் காணலாம்.

இம் முறையில் மருந்து செய்தல், உதிரம் களை தல், அறுத்தல், சுடுதல் ஆகிய நான்கு முறைகளை யும் நம் முன்னோர் நெடுங்காலத்திற்கு முன்னமேயே அறிந்திருந்தனர். அம் மருந்துகள் பெரும்பாலும் தாவரங்களிலிருந்தும் பொன் முதலிய உலோகங் களிலிருந்தும் செய்யப்பட்டன. நாடி பார்த்து நோயறிதல் நமது நாட்டுக்கே சிறப்பாயுள்ளது.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்ற தமிழ் மறையின்படி நோயையும், காரணங் களையும், அது தீர்க்கும் முறைகளையும் நன்கு ஆராய்ந்து தக்கபடி மருந்தளித்து வந்தனர்.

இவ்வாருகத் தமிழ்நாட்டில் வளர்ந்துவந்த தமிழ் மருத்துவ முறை சித்த வைத்தியம் என வழங்கப்பட்டு வந்தது. தேரையர், போகர், கொங்கணர் முதலிய சித்தர்கள் கண்ட முறையாதல் பற்றி இது இப்பெயர் பெற்றது.

முற்காலத்தில் மருத்துவ நூல்கள் பல இருந்தன. அவற்றுள் பெரும்பாலன காலத்தால் இறந்து விட்டன. இம் மருத்துவக் கலையின் பெருமையை உன்னி வள்ளுவப்பெருந்தகையார் தாம் இயற்றிய திருக்குறளில் 'மருந்து' என ஒரதிகாரத்தில் இது பற்றி விளக்கிக் கூறியுள்ளார். பொருள்களின் குண நலங்களைக் கூறும் 'பதார்த்த குண சிந்தா மணி' என்னும் நூல் தமிழர் மூலிகைகள், பறவை கள், விலங்குகள் முதலியவற்றின் பயன்களை எவ் வளவு ஆராய்ந்து கண்டு பிடித்துள்ளார்கள் என்பத தற்கு எடுத்துக்காட்டாகும். சங்ககாலத்துப் புலவர் சிலர் மருத்துவத் தொழிலை மேற்கொண்டிருந்தனர் என்பது மருத்துவன் தாமோதரனர், மருத்துவன் நல்லச்சுதனர் முதலிய பெயர்களால் விளங்கும்.

இவ்வாறு ஒரு காலத்தில் பெரிதும் போற்றப் பட்ட சித்த வைத்தியம் பல காரணங்களால் பின் னர்த் தாழ்நிலையுற்றதும், அந்நிலையில் வட நாட்டு மருத்துவ முறையான ஆயுர்வேதம் நமது நாட்டில்

பரவலாயிற்று. இதனைத் தன்வந்திரி என்பவர் கண்டுபிடித்தார் என்று கூறுவர். நாளடைவில் சித்த வைத்தியமும், ஆயுர் வேதமும் ஒன்று கலந்து வளரலாயின. இவ்விரண்டு முறையும் கலப்புற்று வருகையில் முகம்மதியர் ஆட்சியால் அவர்கள் மருத்துவ முறையான யுனனி முறையும் இவற்றுடன் கலந்து பரவலாயிற்று. பிறகு ஆங்கில ஆட்சியில் மேனாட்டு மருத்துவமுறை வழக்கிற்கு வந்தது.

மேனாட்டு மருத்துவக் கலையை அக் கலையில் வல்லவர் கையாளும் திறமையாலும், உடற் கூறுகளை அவர்கள் ஆராயும் முறையாலும், கருவிகொண்டு புண்களைத் தீர்க்கும் புது முறையாலும் மக்கள் அதனையே விரும்பிக் கொண்டாடத் தொடங்கினர். இதனால் நம் நாட்டு சித்த வைத்தியமும், ஆயுர் வேதமும், அவற்றுடன் இணைந்த யுனனி மருத்துவ முறையும் அருகலாயின. எனினும் இக் காலத்தில் மேனாட்டு முறை இந்தியர் உடலின் இயல்புக்கும், உணவுக்கும், பழக்க வழக்கங்களுக்கும், தட்ப வெப்ப நிலைக்கும் ஒவ்வாதது என வுணர்ந்து மீண்டும் நம் நாட்டு மருத்துவ முறையை உயர் நிலைக்குக் கொண்டுவர முயலுகின்றனர். அதன் வளர்ச்சி மக்கள் நம்பிக்கையைப் பொறுத்ததா யிருக்கின்றது. மேனாட்டு மருத்துவக் கலைஞர் விஞ்ஞான வளர்ச்சியால் எக்ஸ்ரே போன்ற புதிய முறைகளைக் கண்டறிந்து மக்கள் உடலினுள் இருக்கும் உறுப்புக்கள் அடைந்துள்ள நிலையையும் கண்டு தக்க மருந்தளித்து நோய் தீர்க்கின்றனர். ஆகவே, பயனளிக்கக் கூடிய எல்லா வகைகளையும் போற்றி நல்வாழ்வடைய முயல்வது நமது கடமையாம்.

சொற்பொருள்:— யாக்கை - உடம்பு, கூறு - பகுதி, அற்றது - சீரணித்தது, உதிரம் - இரத்தம்.

## வினாக்கள்

1. மருத்துவக் கலையறிவு அவசியம். எவ்வாறு?
2. சுகாதாரத்திற்கின்றியமையாதவை யாவை?
3. சித்தவைத்தியத்திலுள்ள முறைகள் யாவை?
4. நம் நாட்டில் வந்து வளர்ந்துள்ள மருத்துவ முறைகள் யாவை?

## பயிற்சி

வாக்கியங்களைத் திருத்தமாக எழுதுக:

ஒவ்வொரு பாடங்களையும் நன்றாகப் படிக்கவேண்டும்.
ஐந்துமணி சுமாருக்குச் சென்றான்.
திருக்குறளை வள்ளுவரால் இயற்றப்பட்டது.

## இலக்கணம்

பின் வருவனவற்றுள் விளியேலாப் பெயர் இவை யெனக் கூறுக:

குயில், அவன், இவை, இவர், கண்ணன், எவர், தந்தை, எது, தாய், யாவன்.

பின்வரும் பெயர்கள் வேற்றுமை ஏற்கும்போது ஏற்ற சாரியைகளைக் கூறு:

மரத்தை, வீட்டிற்கு, அறத்தால், அறத்தினால், எல்லாவற்றையும், விலங்கினது.

## கட்டுரை

சுகாதாரத்தைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

# 11. நிலக்கடலை

நம்நாட்டு விளைபொருள்களில் எள், நிலக்கடலை, ஆளிவிதை, ஆமணக்குவிதை முதலான எண்ணெய் வித்துக்கள் மிகவும் சிறந்தவை. இவை பெரும்பாலும் விளக்கெரிக்கவும், சிறுபான்மை உணவாகவும், மருந்துப் பொருளாகவும் பயன்படுத்தப் படுகின்றன. இவ் வித்துக்கள் சாதாரணமான நிலங்களில் குறைந்த செலவில் விளைவதாலும், பலவகைகளில் பயன்படுவதாலும் எங்கும் பயிர் செய்யப்படுகின்றன. நமது சென்னை மாகாணத்தில் நிலக்கடலை சாதாரணமாகப் பயிர் செய்யப்படுகின்றது. ஆகவே, இது எவ்வாறு பயிரிடப்படுகிறது? இதன் பயன் யாவை என்பவைகளைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

நிலக்கடலை என்பது நிலத்துக்குள் மறைவாக விளையும் விதை யாதலின் இப்பெயர் பெற்றது. இதற்கு வேர்க்கடலை, மணிலாக் கொட்டை, கடலைக் கொட்டை யென்று வேறு பல பெயர்களும் உண்டு. நெடுங்காலமாக நமது நாட்டில் நிலக்கடலை பயிரிடப் படுகிறது. ஆனுல் ஐரோப்பாவில் அண்மையில்தான் இது பயிரிடத் தொடங்கப் பெற்றது. பதினெட்டாம் நூற்றூண்டில் ஸ்பெயின் நாட்டவர் தென்அமெரிக்காவிலிருந்து நிலக்கடலையைக் கொண்டுவந்து தங்கள் நாட்டில் பயிரிடத் தொடங்கினர். அதன் பிறகு ஐரோப்பாவில் நிலக்கடலை எண்ணெயின் பயன் நன்கு தெரிய வரவே, நிலக்கடலை மிகுதியும் பயிரிடப் படுவதாயிற்று.

நிலக்கடலையானது அரை அங்குலம் முதல் ஒன்றரை அங்குலம் வரையில் நீண்டிருக்கும். அதன்

மேலுள்ள தோட்டை எடுத்து விட்டால் உள்ளே பருப்புக்கள் இருக்கும். நிலக்கடலைப் பருப்பானது வெளித்தோற்றத்திற்கு வேப்பம் பருப்பைப் போல இருக்கும். பருப்பைச் சுற்றிலும் செந்நிறமான மெல்லிய தோல் மூடிக் கொண்டிருக்கும். பருப்பைத் தேய்த்து அத்தோலைப் போக்கிவிட்டால் பருப்பு வெண்ணிறமாக இருக்கும். அதுவே கடலையின் சாரமான பாகமாகும். அதைக் கையால் நசுக்கினால் எண்ணெய் இருப்பது தோன்றும்.



நிலக்கடலை பூமிக்குள் செடியின் வேரிலே கொத்துக் கொத்தாகக் காய்க்கும். ஈரமுள்ள நிலமே கடலைச் செடிக்கு ஏற்றது. மணற்பாங்காய் உள்ள இடங்களில் உண்டாகும் கடலை மிகுந்த எண்ணெய்ச் சத்து உடையதாயிருக்கும். செம்மண் பூமியில் கடலை நன்றாக விளையும். மழை தொடங்கும் காலத்தில் குடியானவர்கள் கடலையைப் பயிரிடத் தொடங்குவார்கள்.

மழைத் தூறல் விழுந்தவுடனே அவர்கள் நிலத்தை இரண்டு மூன்று முறை நன்ருகவும் ஆழமாகவும் உழுவார்கள். எவ்வளவுக் கெவ்வளவு உழவு ஆழமாயிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வேர்கள் ஆழமாக நாற்புறங்களிலும் பரவி மிகுதியான பயனைக் கொடுக்கும். நன்ருக உழுது நிலத்தில் ஆட்டுப் புழுக்கை, மாட்டுச் சாணம் முதலிய எருக்களைப் போட்டு நிலத்தைச் சமனுக்கி அப்பால் விதைப்பார்கள். நன்ருக உலர்ந்த சாணத்தையே எருவாக இடவேண்டும். சாணம் ஈரமாக இருப்பின் அதிலிருந்து புழுக்கள் தோன்றிக் கடலேயின் முளைகளை அழித்து விடும். கடலே விதைகள் கெடாமல் நன்ருக இருக்க வேண்டும். நல்ல பழக்கமுள்ள உழவர்கள் நன்ருக விளைந்த விதைகளைப் பொறுக்கி யெடுத்துச் சாம்பலோடு கலந்து ஒரு பானையில் போட்டு அழுத்தமாக மூடி வைப்பார்கள். இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு அவற்றை வெளியே எடுத்து மேல் ஓட்டை நீக்கிவிட்டு நிலத்தில் விதைப்பார்கள். இரண்டு நாட்களுக்குள் விதைத்த விதையிலிருந்து முளை நன்ருகக் கிளம்பிவிடும். விதையின் மேலே மூடிக் கொண்டிருக்கும் சிவப்புத் தோல் நீங்கி விடுமாயின் விதை முளைக்காது.

மண்வளம் நன்ருக இல்லாத இடங்களில் விதைகளை அதிகமாக விதைக்க வேண்டும். வளமான நிலங்களில் நெருக்கமாக இல்லாமல் பரவலாக விதைகளை ஊன்றினல் போதும். விதைகள் நெருக்கமாக இருந்தால் வேர்கள் நன்ருய்ப் பரவ இடமிராது.

நிலக்கடலேயைப் பயிரிடுவது விந்தையாக இருக்கும். உழவர் கலப்பையால் நிலத்தை உழுது

கொண்டு செல்வர். அப்பொழுது இரண்டு மூன்று பேர்கள் உழுபடைச் சாலில் விதைகளைப் போட்டுக் கொண்டே செல்வர். நிலம் முழுவதும் இவ்வாறு விதைத்தான பிறகு மறுபடியும் நிலத்தை உழுவார்கள். அப்பொழுது அவ் விதைகளை மண் நன்ருக மூடிக்கொள்ளும். மழை பெய்யாவிடில் நிலத்தில் பாத்திகட்டி நீர் பாய்ச்சுவர். நீரில் விதைகள் மிகவும் ஊறிப் போனலும் நிலத்தில் ஈரம் மிகுதியாக இருந்தாலும் முளைகள் கிளம்பா. ஆதலால், போதுமான ஈரமுள்ள நிலத்திலேயே விதைகளை ஊன்ற வேண்டும்.

விதைத்த பிறகு கடலைக் கொல்லைகளைக் காத்தல் இன்றியமையாததாகும். பகற் காலங்களில் பறவைகளும் இராக் காலங்களில் நரிகளும் பயிர்களை அழித்து விடும். குடியானவர்கள் இதற்காக வைக்கோல், துணி முதலியவற்ருல் புல்லுரு ஒன்று செய்து கொல்லையின் நடுவண் வைப்பதுண்டு. இப் புல்லுருவைக் கண்ட பறவைகளும் நரிகளும் அஞ்சி ஓடிவிடும். இஃதன்றி இராக் காலங்களில் கண் விழித்துக் குடியானவர், நரிகளைக் கண்டதும் கூச்சலிட்டுத் துரத்துவதும் உண்டு.

விதை விதைத்த பிறகு ஒரு மாதம் வரையில் தண்ணீர் வேண்டுவதில்லை. மழை யில்லாவிடில் வாரத்திற் கொருமுறை தண்ணீர் இறைக்க வேண்டும். தண்ணீர் மிகுதியாகத் தரையில் தங்கினல் செடிகள் வெளுத்துப் போம். மேலும் காய்கள் சிறுத்து விடும். ஆறுமாதங்களுக்குப் பிறகு கொட்டைகள் முற்றிவிடும். இலைகளும் பழுத்து உதிரும்.

இலைகளெல்லாம் உதிர்ந்து செடிகள் உலர்ந்த பிறகு, நிலம் முழுவதும் தண்ணீர் விட்டு ஊற வைத்து, மறுநாள் செடிகளை யெல்லாம் பிடுங்கிக் கட்டுகளாகக் கட்டிக் கொண்டுபோய் உலர்த்து வார்கள்; பிறகு கடலையை வேறாகப் பிரித்தெடுப்பர். இதன் சருகு பசுக்களுக்கு நல்ல உணவாகும். இத னால் பால் பெருகும்.

இதன் பருப்பு, தின்பதற்குச் சுவையாக இருக் கும். மக்கள் இதனை வறுத்தும் வேகவைத்தும் உண் பர். சர்க்கரைப் பாகு, வெல்லப் பாகுடன் சேர்த்து உருண்டை பிடித்தும் மகிழ்ச்சியுடன் உண்பர். நிலக்கடலைப் பருப்பு சுவையான உணவுப் பொருள் களில் ஒன்று.

கடலைப் பருப்பைச் செக்கிலிட்டு ஆட்டி எண் ணெய் எடுப்பார்கள். கடலை யெண்ணெயானது விளக்கெரிக்கவும் பலகாரங்கள் சுடவும் சவுக்காரம் செய்யவும் பயன்படுகிறது. கடலைப் பிண்ணாக்கு மாடுகளுக்கு உணவாகப் பயன்படுகிறது. விவசாயி கள் இதை நிலத்துக்கு எருவாகவும் பயன்படுத்துவர். கடலைப் பருப்பின் மேல் தோடும் நல்ல எருவாகும். நிலக்கடலை இந்தியாவின் பல இடங்களிலும் பயி ரிடப்பட்டு அயல் நாடுகளுக்கும் அனுப்பப்படுகிறது. மேனாட்டார் இதை வாங்கி எண்ணெயாக்கி, சோப்பு முதலிய பல பொருள்களைச் செய்து பேரூதியம் அடைகின்றனர். நாமும் நமது நாட்டில் எண்ணெய் ஆலைகள் நிறுவி, எண்ணெய் எடுத்து அவர்களைப் போலப் பல பொருள்களையும் செய்து பயன்பெற முயலவேண்டும். ஆலைத்தொழிலால் பலர் வேலைபெறு வதுடன் நாட்டின் செல்வ நிலையும் வளர்ச்சியடையும்.

சொற்பொருள்:— விந்தை-வியப்பு, புல் உரு-வைக் கோலால் செய்யப்பட்ட வடிவம், கொழுமை-செழுமை.

## வினாக்கள்

1. நிலக்கடலைக்குள்ள பெயர்கள் யாவை ?
2. இக் கடலை எப்பொழுது பரவியது ?
3. இதனைப் பயிரிடுவதில் விந்தை என்ன ?
4. இதனால் உபயோகம் என்ன ?

## பயிற்சி

பின்வரும் வாக்கியத்தைத் தனி வாக்கியங்களாக எழுதுக:

'செடிகள் எல்லாம் உலர்ந்த பிறகு - நிலம் முழுவதும் தண்ணீர் விட்டு ஊறவைத்து, மறு நாள் செடிகளை யெல்லாம் பிடுங்கிக் கட்டுகளாகக் கட்டிக் கொண்டு போய் உலர்த்துவார்கள்.

## இலக்கணம்

பின் வரும் பெயர்களில் இடுகுறிப் பெயர்களையும், காரணப் பெயர்களையும், காரண இடுகுறிப் பெயர்களையும் கூறுக:

மரம், பொன்னன், பறவை, சுவர், மாடு, முள்ளி, அந்தணன், வேர்க் கடலை.

## கட்டுரை

கடலை தன் வரலாற்றைத் தானே கூறுவது போல் ஒரு கட்டுரை வரைக.

## 12. வான் செலவு

சென்னை,
1—8—45.

அன்புள்ள நண்ப! வந்தனம்.

உலகின்கண் உள்ள பல கூறுகளை யெல்லாம் கண்டு களிக்க வேண்டுமென்று எழுந்த எனது பேரவாவின் காரணமாக, யான் சென்று வந்த மேனாட்டுச் செலவைப்பற்றிய விவரங்களை யெல்லாம் உனக்கு அறிவிக்க விரும்புகின்றேன். இப்பிரயா ணத்தால் நான் அடைந்த நன்மைகள் பல. நேரில் காணாவிடினும், கண்ணுற் கண்ட என் அனுபவங் களை நீ அறிவதால், உனக்கும் உலகியலறிவு ஏற்படும் என்ற நம்பிக்கையினாலேயே இக்கடிதம் எழுதுகின்றேன்.



என்னுடைய பிரயாணத்தின் பெரும் பகுதியை ஆகாய விமானத்தின் மூலமாகவே செய்தேன்; நான் சென்னையிலிருந்து புறப்பட்டு, நம் நாட்டு மேற்குக் கடற் கரையிலுள்ள கராச்சி நகரத்திற்கு ஒரு சிறிய வான விமானத்தில் ஏறிச் சென்றேன்.

அவ்விமானம் ஒரு பறவை போலப் பறந்து சென்றது. கீழேயுள்ள நகரங்களை யெல்லாம் பார்க்க, கிராமங்கள் போலச் சிறிய அளவாகக் காணப் பட்டன. கராச்சி நகரம் சிந்து மாகாணத்தின் தலை நகரம்; இது ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்குவதுடன், விமானங்கள் தங்கிச் செல்லும் நகரமாகவும் விளங்குகிறது. இந்த நகரிலிருந்து மேனாட்டிற்குப் புறப்பட்ட ஒரு பெரிய விமானத்தில் ஏறிக்கொண்டு மேற்கு நோக்கிச் சென்றேன். இந் தியாவைக் கடந்ததும் பாரசீகம் என்னும் நாட்டைக் கண்டேன். அந்நாடு ஒரு வறண்ட பீட பூமி. ஆனால் சில இடங்களில் அழகிய ரோஜாத் தோட்டங்கள் காணப்படுகின்றன. ஒட்டகங்களைக் கூட்டம் கூட்ட மாகக் காணலாம்.

பாரசீகத்தின் வழியாக வடமேற்காகச் சென்று துருக்கி நாட்டைக் கடந்து கிரீஸ் தேசத்தை யடைந்தேன். இத் தேசத்தைச் சுற்றிலும் நூற் றுக்கணக்கான சிறு தீவுகள் சூழ்ந்திருக்கின் றன. அங்கங்கே பல பழத் தோட்டங்களையும் பூந் தோட்டங்களையும் கண்டேன். இந்நாட்டிலுள்ள ஏதன்ஸ் நகரில் இறங்கி அங்கு உள்ள பழைய அழகிய பெரிய கட்டிடங்களைக் கண்டு மகிழ்ந் தேன். பிறகு விமானமேறிப் புறப்பட்டு வடக்கு நோக்கிச் சென்று ரஷ்யா என்னும் பெரிய நாட்டை அடைந்தேன்.

இந்நாடு ஆசியா, ஐரோப்பா என்ற இரண்டு கண்டங்களின் வடபாகங்களிலும் பரவியிருக்கின்றது. இதன் தென்பாகத்தில் ஏராளமான காடுகளும் கோதுமை வயல்களும் காணப்படுகின்றன. ரஷ்யா வின் வடபாகத்தின் தரை, பல மாதங்கள் வரையில்

பனியால் மூடப்பட்டிருக்கின்றது. அங்குத் தாவரங்களைக் காண்பதரிது. அங்குள்ள மக்கள் நாகரிகமற்றவர்கள்; அவர்கள் தங்கள் வீடுகளைக் குளிர்காலத்தில் பனிக்கட்டிகளாலும், கோடை காலத்தில் தோல்களாலும் அமைத்துக் கொள்கிறார்கள். இவர்கள் நாட்டிலுள்ள வண்டிகளுக்குச் சக்கரங்கள் இல்லை. ரஷ்யாவுக்கு வடக்கில் நார்வே என்ற ஒரு தேசம் உளது. கடற்பாகங்கள் இதன்கணுள்ள மலைகளுள் வெகு தூரம் உட்சென்றிருக்கின்றன.

பிறகு, இதற்குத் தென்றிசையில் உள்ள டென்மார்க் என்ற சிறுநாட்டை யடைந்தேன். இது மிகவும் மணற்பாங்காய் உள்ளது. இங்குள்ள பசும்புற்றரையில் எண்ணிறந்த ஆடுமாடுகளைக் காணலாம்.

டென்மார்க்குக்குத் தென்மேற்கில் ஹாலந்து என்ற நாடு இருக்கின்றது. இது கடல்மட்டத்துக்குக் கீழ் இருப்பதால், இங்கு கடல் உட்புகா வண்ணம் பெரிய கரைகளைக் கட்டித் தண்ணீரை இறைக்கின்றனர். இவர்கள் எப்பொழுதும் பேராழியுடன் போராடிக் கொண்டே இருக்க வேண்டியிருப்பதால் மிகச் சுறுசுறுப்பு உள்ளவர்களாகவே விளங்குகின்றனர். இங்கு எப்பொழுதும் பெருங்காற்று வீசிக் கொண்டே யிருப்பதால், அதன் துணை கொண்டு, மாவு முதலியன அரைக்கும் இயந்திரங்களை இயக்குகின்றனர். சிலர் வயிரம் அறுக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இங்கு பெரும்பாலும் போக்குவரவுக்குச் சாலைகளுக்குப் பதிலாகக் கால்வாய்களே உதவுகின்றன. மக்கள் படகுகளிலேயே போய் வருகின்றனர்.

ஹாலந்துக்குத் தென்றிசையில் ஜெர்மனி தேசம் இருக்கிறது. இதன் வடபாகத்திலுள்ள சம வெளியில் பயிர்த்தொழில் நடைபெறுகின்றது. அங்கங்கே பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றினின்றும் எழும் புகை வானத்தை மறைக்கும். கப்பல்கள் பண்டங்களை ஏற்றிக் கொண்டு யாறுகளிலும், கால்வாய்களிலும் செல்லும். இந் நாட்டுக்கு மேற்றிசைக் கண்ணே உள்ள பிரஞ்சு நாட்டில் பெரும்பாலும் கோதுமை வயல்களையும், திராட்சைத் தோட்டங்களையும் காணலாம். இங்குள்ள பாரிஸ் என்ற நகரம் பேரழகுடையது.

பிரான்சிலிருந்து தென் கிழக்காகப் பறந்து, ஸ்விட்ஸர்லாந்து என்ற மலை நாட்டை யடைந்தேன். இங்குப் பனி மூடிய குவடுகளையுடைய மலைகளையும், அழகிய நீர் நிலைகளையும், மற்றும் காண்டற்கினிய காட்சிகளையும் கண்டு களிக்கப் பல நாட்டு மக்களும் வந்து செல்லுகின்றனர். அவர்களுக்கு வேண்டிய தேவைகளைச் செய்ய ஆவலுடைய மக்களும் இங்கு உளர்.

இந்நாட்டுக்குத் தெற்கில் இத்தாலி என்ற பழைய நாடு உளது. மிகப் பழங்காலத்து முன்பே இந்நாடு சிற்பம், சித்திரம், கல்வி முதலியவற்றிற்கு மிகுதியும் பெயர் பெற்றது. இதன் பாகத்திலுள்ள வெசூவியஸ் என்ற எரிமலையும், நேப்பிள்ஸ் என்ற நகரமும் கண்டு களிக்கத் தக்கன.

இத்தாலியிலிருந்து வடமேற்காகச் சென்று இங்கிலாந்தை அடைந்தேன். இங்கு கடற்கரையோரங்களில் கணக்கற்ற படகுகள் மீன் பிடிக்குந் தொழிலில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். இந்நாட்

டின் கீழ்ப் பாகத்தில் வேளாண்மையும், மேற்பாகத்தில் பல தொழிற்சாலைகளும் நடை பெறுகின்றன. அத் தொழிற்சாலைகளில் குண்டுசி முதல் போர்க் கப்பல் வரை எல்லாப் பொருள்களும் செய்யப்படுகின்றன. பெரிய கப்பல்களும், வான விமானங்களும் இங்கிருந்து உலகின் பல பாகங்களுக்கும் செல்லுகின்றன. இங்குள்ள லண்டன்மாநகரம் உலகில் மிகப்பெரிய நகரம். இங்கே இருப்புப் பாதைகள் பூமிக்குள்ளே செல்கின்றன.

இங்கிலாந்திலிருந்து வானவூர்தியானது மேற்றிசையின் கண்ணே சென்று, வடஅமெரிக்காவின் வடபாகமாகிய கனடாவை யடைந்தது. அதன் கடற்கரையோரங்களில் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பல கப்பல்களையும், படகுகளையுங் காணலாம். உள்நாட்டின் கீழ்ப் பாகம் குளிர்காலங்களில் பனியால் மூடப்பட்டிருக்கிறது. அக்காலங்களில் அங்கிருக்கும் காடுகளிலுள்ள மரங்களைவெட்டி, உறைந்த ஆறுகளின் மீது போட்டு விடுகின்றனர். பனி உருகியதும் கட்டைகள் மிதந்து கொண்டே சென்று தொழிற்சாலைகளை அடைகின்றன. தக்க மரங்களைக் கொண்டு காகிதம், செயற்கைப் பட்டு முதலியன செய்கின்றனர். இதன் மேற்கில் கண்ணுக் கெட்டிய வரை கோதுமை வயல்களைக் காணலாம். இந்நாட்டில் உழவு, நடவு, அறுவடை முதலிய எல்லாத் தொழில்களும் பொறிகளின் உதவியினலேயே நடைபெறுகின்றன. இங்கு பயிராகும் கோதுமை இந்நாட்டு மக்களின் தேவைக்கு மேல் அதிகமாக உண்டாவதால், அதில் பெரும் பகுதியை வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுகின்றார்கள். இத்தகைய

தொழில் முறையில் நமது நாட்டு மக்களும் தமது கருத்தைச் செலுத்துவார்களானல், நமது நாடும் வேளாண்மையிற் சிறந்து விளங்கும்.

கனடாவின் தென்பகுதி யெல்லாம் ஐக்கிய நாடுகள் எனப்படும். இவற்றின் கிழக்குக் கரையோரம் எல்லா வகையான தொழிற்சாலைகளும் நிறைந்திருக்கின்றன. உலகின் கண்ணே இரண்டாவதாக மதிக்கப்படும் பெரிய நகரமாகிய நியூயார்க் இங்கே இருக்கின்றது. இங்கே வீடுகளுக்குப் போதிய வசதியின்மையால், இங்குள்ள கட்டிடங்களெல்லாம் 30, 40 அடுக்குகளைக் கொண்டனவாய் வானளாவி யிருக்கின்றன. ஒரே கட்டிடத்தில் 1000 பேர்களுக்கு மேலும் தங்கலாம். குடபால் செல்லச் செல்ல கழனிகள், மேய்ச்சல் தரைகள், சுரங்கங்கள் முதலியவற்றைக் காணலாம். லாஸ் ஏஞ்சல் நகருக்கருகில் ஏராளமான மண்ணெண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. இந்நகரில் நமது கண்ணுக்கும் கருத்துக்கும் களிப்பை யூட்டும் பேசும் படங்களின் உற்பத்திச்சாலைகள் பலவுள.

இந் நாட்டிலிருந்து பஸிபிக் பேராழியைக் கடந்து ஹாங்காங் வழியே நம் நாட்டிற்குத் திரும்பி வந்தேன். இத்துடன் எனது வான விமானச் செலவு முடிவுற்றது. இம் முடங்கலில் நான் எவ்வளவு விரிவாக வரைந்திருப்பினும், நேரே காண்பதால் உண்டாம் மகிழ்ச்சியும் பயனும் விளையாவென்றே எண்ணுகிறேன்.

இங்ஙனம்,
அன்புள்ள நண்பன்,
சுந்தரநாதன்.

சொற்பொருள்:— ஊர்தி - வாகனம், செலவு - பிரயாணம், ஆழி - கடல், முடங்கல் - ஓலை.

## வினாக்கள்

1. ரஷ்யாவைப் பற்றி வரைக.

2. ஹாலந்து மக்கள் சுறுசுறுப்பாக விளங்குவதேன்?

3. கனடாவில் நடைபெறும் தொழில் யாவை?

4. நியூயார்க் நகரின் சிறப்பு என்ன?

## பயிற்சி

நேர் கூற்றை அயற்கூற்ருகவும், அயற்கூற்றை நேர் கூற்ருகவும் மாற்றுக:

அவன் 'நான் விமானத்தில் பிரயாணம் செய்திருக்கிறேன்' என்று சொன்னான்.

ஆசிரியர் என்னைப் புத்தகம் வாங்கிவரச் சொன்னார்.

'எந்த நிலையிலையிலும் அஹிம்சையையும் சத்தியத்தையும் கைவிடலாகாது' என்று மகாத்மா சொன்னார்.

புத்தர் தம் உபதேசத்தால் எல்லோரையும் அன்புடன் வாழச் செய்தார்.

## இலக்கணம்

பகுபத வுறுப்புக்களைப் பிரித்துக் காட்டுக:

பொன்னன், செல்வேன், கண்டான்.
ஓடிற்று, பறந்தன, பாடினான்.

## கட்டுரை

நீ செய்த ஒரு பிரயாணத்தைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

## 13. ஈசுவர சந்திர வித்தியாசாகரர்

நமது நாட்டில் தோன்றிய சீர்திருத்த வள்ளல்களாகிய பெரியார்களுள் ஈசுவர சந்திரர் மிகச் சிறந்தவர். ஈசுவர சந்திரர் நல்ல குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தையார் தாகூர்தாஸ் பானர்ஜீ ஆவர். தாயார் பகவதி தேவியார். இவர் பானர்ஜீக்கு மூதற் குமாரர். இவர் பிறந்த காலத்தில் இவரது பெற்றோர்கள் வறுமைக் கடலில் ஆழ்ந்து, கரை ஏற வழி தெரியாது தத்தளித்துக் கொண்டிருந்தனர். ஆயினும், நாளடைவில் உணவுப் பஞ்சம் அக்குடும்பத்தை விட்டு நீங்கியது.

சந்திரர் ஐந்தாவது ஆண்டில் வங்காளிப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். பிறகு கல்கத்தாவிலுள்ள ஹிந்து கலாசாலையில் சேர்ந்து பதினொரு வயதிற்குள் வடமொழியில் புலமை பெற்றார். பதின்மூன்றாவது ஆண்டில் அழகான சமஸ்கிருதக் கவிகள் புனையத் தொடங்கினார். இவர் எழுதும் வடமொழிச் சுலோகங்களின் அழகைக் கண்ட பண்டிதர்கள் இவரை வாழ்த்தினர். உலகில் கல்வியும், செல்வமும் ஓரிடத்தில் ஒருங்கே பெரும்பாலும் அமையாவல்லவா? இவர் தம் இளமையில் வறுமையால் அடைந்த துன்பங்கள் பல. இளமையிலேயே இவருக்குத் தந்தையாரையும், சகோதரரையும் பேணும் பொறுப்பு வந்தது. இவர் வீட்டு வேலைகளைச் செய்துகொண்டே தம் பாடங்களைப் படித்துக்கொண்டு வந்தார். பதினான்காவது வயதில் தினமாயிதேவி என்ற பெண்மணியை மணந்தார். ஸ்மிருதி வகுப்பிலும் சேர்ந்து படித்துத் தேர்ச்சியடைந்து பின் இலக்கண ஆசிரியராக அமர்ந்தார்.

இவ்வாறு இருந்துகொண்டே ஹிந்து கலாசாலையின் முடிவான தேர்விலும் வெற்றி பெற்ருர். எனவே, இவருக்கு ஹிந்து கல்லூரி மூலம் வித்தியா சாகரர் (கல்விக்கடல்) என்ற கௌரவப் பட்டம் கொடுக்கப்பட்டது. இளமையில் பட்டம் பெற்ற இவரையும், இவரது பெற்ருேரையும் பாராட்டாதவர்



ஒருவருமிலர். இங்நிலையில் பல அரிய சுலோகங் களை எழுதிப் பரிசுபெற்ருர். பிறகு போர்டுவில்லியம் கல் லூரியில் ஓர் அலுவலில் அமர்ந்தார். அப்பொழுது இவர் உற்சாகமாக மாணவ ருக்குப் போதனை செய்வ துடன் அமையாது, ஆங்கி லமும் கற்றுக் கொண்டார். இவர் எழுதிய நூல்கள் பல. வங்காள மொழியில் பல பாடப் புத்தகங்கள் எழுதி ஞர். வட மொழியிலிருந்து பல நீதி போதனைக்குரிய நூல்களை வங்க மொழியில் பெயர்த்தெழுதினர்.

ஹிந்து கல்லூரியில் தலைமைப் பொறுப்பைத் தாங்கியவுடனே இவர் பல சீர்திருத்தங்களைப் புகுத் துவாராயினர். பாடசாலைகளில் கல்வி கற்கும் மாண வர்களை ஆசிரியர்கள் அடித்துப் பாடம் சொல்லிக் கொடுக்கும் முறை தவறு என்பதை முதன் முதலில் விளக்கிக் காட்டி அதனை ஒழித்தார். கல்லூரி களில் சாதி மத வேறுபாடு இல்லாமல் அனைவரும்

சேர்ந்து படிக்கலாமென்ற விதியை ஏற்படுத்தினார். ஆண்மக்களைப் போலவே பெண்மக்களும் கல்வி கற்க வேண்டியதற்கான முயற்சிகளை எல்லாம் செய்து, எல்லோரும் ஒன்று சேர்ந்து கல்வி கற்குமாறு ஒழுங்கேற்படுத்தினார். இவரால் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்கள் பல. எளியவர்களுக்கு இலவச மருத்துவச் சாலையை ஏற்படுத்தி, அவர்களுக்கு மருந்துகள் கொடுக்கவும் பிறவுதவிகள் செய்து தரவும் ஏற்பாடுகள் செய்தார்.

இவர் கல்விக்காக எடுத்துக் கொண்ட முயற்சியைப் போலவே, சமூக சீர்திருத்தத்திற்காகவும் பாடுபட்டு வந்தார். பெண் கல்விக்காகவும், விதவைகளின் மறுமணத்திற்காகவும் இவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பல. கைம் பெண்கள் மீண்டும் மணந்துகொள்வதற்கு உடன்பாடான ஆதாரங்களையெல்லாம் வேத நூல்களிலிருந்து எடுத்து விளக்கினார். வங்க நூல்களிலுள்ள ஆதாரங்களையெல்லாம் துண்டுத் தாள்கள் மூலமாக அச்சிட்டு வெளியிட்டார். ஆங்கிலத்திலும் பல துண்டு வெளியீடுகளை வெளிப்படுத்தினார். இவ்வாறு செய்யப்பட்ட இடையறு முயற்சியால் 1856-ஆம் ஆண்டு 'விதவை மறு மணச் சட்டம்' என்ற ஒரு சட்டம் செய்யப்பட்டது. அதன் பிறகு அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் கியாயப்படி உரிமையாளர்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று மீண்டும் மனுச் செய்தார். அதன் காரணமாக, 1856-ஆம் ஆண்டில் அதற்கானதொரு சட்டமும் ஏற்படுத்தப்பட்டது. அவ்வாண்டிலேயே கல்கத்தாவில் முதல் முதலாக விதவா விவாகம் நடைபெற்றது. பின்னர், அத்தகைய திருமணங்கள் பெரு

கலாயின. ஹிந்துக்களிடையேயுள்ள பலதார மணத்தையும் ஒழித்துவிடப் பல முயற்சிகள் செய்தார்.

1880-ஆம் ஆண்டில் வித்தியாசாகரருக்கு ஸி. ஐ. இ. (C. I. E.) என்ற கௌரவப் பட்டம் கொடுக்கப்பட்டது. பட்டம் பதவிகளில் விருப்பம் இல்லாத இவர் அதை மறுத்தும், பலருடைய வற்புறுத்தலின் மீது அப்பட்டத்தை ஏற்றுக் கொண்டார்.

வித்தியாசாகரர், தம் உள்ளத்தில் உண்மையென்று தோன்றியதை வெளியில் அஞ்சாது எடுத்துக் கூறும் ஆற்றலுள்ளவர். ஆடம்பரத்தைச் சிறிதும் விரும்பாதவர். ஒருநாளேனும் ஆடம்பரமான உடைகளை அணிந்ததேயில்லை. இவரைக் கொடையில் கன்னன் என்றே கூற வேண்டும். வேற்றுமை கருதாது யாவருக்கும் உதவிகள் செய்வார்.

1891-ஆம் ஆண்டு தம் வாழ்க்கையின் பிற்பகுதியை ஓய்வெடுத்துக்கொண்டு கழிக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் வித்தியாசாகரர் சந்திரநாகூருக்குச் சென்றார். அங்கு இவர் நோய்வாய்ப்பட்டு இம் மண்ணுலக வாழ்க்கையை நீத்தார். இவரது அறிவின் திறமை, ஊக்கத்தின் மிகுதி, சீர்திருத்த நோக்கம், கல்வி வளர்ச்சியில் கொண்ட பற்று, நாட்டுக்குச்செய்துள்ள அரும் பெருந்தொண்டு இவற்றைப் பாராட்டிய வங்காளப் பெருமக்கள் இவரது உருவச் சிலையொன்றைச் சமஸ்கிருதக் கல்லூரியின் முன்னர் நிறுத்தி வைத்துள்ளார்கள். இப் பெரியாரை வழிகாட்டியாகக் கொண்டு, நாட்டுக்கு நற் பணியாற்றுவதே மக்கட் பண்பாகும்.

சொற்பொருள்:— வித்தியாசாகரர் - கல்விக் கடலாயுள்ளவர், ஸ்மிருதி - மறை, ஆற்றல் - வலிமை, பற்று - அன்பு, சிலை - சிற்பம்.

## வினாக்கள்

1. வித்தியாசாகரர் குடும்ப நிலையைக் கூறுக.
2. இவர் கல்விக்காகச் செய்த தொண்டுகள் யாவை?
3. சமூகச் சீர்த்திருத்தத்திற்காகச் செய்த பணிகள் யாவை?
4. வித்யாசாகரரது குணாதிசயங்களைக் கூறுக.

## பயிற்சி

சொற்களைப் பொருத்தமறிந்து சேர்க்க:

| | |
|---|---|
| பாட்டு | சென்றேன் |
| பாடம் | இனிமையானது. |
| நான் | பாடினான். |
| இசை | படித்தான். |

## இலக்கணம்

பின்வருவனவற்றில் இருந்து இயல்பு வழக்கின் வகைகளையும், தகுதி வழக்கின் வகைகளையும் காட்டுக:

கண்ணன் பாடம் படித்தான்.
வானகம் புக்கார்.
கால் கழுவச் சென்றான்.
அருமந்த பிள்ளை.
வாயில் காவலன்.
அவன் வெள்ளைக் குதிரை ஏறினான்.

## கட்டுரை

வித்யாசாகரர் செய்த தொண்டுகளை வரைக.

## 14. வானொலி

இந்நாளில் உலகமெங்கும் விழிப்பேற்பட்டிருக்கின்றது. எங்கும் ஆராய்ச்சிகள் நிகழ்கின்றன. இவ்வுலக வாழ்வுக்குரிய கருவிகளை நன்கு அடைய வேண்டும் என்ற எண்ணங்களுடன் மக்கள் முனைந்து நிற்கின்றனர். புதுமைகள் பல வெளிப்படுகின்றன. புதுமை ஒன்று தோன்றியதும், அதனை உலகம் 'அருஞ்செயல்' எனப் போற்றுகின்றது; அதனைக் கண்டறிந்தவனை 'அறிஞன்' என வாழ்த்துகிறது; இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்ட புதுமைகள் பல. அவற்றிற்கெல்லாம் காரணம் யாதெனின் மின்சார சக்தியேயாகும். முதற்புத்தகத்தில் நீங்கள் மின்சார சக்தி யின்னதென ஒரு சிறிது தெரிந்திருப்பீர்கள். மேற்கூறிய புதுமைகள் பலவற்றுள் வானொலி என்பது புத்தம் புதியதொரு விந்தையாகும். அவ்விந்தையைப் பற்றி நீங்கள் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள ஆசைப்படுவீர்களாதலால் அதைப் பற்றி இங்குக் கூறுவோம்.

மின்சார அறிஞர்கள் பலர் ஆராய்ச்சி செய்து, முடிவில் 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான், தந்தி அனுப்புவதற்கு மின்சாரக் காந்தம் இன்றியமையாதது எனக் கண்டறிந்தார்கள். மோர்ஸ் என்னும் அமெரிக்க நாட்டு விஞ்ஞானி ஒருவர் ஒவ்வோர் எழுத்தையும் புள்ளிகளாலும் கோடுகளாலும் குறிப்பிட்டு, அதை மின்சாரத்தின் உதவியால் கம்பி மூலம் அனுப்பினர். இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்ட இது மோர்ஸ் தந்தி முறை என்றே வழங்கப் படுகிறது.

பிறகு நாளடைவில் பேச்சுக் கருவியில் இணைக் கப்பட்ட கம்பிகளில் மின்சாரத்தைச் செலுத்தி, அதன் உதவியால் கணக்கற்ற மைலுக்கப் பாலுள்ள மக்களோடு எதிரில் நின்று பேசுவது போலப் பேசப் பட்டது. மேலும் கம்பியில்லாத் தந்தி மூலமாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற் குச் சங்கதிகள் தெரிவிக்கப்பட்டன.

ஆனல் வானொலியோ எனில் இடையில் எவ் விதக் கம்பியுமில்லாது ஒருவர் பேசும் மொழிகளை உலகத்திலுள்ள பலரும் கேட்கச் செய்கிறது; இத னுடைய புதுமையே புதுமை! இவ் வியத்தகு புது மையைக் கண்டுபிடித்து, உலகிற் களித்து, இறவாப் புகழ்பெற்ற பேரறிஞர் குக்லியல்மோ மார்க்கோனி என்பவராவர். இவர் இளமை முதற்கொண்டே ஆய்வுத்துறையிலே பெரு விருப்புடையவரா யிருந் தார். இவர் தமது பதினன்காவது வயதிலே ஈதர் என்னும் பொருளைப்பற்றி ஆராயத் தொடங்கினர். இதன் பயனகவே இத்தகைய கருவி நமக்குக் கிடைத்தது. இக் கருவி எவ்வாறு அமைந்துள்ளது என்பதைப்பற்றியும், எப்படி இயங்குகின்றது என்ப தைப்பற்றியும் தெரிந்துகொள்வது எளிதன்று. நீங்கள் மேல் வகுப்புகளுக்குச் சென்று படிக்கும் போது நன்ருகத் தெரிந்துகொள்வீர்கள். ஆயினும் இதைப்பற்றி இங்குச் சிறிது கூறுவோம்.

இடையில் யாதொரு கம்பியுமில்லாது, ஓரிடத் தில் உண்டாகும் ஒலியை உலகிலுள்ள பல இடங் களுக்கும் கொண்டுபோய், அங்குள்ளவர்களுக் கெல் லாம் அறிவிப்பதே வானெலி என்னுங் கருவியாகும். இவ்வொலி எவ்வாறு கேட்கப்படுகிறது? நாம் ஒரு

குளத்தில் கல்லை எறிந்தால், அஃது அத் தண்ணீரில் பல அலைகளை உண்டாக்குகிறதல்லவா? அவ்வலைகள் நாற்புறமும் பரவுகின்றன. அவ் வலைகளில் அகப் பட்ட செடி கொடிகள் அலைப்புண்டு நெடுந்தூரம் கொண்டுபோகப் படுகின்றன. அதுபோலவே, நமது கண்களுக்குத் தெரியாத மிக நுட்பமான ஒலி அலைகள் வானமெங்கும் நிறைந்திருக்கின்றன. ஆகவே, ரேடியோப் பொறியில் பேசப்படும் ஒலிகள், வானத் திற் சென்று பல மின்சார அலைகளை உண்டுபண்ணு கின்றன. அந்த அலைகள் மனோ வேகத்திலும் மிக்க வேகமாகச் சென்று தொலையிலுள்ள மற்றொரு பொறியில் தாக்குகின்றன. அதனால் முதலில் உண் டாகிய ஒலியே அங்கு மறுபடியும் உண்டாகின்றது. எனவே, இந்த வானொலியில் செய்திகளை அனுப்ப வும், அவற்றைத் திரும்ப வாங்கவும் இரண்டு வகை யான கூறுகள் உண்டு என்பது விளங்குகின்ற தல்லவா?

அவற்றுள் பேசுபவரது ஒலியை வாங்கி வானத் தில் மின்சார சக்தியின் உதவியால் பரப்பும் பொறி ஒன்று; அவ்வொலியை மறுபடியும் வாங்கி வெளி விடும் தொலைவிலுள்ள பொறி மற்றொன்று. ஆனால் முந்திய பொறி பொதுவாக ஓரிடத்தில் அமைக்கப் பெற்றிருக்கும். பிந்தியதை நாம் விலைக்கு வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யின், உலக முழுவதும் வானொலியில் பேசப்படுகின்ற எல்லாச் செய்திகளையும் தெரிந்துகொள்ளலாம்.

வானொலி மக்களுக்குக் கண்போன்ற கல்வி யறிவைப் பெருக்குகின்றது. மாணவர்களுக்கும், பெரியோர்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனித்

தொண்டு செய்கிறது; சிறந்த அறிஞரது சொற்பொழிவுகளைக் கேட்டு மக்கள் பயனடையச் செய்கின்றது; உலகத்தில் அன்றன்று நடக்கும் அரிய நிகழ்ச்சிகளை உடனுக்குடன் பரப்புகிறது; காலநிலைகளை அறிவிக்கின்றது; பொருள்களின் விலை விவரங்களை அறிவிப்பதால் பொது மக்களுக்கும், சிறப்பாக வணிகர்களுக்கும் பெருந்துணை புரிகின்றது; கைத்தொழில் வகைகளைக் கற்பிக்கின்றது. கதைகள்,



நாடகங்கள், உரையாடல்கள் முதலியவற்றைப் பரப்புவதால் இன்பப் போக்கிற்கும் பேருதவி செய்கிறது. உழைப்பாளிகளது சோர்வை நீக்கும் சஞ்சீவியாக உதவுகின்றது; சிறந்த இசைவாணர்களுடைய இன்னிசைச் சிறப்பை மக்கள் கேட்டு ஆனந்திக்கச் செய்கிறது; அகன்ற பெருங் கடலில் கப்பல்களிற் செல்வோர் இடருற்ற காலங்களில் அவர்களைக் காக்க

உதவுகின்றது; வான விமானங்களுக்கும் பெருந் துணை செய்கின்றது.

இன்னும் 'வானொலி' என்ற பெயருடனே இதழ் ஒன்று வெளி வருகிறது. இத்தாள் வானொலி நிகழ்ச்சிகளுக்கென்றே சிறப்பாக வெளி வருகிறது. நாம் இவைகளை யெல்லாம் படித்துப் பார்த்து இவற்றில் சொல்லியபடி கேட்கலாம். இவ்வியத்தகு கருவியின் விளைவெல்லாம் முயற்சியின் பயனன்றோ?

சொற்பொருள்:— சாதனம்-கருவி, ஆய்வுத்துறை-ஆராய்ச்சித்துறை, சஞ்சீவி - உயிர்ப்பிக்கும் மூலிகை.

## வினாக்கள்

1. உலகம் யாரை அறிஞன் என்றழைக்கின்றது?
2. மோர்ஸ் தந்தி முறையாவது யாது ?
3. வானொலி எவ்வாறு கேட்கப்படுகின்றது ?
4. வானொலியின் நன்மைகள் யாவை ?

## பயிற்சி

எதிர்ப் பதம் கூறுக:

புராதனம், நன்மை, அறம், வெற்றி, சிறுமை.

## இலக்கணம்

தன்வினைகளைப் பிறவினைகளாகவும், பிறவினைகளைத் தன்வினைகளாகவும் மாற்றுக:

| | |
|---|---|
| கல்வி கற்றான். | அவனை வருவித்தான். |
| நான் ஓடினேன். | சக்கரத்தை உருட்டினான். |
| கண்ணன் நடந்தான். | தம்பியை எழுப்பினான். |
| நாம் கண்டோம். | மரத்தில் ஏற்றினான். |

## கட்டுரை

வானொலியைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

## 15. அறிவால் உயர்ந்தோன்

பண்டைக் காலத்தில் வடஇந்தியாவில் மகதம் என்றொரு நாடு இருந்தது. அதன் தலைநகர் பாடலி புத்திரம் என்பது. இப்பொழுது அது பாட்னு என வழங்கப்படுகிறது. அப் பாடலிபுத்திரத்தைத் தலைநக ராகக் கொண்டு மகதநாட்டைச் சர்வார்த்தசித்தி என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்குச் சுநந்தை, முரை என்ற இரு மனைவியர் இருந்தனர். சுநந்தைக்கு ஒன்பது புதல்வர்களும், முரைக்கு மௌரியன் என்ற புதல்வனும் பிறந்தனர். சுநந் தையின் புதல்வர் நவநந்தர் என அழைக்கப்பட லாயினர். சுநந்தையே முதல் மனைவி யாதலின் அவளுக்குப் பிறந்த நவநந்தர்கள் அரசுக்கு உரிய வர்களாகப் போற்றி வளர்க்கப்பட லாயினர்.

சர்வார்த்தசித்தி வயது முதிர்ந்ததும், நாடாளும் பொறுப்பை நவநந்தர்களிடம் அளித்து, மௌரி யனைப் படைத் தலைவனாக்கினன். மௌரியன் வீர மும் குணச் சிறப்பும் மக்கள் மனத்தைக் கவர்ந்தன. எல்லோரும் அவனைப் போற்றினர். நந்தர்கள் இளமை முதலே செல்வமாக வளர்க்கப்பட்டமையால் செருக்கும் பல தீய இயல்புகளும் உடையவர்களாக விளங்கினர். பொதுமக்கள் மௌரியன்மேல் அன்பு செலுத்துவதுமட்டுமன்றி, நந்தர்கள்மேல் வெறுப்பும் கொள்ளலாயினர்.

ஏற்கனவே நந்தர்களுக்கு மௌரியன் மேற் பொறாமை யுண்டு. மக்கள் அவனிடம் காட்டும் மரி யாதையால் அது அதிகரித்தது. மௌரியன் தக்க வயதில் மணம் புரிந்து பல புதல்வரைப் பெற்றான்.

அவர்கள் தந்தையைப் போலவே அறிவும் ஆற்ற லும் நல்லியல்பும் உடையராக விளங்கினர். அப் புதல்வருள் சந்திரகுப்தன் எல்லோராலும் போற்றப் படலாயினன். நவநந்தர்களின் பொறாமை எல்லை மீறியது.

சர்வார்த்தசித்தியும் காலமானன். நவநந்தர் ஒருங்குகூடி ஆலோசித்தனர். மௌரியனுக்கும் அவன் மக்களுக்கும் நாட்டில் வளர்ந்துவரும் செல் வாக்கு, நாளடைவில் தங்கள் அரசுக்கே ஆபத்தை விளைத்துவிடும்; ஆதலால், அவர்களை ஒழித்து விடு வதே சரி என்று முடிவு கட்டினர். அதற்காகக் கொடிய சூழ்ச்சிசெய்து ஒருவித முடிவுக்கு வந்தனர்.

ஒருநாள் நாட்டின் நிலையை ஆராய்வதற்காக மௌரியனும் அவன் மக்களும் அழைக்கப்பட்டனர். நவநந்தர்களின் சூதினை உணராத மௌரியனும் அவன் மக்களும் ஆலோசனை நடத்தும் இடமாகக் கூறப்பட்ட நிலவறையுட் புக்கனர். உடனே நில வறை மூடப்பட்டது. மௌரியனும் அவன் மக்களும் உள்ளே சென்று பார்க்கையில் அங்கு ஒருவரையும் காணமல் மயங்கியவராய் வாயிலும் அடைபட்டதை யுணர்ந்து, “நாம் வஞ்சனையால் அழிக்கப்பட் டோம்” எனக் கலங்கினர். சந்திரகுப்தன் மகா மதி யூகியாதலின், ஒரு உபாயத்தால் தம்மில் ஒருவரா வது உயிருடனிருந்து, பழிக்குப் பழி வாங்க வேண் டும் எனச் சூழ்ந்து, ஒவ்வொருநாளும் சகோதரர் பட் டினியால் இறப்பதைப் பார்த்துக் கொண்டே, உயி ரைக் கையிற் பிடித்துத் தப்பும் வழியை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

நவநந்தர்கள் பகைவர் ஒழிந்தனர் என்ற மகிழ்ச்சியால் உல்லாசமாக வாழ்ந்தனர். நாட்டு மக்கள் மௌரியனையும் அவன் மக்களையும் காணு ராய் அவர்களுக்குத் தீய நந்தர் என்ன தீங்கு செய்த னரோ என ஏங்கி, மனம் புழுங்கிப் படைவலிமிக்க நந்தர்களை ஏதும் செய்ய வகையறியாது கிடந்தனர். மௌரியன் மக்கள் மறைந்த செய்தி நாடெங்கும் மெல்லப் பரவியது.

மௌரியனுக்குற்ற நண்பனாகிய வங்கநாட்டரசன் "மகா மதியூகியாகிய சந்திரகுப்தனுமா மாண்டிருப் பான்" என ஐயம்கொண்டு அதன் உண்மையை அறிய ஒரு சூழ்ச்சி செய்தான். அரக்கால் ஒரு சிங்கம் செய்து இரும்புக் கூண்டினுள் அடைத்துப் பாடலி புரத்திற் கனுப்பினான். கூண்டுக் காவலன் ஊர் நடுவில் அதனைக் கொண்டுவந்து நிறுத்திப் பறை யறைந்து, 'இக் கூண்டினைச் சிதையாமல் இச் சிங்கத் தினை வெளியேற்றுவோர்க்குப் பெரும் பரிசளிக்கப் படும்' எனக் கூவினான். மக்கள் பலர் அங்குக் கூடினர். சிங்கம் உயிருள்ளதாகவே காட்சியளித் தது; தாவியும் குதித்தும் கூண்டிற்குள் உலவியது. எவர்க்கும் அதை வெளியேற்றும் வகை புரியவில்லை.

இச்செய்தி நவநந்தர்களுக்கும் எட்டியது. அவர் கள் மதிவலிபடைத்த அமைச்சருடன் வந்து சிங்கத் தைக்கண்டனர். அவர்களுக்கும் சிங்கத்தை எவ்வாறு வெளியேற்றுவது என்பது தெரியவில்லை. அயல் நாட்டானுக்கு முன்னே தங்கள் மதிவலி பயன் படாமை கண்டு நாணம் கொண்டனர். இச் சமயம் அவர்கட்குச் சந்திரகுப்தன் நினைவு வந்தது. அவன் மட்டும் இப்பொழுது இருந்தால் இந்த இழிவு நமக்கு

ஏற்படாமல் செய்து கொள்ளலாம் என எண்ணினர். அவர்கள் எண்ணத்தை உணர்ந்த அமைச்சன் ஒருவன், நிலவறையைத் திறந்து பார்த்தால் ஒரு கால் சந்திரகுப்தன் உயிருடன் இருக்கலாம் எனக் கூறினன்.

உடனே நிலவறை திறக்கப்பட்டது. குற்றுயிருடன் கிடந்த சந்திரகுப்தனைக் கண்டனர். நவநந்தர்கள், அவனுக்கும் அவன் தந்தைக்கும் சகோதரர்கட்கும் உற்றதை அறியாதவர் போலவும், நடந்ததற்கு மிகவும் வருந்துபவர் போலவும் பாசாங்கு செய்து சந்திரகுப்தனுக்கு உபசார மொழிகள் புகன்றனர். சந்திரகுப்தனோ எவ்விதமாயினும் விடுதலை கிடைத்ததுபற்றி மகிழ்ந்து, உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு உற்சாக மடைந்தவன்போல் பேசினன்.



சந்திரகுப்தனுக்குச் சிங்கக் கூண்டைப்பற்றிக் கூறினர். உடனே அவன் சென்று அக்கூண்டைக் கண்டான். ஒரு நொடியில் 'அது உண்மைச் சிங்கமல்ல; அரக்கினல் செய்யப்பட்ட போலிச் சிங்கம்;

காவலன் கையிலுள்ள தண்டத்தில் இணைக்கப்பட்டுள்ள காந்தத்தின் சக்தியால் சிங்கத்தின் உட்புறமுள்ள இரும்புச் சலாகைகள் இழுக்கப்பட்டு, காவலன் செல்லுமிடந்தோறும் அசைவதால் சிங்கம் உயிருள்ளதுபோல் இயங்குகிறது' என்று அறிந்து கொண்டான். உடனே, பழுக்கக்காய்ந்த இரும்புக் கம்பியொன்றைக் கூண்டுக் கம்பிகளின் வழியாகச் சிங்கத்தின்மேல் வைத்ததும் அரக்கெல்லாம் உருகியோடிவிட, சிங்கம் இருந்த இடத்தில் சலாகைகளே எஞ்சிநின்றன. இவ்வாறு சிங்கம் வெளியேற்றப்பட்டதும் கூண்டுக் காவலன் மறைந்தான். எல்லோரும் சந்திரகுப்தன் மதியூகத்தைப் போற்றினர். நவநந்தர்களும் சந்திரகுப்தனுல் தங்கள் மானம் காப்பாற்றப்பட்டதை உணர்ந்து அவனைப் பாராட்டி மிகவும் மரியாதையாக நடந்துகொண்டனர். காவலன் மூலமாக இச் செய்தியை உணர்ந்த வங்கநாட்டரசனும் சந்திரகுப்தன் விடுதலை பெற்றதற்கு மகிழ்ந்தான்.

நாளடைவில் சந்திரகுப்தன் சாணக்கியரைப் போன்ற நண்பர்கள் முயற்சியாலும், மக்கள் துணையாலும் பெருஞ் சேனை யொன்றைத் திரட்டி, நவநந்தர்களை ஒழித்து முடிசூடி நெடுங்காலம் அரசாண்டான். அவன் ஆட்சியில் நாடு செழித்தது. சந்திரகுப்தன் புகழ் எங்கும் பரவியது.

சொற்பொருள்:— அளித்து - கொடுத்து, படைத்தலைவன் - சேனைத்தலைவன், இயல்பு - குணம், சூது - வஞ்சனை, நிலவறை - பூமிக்குள் உள்ள மறைவிடம், மதியூகி - அறிவாளி, சூழ்ந்து - யோசனை செய்து, தண்டம் - கம்பு, சலாகை-கம்பி, எஞ்சிநிற்க - மீதப்பட.

## வினாக்கள்

1. நவநந்தர்கள் எத்தகையராக விளங்கினர்?

2. மௌரியனையும் அவன் மக்களையும் ஒழிக்கச் செய்த உபாய மென்ன?

3. சந்திரகுப்தன் எவ்வாறு உயிரோடிருந்தான்?

4. வங்கநாட்டரசன் போலிச் சிங்கத்தை அனுப்பிய தேன்?

5. சந்திரகுப்தன் போலிச் சிங்கமென அறிந்த தெப்படி?

## பயிற்சி

பிழைகளைத் திருத்துக:

ஆக்ஷி, கண்காக்ஷி, ஊரணி, எண்ணெ, ஒண்டியாய், சிலவு, கறுமை, கேழ்வி, சிகப்பு.

## இலக்கணம்

பின் வருவனவற்றைச் சேர்த்தெழுதி, உண்டாகும் விகாரங்களையும் கூறுக:

மரம் + வேர், வாழை + பழம், சொல் + பொருள், அவனை + போற்றினர், மண் + குடம், அறம் + நெறி.

## கட்டுரை

சந்திரகுப்தன் தானே கூறுவதுபோல் இந் நிகழ்ச்சியை வரைக.

## 16. அமரசிற்பம்

இயற்கை அழகுக்கும் பெருமைக்கும் நிலைக் களமாக நின்று நிலவுவது நமது இந்திய நாடேயாம். இயல்பாய் அமைந்த எழிலாலும், அரிய சிற்பச் சிறப்பாலும் நமது நாடு என்றும் புகழிடமாக விளங்குகிறது. பழங்காலத்தில் இச்சிறந்த சிற்பக் கலையைத் தம்முயிர் போலப் பேணி வளர்த்தவர்கள் சமணர், புத்தர் முதலியோராவர். சமணர்கள் ஆக்கிய சிறந்த சிற்பங்களைச் சித்தன்னவாசல் முதலிய இடங்களிற் சிறக்கக் காணலாம். பௌத்தர்கள் அரிதின் முயன்று அழகாக அமைத்துள்ள சிற்பங்களை யெல்லாம் அஜந்தாக் குகைகளிற் காணலாம்.

அஜந்தா மலைக்குகைகள், வட இந்தியாவிலுள்ள நைஜாம் இராச்சியத்திலிருக்கிற அவுரங்கபாத் புகை வண்டி நிலையத்துக்கு வடக்கே அறுபது மைல் தொலைவில் இருக்கின்றன. அவைகள் யாவும் மக்கள் எளிதில் கண்டுபிடிக்க முடியாத மறைவான இடத்தில் அமைந்துள்ளன. இக்குகைகளுக்கு முன் அமைந்திருக்கும் மண்டபங்களும், அவைகளில் அமைக்கப்பட்டுள்ள கலை நிறைந்த சிற்பங்களும், வியப்பைத் தரும் அழியாத வண்ணச் சித்திரங்களும் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்வன வாய்த் திகழ்கின்றன. அங்கு இயற்கையாக ஓடும் பாதோரா நதியின் பண்ணொலியும், அருவிகளின் இன்னோசையும் இன்னிசைக் கீதமாக ஓய்வின்றி ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

இந்த அஜந்தாக் குகையிலுள்ள சில அற்புதச் சித்திரங்கள் மிகப் பெரிய வடிவங்களையுடையன வாயும், அவ்வடிவங்களின் முகத்தோற்றங்களைக்

குறிப்பன வாயும், பெரிய கதைகளை ஒரு சில காட்சிகளால் சித்திரித்து விடும் எழில் நலம் வாய்ந்தனவாயும், தெய்விக அழகு வாய்ந்த அணங்குகளின் கண் அழகு, கைவிரல்களின் அழகு முதலியவற்றை விளக்குவனவாயும் அமைந்திருக்கின்றன.

இத்தன்மை வாய்ந்த சித்திரங்களையுடைய இருபத்தாறு குகைகள் அங்குக் காணப்படுகின்றன. அவைகளிலொன்றில் ஞானவொளி



வீசும் முகத்துடனே பகவான் கௌதம புத்தர் திருக்கரத்தில், பிக்ஷா பாத்திரம் ஏந்திக்கொண்டு நிற்கிறார். அவருக்கு எதிரே கௌதம புத்தரின் மனைவி, மகன் இராகுலனுடன் கையில் பிச்சைகொண்டு வந்து நிற்கிறாள். கௌதமபுத்தர் அருள் கனிந்த கண்களையும், கருணை வடியும் திருமுகத்தையுமுடையவராய்க் காட்சியளிக்கின்றார். யசோதரை இராகுலன் முகங்கள், பொங்கித் ததும்பும் ஆர்வத்துடன் அன்பும்நிறைந்து காணப்படுகின்றன.

கௌதம புத்தரின் அவதாரங்களின் வரலாற்றைக் கூறும் அளவற்ற கதைகள் சிற்பங்களில் செதுக்கப்பட்டு இருக்கின்றன. புத்தரின் பழைய அவதாரங்களில் ஒன்றாகிய 'அவலோகித போதி சத்துவரின்' சித்திரம் அஜந்தாவிலுள்ள அரிய சித்திரங்களில் ஒன்று. இந்தப் பெருமையுடைய உருவத்தின் முகத்திலே உயிர்க்களை ததும்புகிறது. கண்களின் கீழ்நோக்கானது, இத் தெய்விகப் பெரியார் மண்ணக மக்களிடம் கொண்டிருக்கும் அருளைக் குறிப்பிடுகிறது.

அஜந்தா ஓவியக்காரர்கள், தாங்கள் இயற்றிய ஓவியங்களில் உணர்ச்சி பாவங்களை முகத்திலும்,



அவயவங்களின் அமைப்பிலும் கூடக் கொண்டுவரக்கூடிய அற்புதத் திறமை வாய்ந்திருந்தார்கள்; எத்தனையோ வகையான உணர்ச்சிகளை யெல்லாம் காட்டியிருக்கிறார்கள். அவைகளில் ஒன்று, துக்கச் செய்தி கொண்டு வந்திருக்கும் அந்த மனிதனின் முகத் தோற்றமும், அவன் கை அமைந்திருக்கும் வகையும், தடியூன்றிய கை அவனது முகவாய்க்கட்டையைத் தாங்கி நிற்கும் தோற்றமும்— 'எல்லாம் போய்விட்டது, முழுதும் நாசம் ஆகிவிட்டது' என்னும் பாவத்தை மிகவும் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன. மனிதர்களுடைய மன உணர்ச்சிகளையன்றி, விலங்குகளின் மன உணர்ச்சிகளையும் மிக விரிவாகக் காட்டியுள்ளார்கள்.

விலங்கு சம்பந்தமான கதைகளில் சிறந்தது வெள்ளை யானையின் கதையாகும். புத்த பகவான் முற் பிறப்பொன்றில் இமாலயத்தில் வெள்ளை யானையாக அவதரித்தார். பிரயாகை அரசனின் ஆட்கள், அந்த வெள்ளை யானையைப் பிடித்துக்கொண்டு வந்து விட்டார்கள். யானை உணவு கொள்ளாமலும், தண்ணீர் குடியாமலும் இருந்ததைக் கண்டு, மன்னன் அதை அவிழ்த்துவிட்டு, அதன் பின்னால் தானும் குதிரைமேல் சென்றான். அந்த வெள்ளை யானை



யானது, இமயகிரியில் இருந்த தன்னுடைய வயதான தாய் தந்தையரை யடைந்து, அவர்களைத் தாமரை மலர்களால் வழிபாடு புரிகின்றது. இந்தக் கதையைச் சித்திரிக்கும் யானைச் சித்திரங்களில் சோகம், கோபம், பரபரப்பு, அன்பு, ஆனந்தம் முதலிய பல உணர்ச்சிகளைக் காட்டியிருக்கிறார்கள். யானையின் சிறு கண்களே இவ்வளவு உணர்ச்சிகளையும் வெளியிடச் செய்திருக்கும் சிறப்பு மிக வியப்பாக விருக்

கிறது. சிறைப்பட்டுச் செல்லும் யானையின் கண்க ளில் கோபம் கலந்த சோகமும், விடுதலையான யானை யின் கண்களில் மகிழ்ச்சி கலந்த பரபரப்பும், பூசை செய்யும்போது பக்தியும் திருப்தியும் புலனாகும் வண்ணம் சித்திரங்கள் அமைந்திருக்கின்றன. இம் மாதிரியான எத்தனையோ கதைகளை அஜந்தாக் குகைச் சுவர்களில் சித்திரித்திருக்கிறார்கள்.



பௌத்த முனிவர்கள் தங்கள் சமயக் கதை களையே பெரும்பாலும் சித்திரித்தார்களாயினும், பழந்தமிழ் மக்கள் எவ்வளவு சிறந்த வாழ்க்கையை நடத்தினார்கள் என்பதையும் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் எவ்வாறு சங்கீதம், நடனம் ஆகிய கலை களில் தேர்ச்சியடைந்திருந்தார்கள் என்பதையும், அவற்றை எப்படி அனுபவித்தார்கள் என்பதையும்

காட்டியுள்ளார்கள். அக்கால மக்கள் உடுத்திய ஆடைகளையும், அணிந்திருந்த வேலைப்பாடமைந்த அணிகலன்களையும், விருந்தோம்புதலையும், நாகரிக வாழ்க்கையினையும் சித்திரித்துக் காட்டியுள்ளார்கள். ஒரு சிற்பத்தில், காசி தேசத்து அரையன் நாக லோகத்து அரசரை வரவேற்று உபசரிக்குங்காட்சி காட்டப்பட்டுள்ளது. அந்த அரசர்களும், இராணி களும், அரசகுமாரர்களும், அரசகுமாரிகளும் எத் தகைய அழகுவாய்ந்த உடலமைப்புடையவர்களாய் இருந்தார்கள் என்பதையும், உபசரிக்கின்றவர், உப சரிக்கப்படுகின்றவர் ஆகிய இருவரது முகங்களிலும் உண்டாகும் நட்பின் நயத்தையும், அவர்களது உரையாடல்களைப் பரிவாரங்கள் எவ்வளவு ஆர்வத் தோடு நோக்குகிறார்கள் என்பதையும், அலங்கரித் திருக்கும் அமைப்புகளையும் பார்க்குங்கால் மிக வியப் பைத் தருவனவாய்க் காட்சியளிக்கின்றன. அக் குகைகளில் எவ்விடங்களை நோக்கினும் சித்திரமில் லாத இடத்தைக் காணமுடியாது.

அங்குள்ள எல்லா அற்புதங்களைக் காட்டிலும் சித்திரங்களில் தீட்டப்பட்டுள்ள வண்ணங்களின் வியப்பே மிகச் சிறந்ததாயிருக்கின்றது. வண்ணம் தீட்டி இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்திருப்பினும், அவ் வண்ணங்களின் பளபளப்பு, பார்க்கும் மக்களை மலைக்கச் செய்கிறது. இத்தகைய பழமையான நாக ரிகத்தைக் காட்டும் அஜந்தாக் குகைகளை, இன்று நைஜாம் அரசாங்கத்தார் பெருமுயற்சி யெடுத்துப் பாதுகாத்து வருகின்றனர். இதைப்போல் நம் தென் னிந்தியாவிலுள்ள கோவில்களிலும், குகைகளிலும் உள்ள பழமையான நாகரிகத்தைக்காட்டும் சின்னங் களையும் அரசாங்கத்தார் பாதுகாக்கவேண்டும்.

சொற்பொருள்:— நிலைக்களம்-இருப்பிடம், எழில்-அழகு, பேணி-போற்றி, பூங்கா-பூஞ்சோலை, கழகம்-சங்கம், திகழ்கின்றன-விளங்குகின்றன, மதி-சந்திரன்.

## வினாக்கள்

1. அஜந்தா எங்கு எதன் பொருட்டு யாரால் அமைக்கப்பட்டது?
2. அஜந்தா அமைந்துள்ள இடத்தை விளக்குக.
3. அஜந்தாவிலுள்ள சித்திரங்களின் சிறப்பைக் கூறுக.
4. அங்குள்ள வண்ண ஓவியங்களின் சிறப்பென்ன?

## பயிற்சி

ஏற்ற இடங்களில் தகுந்த நிறுத்துக் குறிகளை இடுக:

தம்பி பாடம் படித்தாயா
ஆகா இது மிகவும் அழகாயிருக்கிறது
ஆசிரியர் பாட்டைப்படி என்றார்
பாரதியார் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாடி யிருக்கிறார்

## இலக்கணம்

பின் வரும் வினைகளுள் ஏவல் வினை, வியங்கோள் வினை, செயப்படுபொருள் குன்றியவினை, குன்றாவினை, இவை எனக் கூறுக:

தாயின் மணிக்கொடி பாரீர். தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர். நீ செல்வாய். அவர் வாழ்க. நீ செல்க. அவன் படித்தான். நான் சென்றேன். சிறுவர் விளையாடினர். புத்தகம் வாங்கினான்.

## கட்டுரை

நீ பார்த்துள்ள சிற்பங்களைப்பற்றி வரைக.

## 17. குதிரை பிடிக்கத் தூண்டில் போட்டது

அவிவேக பூரண குரு என்று ஓர் ஆசிரியர் இருந்தார். அவருக்கு ஊழியஞ் செய்தற்பொருட்டு மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன் என்று பெயர்பெற்ற சீடர்கள் ஐந்து பேர் அவர் மடத்தில் இருந்தனர். ஒரு நாள் இந்தச் சீடரும் குருவும் ஆகிய ஆறுபேரும் காலையிலெழுந்து, மற்றச் சீடர்களையும் கண்டு நலமறிதற் பொருட்டுச் சுற்றுக் கிராமங்களுக்குக் கால்நடையாய் நடந்து செல்லத் தீர்மானித்தார்கள்.

அவ்வாறே ஒரு நாள் குருவும் சீடரும் வெயிலுக்குப் பயந்து, அதிகாலையில் கோழி கூவினவுடனே எழுந்து புறப்பட்டார்கள். தளர் நடையாக நடந்து போகின்றதனால், காத வழிகூடக் கடக்காததற்குள்ளே வெயிலேறினதைக் கண்டு, வழியில் இருந்த ஒரு குளிர்ந்த சோலையில் தங்கினார்கள். அங்கே யாவர்களும் இளைப்பாறிக் கொண்டிருக்கையில், மிலேச்சன் என்பவன் அருகில் இருந்த ஏரியிற் கால் கழுவப் போனான்.

ஏரிக் கரையில் ஐயனார் கோவிலொன்று இருந்தது. அக்கோயிலுக்கு முன்னதாக, ஐயனாரப்பனைக் குறித்து வேண்டிக்கொண்டு, மண்ணினாற் செய்து சுட்டுப் பன்னிறந் தீட்டிக் கொண்டுவந்து வைக்கப்பட்ட ஒரு பெரிய குதிரை இருந்தது. அக்குதிரையின் நிழல், ஏரி நிறையத் தெளிந்திருந்த தண்ணீரிற் காணப்பட்டது. ஏரியில் கால் கழுவச் சென்ற மிலேச்சன் அதைக் கண்டு தண்ணீருக்குள்ளே குதிரை நிற்கிறதென்று நினைத்து, அதிசய

மடைந்து, பின்பு கரையிலே காணப்படும் மண் குதிரையைப்போல நிறமும் உயரமும், பருமனும், சாயலுமாயிருக்கக் கண்டு, தண்ணீரிலே தோன்றி யது, அதன் நிழலாயிருக்க வேண்டுமென்று ஐயப் பட்டான். ஐயுற்ருலும், அப்போது வீசிய காற்ருல் தண்ணீர் அசைய, அதிலே காணப்பட்ட குதிரை நிழலும் அசையத் தலைப்பட்டது. அதைப் பார்த் துக் கரைமேலிருக்கும் குதிரையைக் காணும்பொ ழுது, அஃது அசைவொன்றுமில்லாதிருந்ததினுல், நீருக்குள்ளே நிற்கும் குதிரை வேறென்றும், உயி ருள்ளதென்றும் நிச்சயம் பண்ணினுன். பின்னும் அதை ஓட்டுவதற்கு முயற்சித்து, வாயினுல் கூச்ச லிட்டுக் கற்களைக்கொண்டு எறிந்தான். எறிந்த மாத்திரத்தில், தண்ணீர் அதிகமாக ஆடி அலைந்தெ ழும்பக் குதிரையும் தலைதூக்கிக் காலுதறி, உடல் துடித்துத் துள்ளினதாக இவன் கண்ணுக்குத் தோன்றியது. அதைக் கண்ட மிலேச்சன் பயந்து, காலும் அலம்பாமல் ஓடிவந்து, மற்றவர்களிடத்தில் தான் கண்டதையெல்லாம் சொன்னுன்.

அந்தப் புதுமையைக் கேட்ட எல்லோரும் திடீரென்றெழுந்து ஓடிச் சென்று ஏரிக்குட் பார்க் கும்பொழுது, மிலேச்சன் சொன்னதைக் கண்டு மெய்யென்று நம்பி, 'தண்ணீரில் இறங்கினுல் தவளை கடிக்கும்' என்பவரைப்போல, அவர்கள் ஏரியிலிறங் கப் பயந்து, இறங்காமலே ஏரிக்குள்ளிருக்கிற குதி ரையைப் பிடிப்பதற்கு ஏற்ற உபாயத்தைத் தேடத் தொடங்கினுர்கள்.

அவர்களில் ஒருவன், "கொள்ளைக் கண்டால் வாயைத் திறப்பது குதிரைக்கு இயல்பாகையால்,

கொள்ளை வேகவைத்து வைத்தால், அந்த வாசனையைக்கண்டு குதிரை அதைத்தின்பதற்குமேலேவரும். அப்பொழுது பிடித்துக் கொள்ளலாம்'' என்றான். மற்றொருவன் ''பசுமையாயிருக்கிற ஒருபிடி அறுகம் புல்லைப் பிடுங்கிக் கொண்டு போய்த் தண்ணீருக்கு மேலே காட்டினால், குதிரை அதைத் தின்னத் தாவி எழும்பும்; அத் தருணத்தில் அதைப் பற்றிக் கொள்ளலாம்'' என்றான்; பின்னொருவன், ''எருமை போல் ஏரியில் விழுந்தால், தவளை தானே குதித்தோடும், என்பதனால், எருமைக் கடாவை ஓட்டிக் கொண்டு போய்த் தண்ணீரில் விட்டால் அது நான்கு பக்கமும் ஓடியாடிக் குதிக்கும்; அந்தத் துன்பம் பொறுக்க மாட்டாமல் குதிரை கரையேறிவரும்; அச் சமயத்தில் வருத்தமில்லாமல் பிடித்துக் கொள்ளலாம்''என்றான். இன்னுமொருவன், ''பெட்டைக்குதிரை கனைக்கிறது போலக் கரைமேலிருந்தபடி கனைத்தால், குதிரை மேலே வரும். அந்நேரத்தில் தப்பாமல் கைவசப்படுத்திக் கொள்ளலாம்'' என்றான்; இவ்வாறு நால்வரும் கூறிய உபாயங்களெல்லாம் தனக்குச் சம்மதமில்லாமையால் மிலேச்சன், அவை 'சரியன்று' என்று மறுத்து, ''நானொரு உபாயஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்; தூண்டில் போட்டு மீன் பிடிக்கிறது போல இக் குதிரையையும் பிடித்துக் கரைமேலிழுக்க வேண்டும்'' என்றான். அதற்கு அவர்களெல்லாம் ''ஆம், ஆம், இது நல்ல உபாயந்தான்'' என்று உடன்பட்டார்கள்.

தங்களுக்குள்ளே ஒருவன் வைத்திருந்த கருக்கு அரிவாளைத் தூண்டில் முள்ளாகவும், வழியில் உண்பதற்குத் தாங்கள் கொண்டுவந்த கட்டுச் சாதத்தைத் தூண்டிலின் இரையாகவும், குருவானர் கட்டியிருந்த

சென்னை-600 008
13564

தலைப்பாகையைத் தூண்டிற் கயிறாகவும், அவர் கையிலே பிடிக்கிற பித்தளைப் பூண்கட்டிய தடியைத் தூண்டிற் கோலாகவும் கொள்வதெனத் தீர்மானித்தனர்; எப்படியும் நினைத்த காரியத்தை முடிக்க வேண்டுமென்று தொடங்கி, அப்படியே கட்டுச்சோற்று மூட்டையைக் கருக்கரிவாளின் முனையிலே கோத்து, அடியிலே தலைப்பாகையைக்



கட்டி, அதைத் தடியிலே சுற்றி முடிந்து, சீடர்களில் நால்வர் தண்ணீருக்குள் குதிரை காணப்படுகிற இடத்தில் எறிந்தார்கள். அது தொப்பென்று விழுந்த விசையோடு தண்ணீர் மிகுதியுந் ததும்பினதால், அங்கே தோன்றிய குதிரையும் துள்ளி யெழுந்து, நெளிந்து, குதித்துக் கிளம்பினது போலத் தெரிந்ததனால் எல்லோரும் பயந்தோடினார்கள்.

தூண்டிற் கோலாகிய தடியைப் பிடித்திருந்த ஒருவன் மாத்திரம் அதைக் கைவிட்டு ஓடாமல் நின்ருன். ஏரியிலெழுந்த அலையமர்ந்த பின்பு, அதிலுள்ள பெரிய மீன்கள் மெள்ளமெள்ள அணுகிக் கட்டுச்சாத மூட்டையைக் கடித்திழுத்த குறிப்பைக் கண்டு, கைச்சைகை செய்து, மற்றவர்களை அழைத்து "குதிரை இப்பொழுது தான் இரையைக் கடிக்கிறது" என்ருன். சிறிது நேரஞ் சென்ற பிறகு, தலைப்பாகையை இழுக்கச் சீலையும் சாதமும் போனதனுல், பாகையுடனே கட்டின கருக்கரிவாளானது அங்கே முளைத்திருந்த கோரையில் மாட்டிக்கொண்டது. அவன், அது குதிரை வாயில் மாட்டிக்கொண்டதாக நினைத்து "குதிரை வாயில் தூண்டில் மாட்டின போதே, குதிரை நம்முடையதாய் விட்டது" என்று மகிழ்ச்சியாய்க் கூப்பிட, அவர்கள் அனைவரும் ஓடி வந்து, தலைப்பாகையைப் பிடித்திழுக்கப் பாகை பழையதாகையால் அறுந்துபோயிற்று. எல்லோரும் ஒருமிக்க மல்லாந்து கீழே விழுந்தார்கள்.

இவ்வாறு அவர்கள் விழுந்த சமயத்தில் குடியானவன் ஒருவன் வந்து "இஃதென்ன?" என்று வினவ, அவர்கள் அவனிடத்தில் எல்லாவற்றையும் ஒழுங்காகச் சொன்னுர்கள். அதைக் கேட்ட அவன், இவர்களது அறியாமையைக் கண்டு, கரைமேலிருந்த குதிரையை ஆடையினுலே மறைக்க நீருள் தோன்றிய குதிரை மறைந்தது. அவன் அதை அவர்களுக்குக் காட்டி, அவர்களது மயக்கத்தைப் போக்கினுன்.

பிறகு அவன் இவர்களைச் சூதுவாது தெரியாத சாதுவான மனிதர்கள் என்றுணர்ந்து மனம் இரங்கி "என்னிடத்தில் ஒரு நொண்டிக் கிழக்குதிரை யுண்டு;

அது உங்கள் வழிப்பயணத்திற்கு உதவும்; அதற்காக நீங்கள் பணங் காசு கொடுக்க வேண்டியதில்லை; நான் இலவசமாகத் தருகிறேன். என்னூருக்கு வாருங்கள்'' என்று அழைத்துக்கொண்டு போனன்.

சொற்பொருள்:—அவிவேகம் - அறியாமை, புதுமை- அதிசயம், உபாயம் - தந்திரம், இலவசம் - விலையில்லாமல் இனமாகவுள்ளது.

## வினக்கள்

1. கால் கழுவச் சென்ற மிலேச்சன் நீருள் கண்டதென்ன?

2. குதிரை பிடிப்பதற்குச் செய்த உபாயம் என்ன?

3. இப்பாடத்தில் வரும் பழமொழியின் சந்தர்ப்பம் கூறுக.

## பயிற்சி

பின் வருவனவற்றைப் பிரித்தெழுதுக.

| | |
|---|---|
| ஓடிப் போனன், | தமிழ்ப் புலவர், |
| பத்துப் பாட்டு, | அந்தப் பக்கம், |
| போய்ப் பார், | உண்ணப் போ. |

## இலக்கணம்

சொல்லிலக்கணம் கூறுக:

கண்ணன், படித்தான், பாடினேம், மரம் வளர்ந்தது, பறவை, மலைகள், வருவார்.

## கட்டுரை

நீ நூல் நிலையத்தில் படித்த புத்தகத்திலிருந்து ஒரு கதையை வரை.

# 18. ஐக்கிய நாணயச் சங்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய பற்பல புதுமைகளுள் ஐக்கிய நாணயச் சங்க இயக்கமும் ஒன்றாகும். இவ்வியக்கம் முதன்முதலில் ஜெர்மனியில் ரெய்ப்பீசன் என்ற ஒருவரால் ஒரு சிறிய கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டது. இது மிக விரைவில் உலகமெல்லாம் பரவி, ஏழை மக்களுக்குப் பெருந்தொண்டு ஆற்றி வருகிறது. இதனால் ஏற்றத் தாழ்வு என்னும் சமூக நோய்கள் நாளடைவில் ஒழிந்துபோம். இதன் கொள்கைகளையும் நன்மைகளையும் கவனித்த நம் அரசாங்கத்தார், வறுமைப்பிணியிலாழ்ந்து வாடும் நமக்குச் சிறந்த அருமருந்தாக இதனை 1904-ஆம் ஆண்டில் இந்தியாவில் சட்டமுறையாக நிறுவினர். அன்று முதல் இவ்வியக்கம் வலுப்பெற்று, நாடு நகரங்கள் தோறும் பெருகி, இந்நாளில் நமது நாட்டில் இலட்சத்துக்கு மேற்பட்ட சங்கங்களை உடைய பெரிய இயக்கமாக வளர்ந்து வருவது பாராட்டுக்குரியது. ஆயினும், இச் சங்கத்தை உழவர்கள் சிறிய கிராமங்கள்தோறும் அமைத்தல் வேண்டும்.

தொழிலாளிகள்,விவசாயிகள், முதலிய சொற்ப ஊதியமுள்ளவர்களுக்குள் சிக்கனம், சுயஉதவி, கூட்டுறவு முதலியவற்றைப் பெருக்குதல், வேளாண்மையும், கைத்தொழிலும் வளர்ந்தோங்கப் பணம் கடனாகக் கொடுத்துதவுதல் ஆகிய இவைகளே ஐக்கிய நாணயச் சங்கத்தின் சிறந்த நோக்கங்களாகும்.

இச் சங்கத்தின் நோக்கங்களை நமது நாட்டு மக்கள் இன்னும் செவ்வையாக உணர்ந்திலர். உணர்வார்களானால் ஒவ்வொரு கிராமத்திலும் இத்

தகைய சங்கம் ஒன்றை அக்கிராமத்தார் விரும்புவது இயல்பேயாம். அவர்கள் ஒன்றுகூடி, விண்ணப்பம் ஒன்றெழுதிக் கூட்டுறவுச் சங்க அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும். அதன்மேல் அச்சங்க அலுவலாளர் ஒருவர் அக் கிராமத்திற்குச் சென்று, சங்கத்தால் அம்மக்கட்கு உண்டாகும் நன்மைகளையும், அவர்கள் சங்கத்தைப் பலப்படுத்த வேண்டிய முறைகளையும் தெளிவாக விளக்குவார்கள். பின்னர் அக்கிராமத்தார் ஒன்றுகூடி ஆழ்ந்து யோசித்து, ஐக்கிய நாணயச் சங்கம் ஒன்றை நிறுவ வேண்டுமென மேலதிகாரியை வேண்டி விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும். உடனே அக் கிராமத்தில் ஐக்கிய நாணயச் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

இச் சங்கத்தில் பத்து அங்கத்தினர்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். சங்கத்தில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆடவர் பெண்டிர் அனைவரும் சேரலாம். ஜாதி வேறுபாடுகளோ, பணக்காரர் ஏழை என்னும் உயர்வு தாழ்வுகளோ இச்சங்கத்தில் இல்லை. இதில் அங்கத்தினராகச் சேர்பவர்களுக்கு இருக்கவேண்டியன நாணயமும் நன்னடத்தைகளுமேயாம். அங்கத்தினர் அனைவர்க்குஞ் சங்கத்தில் சமவுரிமை உண்டு. ஆண்டுக்கு ஒரு முறை இச்சங்கத்தின் அங்கத்தினர்கள், தன்னலங் கருதாது மக்களுக்குத் தொண்டாற்றுதலையே கடமையாகக் கொண்ட அறிஞர் ஐவரைப் பஞ்சாயத்தாராகத் தேர்ந்தெடுப்பார்கள். அவ்வைவரும் தமக்குள் ஒருவரைச் செயலாளராகவும், ஒருவரைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்துக் கொண்டு, சங்க வேலைகளையெல்லாம் செவ்வனே நடத்துவார்கள். ஒவ்வோர் ஆண்டு முடிவிலும், தாங்கள் செய்து முடித்த வேலை

களைப் பற்றிய கணக்குகளை யெல்லாம் அங்கத்தினர் கூடிய சபைக்கு அறிவிப்பார்கள்.

இவ்வாறு வேலை செய்துவரும் கழகங்கள் பத்து அல்லது பதினைந்து சேர்ந்து ஒரு கூட்டுக்கழகம் (யூனியன்) ஆகும். ஒவ்வொரு யூனியனுக்கும் ஐந்து இயக்குநர்கள் இருப்பார்கள். யூனியனில் இணைக்கப்பட்டுள்ள கழகங்களைக் கவனிக்க மேற்பார்வையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கழகங்கள் செய்துவரும் வேலையைக் கவனிப்பதே அவருடைய அலுவலாகும். எல்லாக் கழகங்களுக்கும் வேண்டும் போது பணவுதவிபுரிய ஒவ்வொரு ஜில்லாவின் மத்திய இடத்திலும் மத்திய பாங்கு நிறுவப்பட்டுள்ளது. யூனியன்களைச் செவ்வைப் படுத்த ஜில்லா பெடரேஷனும், மாகாணத்திற்கு ஒரு யூனியனும், எல்லாவற்றிற்கும் மேலாக அகில இந்தியாவிற்குமே ஓர் ஐக்கியக் கமிட்டியும் ஏற்பட்டுள்ளன.

ஒரு மாகாணத்தில் இருக்கிற கழகங்களுக்கு ஒரு ரிஜிஸ்தரார் நியமிக்கப்பட்டுள்ளார். ஒவ்வொரு ஜில்லாவுக்கு அல்லது இரண்டு ஜில்லாக்களுக்கு ஓர் உதவி ரிஜிஸ்தரார் நியமிக்கப் பட்டுள்ளார். கழகங்களை மேற்பார்வையிடுதற்குப் ப்ரிசோதனைக்காரர்கள் நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள். இவர்கள் யாவர்களும் அரசாங்க அலுவலாளர்களே ஆவர்.

கழகத்தில் நடைபெறும் செயல்கள் அனைத்தும் வெளிப்படையாகவே பொது இடங்களில் கூட்டங் கூடி நடத்தப்படும். நடவடிக்கைகள் கூட்டப் புத்தகத்தில் குறிக்கப்படும். இவ்வாறு நடவடிக்கைகள் வெளிப்படையாகவே நடப்பதால், தாட்சணியமோ,

இரகசியமோ ஏற்படுவதில்லை; உண்மையாயும் தெளிவாயும் இருக்கும்.

கழகத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஒரு பங்காவது எடுத்தே தீரவேண்டும். ஒரு பங்கு இத்தனை ரூபாயென்று சங்கத்துக்குத் தக்கவாறு வேறுபடும். சங்கத்திலுள்ள அங்கத்தினர்களுக்குச் சிக்கன முறையைக் கற்றுக் கொடுப்பதற்காகச் சங்கத்தில் பலவித டெபாசிட்டுகள் (Fixed and Recurring Deposits) ஏற்படுத்தி, அவரவர்களுக்கு இயன்ற அளவில் வருமானத்தைப் பெருக்கியும், செலவைக் குறைத்தும் பணத்தை மீதப்படுத்தி, மேற்கூறிய டெபாசிட்டுகளில் போட்டு வைக்குமாறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சங்கத்தில் குறைந்த வட்டிக்கே கடன் தரப்படுகிறது. விவசாயத்திற்கும், வாணிபத்திற்கும், மிக்க அவசியமான குடும்பச் செலவுக்குமே கடன் கொடுக்கப்படுகிறது. வாங்குவோர் வசதிப்படி திருப்பிக் கொடுக்கும் காலத்தைக் கவனித்தே அது தரப்படும். அங்கத்தினர் குறித்த காலத்தில் கடனைத் தீர்த்துவிட வற்புறுத்தப்படுவர். இவ்வாறு கடன் கொடுப்பதில் சாதியினால் உயர்வு தாழ்வு என்னும் வேறுபாடில்லை.

குறைந்த வட்டிக்குக் கழகத்தில் கடன் வாங்கும் ஏழை விவசாயிகள், தொழிலாளர் முதலியவர்கள் அப்பணத்தைக்கொண்டு தங்கள் வேளாண்மையையோ, கைத்தொழிலையோ பெருக்கிக்கொள்ள வசதியுண்டாகிறது. ஒருவரிடம் கடன் வாங்கி, அவர் வேண்டும்போது கடனைத் திருப்பித் தருவதும், அவர் குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்கத் தவறி அல்ல

ஊறுவதும் மிகுந்த கவலைக்கிடமான செயல்களாகும். இவ்வாறின்றி, பலர் சேர்ந்து போட்டுள்ள தொகையிலிருந்து ஒரு சங்க மூலமாகச் சகல வசதிகளுடனே குறைந்த வட்டிக்குக் கடன் வாங்குவது, அல்லலுரு மலும் கவலைப்படாமலும் இருத்தற்குரிய சிறந்த முறையாகும்.

இத்தகைய கூட்டுறவு இயக்கத்தாலேயே மிகவும் வறுமையுள் ஆழ்ந்துகிடந்த அயர்லாந்து, டென்மார்க் முதலிய நாடுகள் வெகு விரைவில் தங்கள் செல்வ நிலையை உயர்த்திக்கொண்டன. இக் கூட்டுறவு இயக்கம் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது. இவற்றுள் முதன்மை பெற்றுள்ளது ரஷ்யா. இத்தேசத்தில் 37000 சங்கங்களுக்கு மேற்பட்டிருக்கின்றன. ஆஸ்திரியாவில் 12000 சங்கங்களும், பிரான்சில் 4000 சங்கங்களும், ஜப்பானில் 10455 சங்கங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இக்கணக்குச் சில ஆண்டுகளுக்கு முன் எடுத்ததாகையால் இப்பொழுது அவற்றின் தொகை அதிகப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வளவு தீவிரமாகப் பரவியதே இயக்கத்தின் பயனுக்குப் போதுமான சான்றாகும்.

ஆதலால், நாம் நம்முடைய நாட்டிலிருக்கிற ஒவ்வொரு சிற்றூரிலும் இக் கழகங்களை நிறுவி அரசாங்க உதவியைத் துணையாகக் கொண்டு நமது தொழில்களை வளர்க்க முன்வரல் வேண்டும். தமக்குத்தாமே உதவிபுரிந்து கொள்ளக் கூடிய இம் முறையைக் கைக்கொண்டு நடந்து நன்மை பெறுவது நம்மவர்க்குக் கடமையும் உரிமையுமாகும்.

சொற்பொருள்:— ஐக்கியம்-ஒற்றுமை, தீவிரம்-மிகுதி, நிறுவி-ஏற்படுத்தி, தொண்டு-பணி, பஞ்சாயம்-ஐவர் கூடிய கூட்டம், அல்லல்-துன்பம், ஐயம்-சந்தேகம்.

### வினாக்கள்

1. இவ்வியக்கம் முதன் முதல் யாரால் ஏற்படுத்தப் பட்டது?
2. இச்சங்கங்களின் முக்கிய நோக்கங்கள் யாவை?
3. ஐக்கிய நாணயச் சங்கம் ஏற்படுத்துவது எப்படி?
4. அயல் நாடுகளில் இச்சங்க வளர்ச்சிபற்றிக் கூறுக.

### பயிற்சி

பின் வருவனவற்றைச் சேர்த்தெழுதி எவ்வாறு சேர்ந்தன என்று எழுதுக:

| | |
|---|---|
| தனி + தனி. | வாழை + பழம். |
| எல்லை + கண்டான். | தேடி + சென்றான். |
| நாய் + குட்டி | அந்த + பையன். |

### இலக்கணம்

பின் வருவனவற்றுள் இடைச்சொற்கள் இன்ன பொருளில் வந்துள்ளன எனக் கூறுக:

சத்தியமே ஜெயம், அவனே இதைக் கொடுத்தான், தனம் சிறியதாயினும் தார்வேந்தர் மனம் சிறியராவரோ, நானும் அவனும் வந்தோம், நாயும் தின்னாத சோறு, அவருள் இவரே நல்லார், யானைக்கும் வழுக்கும் நிலம்.

### கட்டுரை

உங்கள் ஊரில் நடைபெறும் ஐக்கிய நாணயச் சங்கத்தைப்பற்றிக் கட்டுரை வரைக.

# 19. வீரத்தாய்

## (நாடகம்)

### காட்சி 1

இடம்--மணிபுரி.

காலம்—இரவு.

பாத்திரங்கள்—சேனாதிபதியும், அமைச்சனும்.

(மணிபுரியில் உள் மாளிகையில் சேனாதிபதியும், அமைச்சனும் பேசுகின்றனர்)

சேனாதிபதி:— மன்னன் மதுவினில் மூழ்கி மயங்கிக் கிடக்கின்றான். இராணி விசயாள் எங்கோ சென்று விட்டாள். இனி இம் மணிபுரி ஆட்சி எமதே. உனக்கே அமைச்சும்.

அமைச்சன்:— தானைத் தலைவ! நமக்குப் பகைவர்கள் இலர்; ஆயினும் நாளைத் தோன்றும் அரசியோ வீரமுடையாள்; கலைச் செல்வி.

சேனாதிபதி:— அஞ்ச வேண்டாம். அவள் ஒரு பெண்ணே. ஆடையணிகளால் அழகு செய்துகொள்வதும், ஆடவர்க்கு அடங்கி வாழ்வதும் ஆகும் அரிவையர் குலம். மக்கள் பகுதியில் வலியற்ற பகுதி மங்கையர் குலம் அன்றோ? ஆண் பகுதியே ஆண்மைக் குலம். சேனையெல்லாம் என் வசம் இருக்கச் சேட்டை யாரிடத்தில்?

அமைச்சன்:— (சிரித்துக்கொண்டு) வலிமையை வழங்கியது எது? இந்நானிலத்தை நடத்துவது யாது? மங்கையர் குலமன்றோ? அன்றியும், மன்னவன் மைந்தன், ஆட்சி எனக்குரியது என எழுவான்.

சேனுதிபதி:—மன்னன் மைந்தனைக் கலையும் ஒழுக்கமுமின்றி நடைப்பிணமாகவன்றோ நான் வைத்திருக்கின்றேன். இச் சூழ்ச்சியை நீ அறியாய்.

அமைச்சன்:— ஆமாம்; அறிவில்லாதவன் ஆவியில்லாதவனே. தந்திரத்தில் தேர்ந்த சமர்த்தன் அன்றோ நீ? ஆயினும், உனது எண்ணந்தான் என்னையோ?

சேனுதிபதி:— பண்டாரத்தைக் கைப்பற்றுதல் வேண்டும். நாட்டுக்கு மன்னனுக முடிசூட வேண்டும். காலத்தை வீணுக்க வேண்டாம். ஆவன செய்க.

(சேனுதிபதி இளவரசைக் காட்டகத்தே யுள்ள ஒரு கிழவனிடத்தில் விட்டு வைத்திருக்கின்ருன். அக்கிழவனுடன் ஒரு பெரியார் இருந்துகொண்டு, இளவரசுக்கு விற்ருெழில் கற்பிக்கின்ருர். சேனுதிபதி முடிசூட்டிக்கொள்ள, அமைச்சன் ஆவன செய்கின்ருன்; எங்கும் ஓலை போக்குகின்ருன். அரசர் யாவரும் வருகின்றனர்.)

## காட்சி 2

இடம்:— மாளிகையின் ஒரு புறம்.
காலம்:— காலை.
பாத்திரங்கள்:— சேனுதிபதி, மன்னர்கள்.

(அயல் நாட்டு அரசர் அனைவரும் வந்தனர். சேனுதிபதி அவர்களை வரவேற்று உபசரித்துத் தனது முடிசூட்டு விழாவை ஆதரிக்க வேண்டுகின்ருன்.)

சேனுதிபதி:— அரசர்களே! மணிபுரி மன்னன் மதுக்கடலில் மூழ்கி மதிகெட்டொழிந்தனன். விசய

ராணி ஒழுக்கங்குன்றி வெளியே சென்ருள். இளவரசன், நவநவமான ஆடையுடுத்தி, அமுதுண்டு, அருங்கலையில்லாது வறிதே திரிகின்ருன். ஆதலின், நாடும் அமைச்சும் எனக்கு நயந்து முடிசூட்டுகின்றன. நீங்கள் அனைவரும் என்னை ஆதரிக்க வேண்டும். நன்றி மறவேன். வணக்கம்.

வெளிநாட்டு வேந்தர்:— சேனுதிபதியே! உமது கதையெல்லாம் கேட்டோம். ராணி விசயாள் முடங்கல் சேதியை மொழிவோம்; கேளும். மன்னர் முடியைப் படியினிற் கவர, பாங்கனைப் போல் இருந்து மன்னவன் குடிப்பழக்கத்தைக் கொள்ளச் செய்தீர்; அரசதிகாரத்தையும் அபகரித்தடைந்தீர். மாராணியாரும் மானத்தைக் காக்க மறைந்தொழுகுகின்றனர். காவலன் சிறுவனையும் கல்வி யில்லாது ஒடுக்கி வைத்தீர். இது முறையாகுமா?

வள்ளிநாட்டு மன்னன்:— காவலன் மைந்தனை யாம் காணவேண்டும். நாட்டார் எண்ணத்தை நாடியாராய்தல் வேண்டும். இவற்றை யறியாது நாங்கள் உடன்படோம்.

வளநாட்டு மன்னன்:— சதி புரிந்தது உண்மையென வெளிப்படின் நீர் துன்புறுவது திண்ணம்.

## காட்சி 3

இடம்:— அரசிருக்கை மண்டபம்.

காலம்:— காலை.

பாத்திரங்கள்:— சேனுதிபதி, அமைச்சன், மன்னர்கள், இளவரசு, ராணி.

(இளங்கோ விற்ருெழில் பயில்கின்ருன். ஒரு கிழவர் அருகே நிற்கின்ருர்)

சேனாதிபதி:— அமைச்ச! அதோ பார்த்தனையா? ஒரு பெரியார் சுதர்மனுக்கு விற்றொழில் கற்பிக்கின்றார். வாட்போர் பயிற்றுவிக்கின்றார். சுதர்மன் வீரனாய் விளங்குகின்றான். (சேனாதிபதி, சுதர்மனை அணுகி) ஏடா! சுதர்மா! இவன் யார்? உனக்குக் கேடகமும் கத்தியும் எதற்கு?

சுதர்மன்:— எனக்கு இயைந்த கலையுதவும் தென்னாட்டு வீரர்; தென்பாண்டிநாட்டார்; சிறந்த ஆசிரியர்.

சேனாதிபதி:— அரசைக் கொள்ள உத்தமனோ?

சுதர்மன்:— என் அரசை யான் கொள்வேன்.

(சேனாதிபதி உடனே தன் வாளை உருவிச் சுதர்மன் மேல் ஓங்கியபடியே கூறுவான்.)

உன் நாடு சாக்காடே. ஓடி மறைவாய். மின்னும் வாள் இதுதான். வீச்சும் இதுவே.

(கிழவர் கணத்தில், சேனாதிபதி ஓங்கிய வாளைத் தமது வாளினால் துண்டித்துக் கூறுவார்.)

உருவிய வாள் எங்கே? உனது உடலைத் தேடியே என் வாள் வருகிறது.

(என வாளை ஓங்குகின்றார். சேனாதிபதி ஓடுகின்றான். கிழவரும் சுதர்மனும் சபையை நோக்கி ஓடும் சேனாதிபதியைத் துரத்திக்கொண்டு ஓடி வருகின்றனர்.)

சபையிலிருந்த அரசர்:— சேனாதிபதி, ஏன் ஓடி வருகின்றீர்?

(சேனாதிபதி ஒருபுறம் நிற்க, அவனைத் துரத்தி வந்தவரை நோக்கி) இதென்ன? நீவிர் யாவர்?

கிழவர்:— வேந்தர்காள்! சற்றுச்செவி கொடுங்கள். மன்னனை மதுவினில் மூழ்குவித்தான்; அரசியைக் கெடுக்க ஏற்பாடு செய்தான்; செல்வனையும் சீரழித்தான்; தானே முடிசூட்டிக்கொள்ள முனைந்தான் காங்கேயன். அவன் தொட்ட வாளைத் துண்டித்து வீழ்த்தினேன். ஆண்மை மிக்க ஆடவரைப் பயந்த மறக்குணமகளிர் குலத்தைப் புல்லென மதித்த புல்லியோன் உயிருக்கஞ்சி ஓடிவருகின்றான்.

(என்றுரைத்துத் தான் புனைந்திருந்த முதுமைக் கோலத்தை மூதியவர் களைகிறார். யாவரும் விசயராணியைக் காண்கின்றனர். அரசர் யாவரும் ஆச்சரியம் அடைகின்றனர்.)

வெள்ளி நாட்டு வேந்தன்:— அரசியார் அருஞ்செயலை என்னென்பது? வீரர்களைப் பயக்கும் மங்கையர் மாட்சிதான் என்னே! அன்னவர் கருணையும் வீரமும் சொல்லவும் படுமோ? நம் அரசியார், அன்னையும், ஆசானும், ஆருயிரைக் காப்பானும் ஆயினர். அன்னையாரைப் போல, இப்பெண்ணுலகு அனைத்தும் ஆகுநாள் எந்நாளோ!

குன்றநாட்டுக் கோமான்:— தாயே! உங்கள் உள்ளக் கருத்தை உரைப்பீர்களாக.

ராணி:— (சுதர்மனை நோக்கி) கண்மணி! உன் கருத்தென்ன?

சுதர்மன்:— குலமன்னர்காள்! நான் மன்னர் குலத்துதித்தவனே. ஆனால், மன்பதையுள் ஒருவன்.

மன்னுயிர் அனைத்தும் புரக்கவன்றோ, இம்மக்கள் என்னை மன்னனாக ஏற்றனர். ஆளுவோன் தன்னலங் கருதி, அதிகார வெறிகொண்டு அலைத லாகாது. அக்கிரமம், சூழ்ச்சி, பேராசை கொண்ட மன்னவனை மக்கள் வெறுப்பர். மதியில்லாது மண் ணாசை கொண்டு மாந்தரை யிகழ்ந்து மாண்ட மன் னவர் பலர். மன்னவன் மக்களுக்கு உயிர்போல் வான். அவன் மன்னுயிரைத் தன்னுயிராகக்கொண்டு மன்பதையைக் காத்தல் வேண்டும். அவன் மக்க ளின் ஊழியன்; மாந்தர்க்காக வாழ்கின்றான்; மக்க ளுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்கின்றான்; தீமைகளை யகற்றுகின்றான். அன்றியும் இம்மாநிலம், மக்கள் அனைவர்க்கும் உரிமையன்றோ? மக்கள் தமது உரிமை பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்தல் வேண்டும். உரிமையில்லாத வாழ்வும் வாழ்வாகுமோ? குடியாட்சிக்குரிய கலைச்செல்வம் அனைத்தும் இங்குக் குடிகொண்டுள்ளன. கல்லா மாந்தரைக் கனவிலுங் காண்பரிது. மாந்தர் அனைவரும் மக்கட் பண்பு உடையவர்கள். ஆதலால், இம் மணிபுரி மக்களுக் குக் குடியாட்சி வழங்கவேண்டு மென்பதே எனது குறிக்கோள். மதியில்லாக் காங்கேய சேனாதிபதிக் கும் சதி ஒன்றும் செய்யாதீர்கள்.

**மன்னர்கள்:—** ஒப்பில் குல விளக்கே! நின் கூர்த்த மதியைக் குவலயம் போற்றும்! அறநெறி வாழ்க. அழகிய மணிபுரி வாழ்க. தலைமைக்குண மெலாம் தங்தெமை யாண்ட எம் தண்டமிழ் மொழி வாழ்க.

(யாவரும் அரசியையும் இளவரசையும் வாழ்த்திச் செல் கின்றனர். குடியாட்சி கொண்டு குலவி வாழ்கின்றனர்.)

சொற்பொருள்:— புரி-நகரம், மது - கள், அரிவையர்-பெண்டிர், நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நால்வகைப்பட்ட பூமி, பண்டாரம் - பொக்கிஷம், முடங்கல் - ஓலை, கேடகம் - படைகளைத் தடுத்துக் காக்கும் கருவி, மன்பதை - மக்கள்.

## வினாக்கள்

1. சேனாதிபதியின் சூழ்ச்சி யாது?
2. ராணி தன் மைந்தனை எவ்வாறு காத்தனள்?
3. இளவரசின் குணாதிசயத்தை விளக்குக.
4. வெளி நாட்டு வேந்தன் அரசியை எவ்வாறு புகழ்ந்தான்?
5. குடியாட்சிக்குரிய மக்கள் எத்தன்மையராய் இருத்தல் வேண்டும்?

## பயிற்சி

பின் வரும் தொடர்களைச் சேர்த்தெழுதுக:

வந்த + பையன், எனது + புத்தகம்.
ஒன்று + கொடு, எது + பெற்றான்.

## இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களிலுள்ள உரிச்சொற்களைக் கூறுக:

மிகப்பேசினான், நனிநல்லன், சாலப்பசித்தது, உறு துன்பம், தவவிளைந்தது, களிகூர் மனம், கழிமகிழ்வு.

## கட்டுரை

இந்த நாடகத்தைக் கதையாகக் கூறுக.

## 20. செல்வர் உலகம்

மக்கள் உயர்வடைவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது அறிவே. ஆராய்ச்சி செய்து புதுமையை ஆக்குவதற்கும், செல்வத்தில் சிறந்து வாழ்தற்கும் அவ்வறிவே சிறந்த கருவியாயுள்ளது. இத்தகைய அறிவுப் பெருக்கத்தை அரிய செல்வமாகப் பெற்ற மக்களே மக்களாவர். அந்நாடே தலைசிறந்து விளங்குவதாகும். அம் மக்கள் ஏனைய மக்களைவிட மேம்பட்டு விளங்குவது போலவே, அந் நாடும் சீருறத் திகழ்ந்து பேர் பெற்று விளங்கும்.

செல்வர் உலகமாக விளங்கும் அமெரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா என இரு பிரிவுகளையுடையது. இதனைச் சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்னே கொலம்பஸ் என்பவர் கண்டு பிடித்தார். அவர் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குச் செல்வதற்கு ஒரு கடல் மார்க்கத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்த பொழுது, தென் அமெரிக்காவின் வடக்கில் உள்ள தீவுகளைக் கண்டு, அவைகளையே இந்தியா வென்றும், அங்குள்ள மக்களையே இந்தியர் என்றும் நினைத்தார். பின் இரண்டு மூன்று முறை அங்குச் சென்ற பொழுது, அத்தீவுகள் இந்தியா அல்ல வென்றும், அவை மேற்கு இந்தியத் தீவுகள் என்றும் அறிந்தார். அமெரிக்காவில் இருந்த மக்கள் யாவரும் தாமிரவண்ணமாய் இருந்ததால் அவர்களைச் செவ்விந்தியர்கள் என்றும் அழைத்தார். அப்பெயர்களே இன்றும் அவர்களுக்கு வழங்கி வருகின்றன.

மோட்டார்ப் பேரரசரும், அமெரிக்கக் கோடீஸ்வரர்களில் ஒருவருமாகிய ஹென்றி போர்டுக்குச் சொந்தமான மோட்டார்கள் யாவும் இந் நாட்டிற்ருன்

செய்யப்படுகின்றன. மண்ணெண்ணெயால் மாபெருஞ் செல்வம் பெற்ற கோடீஸ்வரரான இராக்பெல்லர் என்பவரும், மின்சார விளக்குகளையும், பேசும் படக் காட்சிகளையும் கண்டறிந்தவரான உலகம் போற்றும் தாமஸ் ஆல்வா எடிசன் என்பவரும் இந்நாட்டினரே என்றால், இந்நாட்டின் செல்வ வளர்ச்சியையும், அறிவின் திறனையும் என்னென்றுரைப்பது !

வட அமெரிக்காவின் ஒரு பகுதி கனடா வென்றும் மற்றொரு பகுதி ஐக்கிய நாடுகள் என்றும் சொல்லப்படும். இவைகள் ஆங்கிலேயர்கள் குடியேறிய நாடுகளாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த குடியேற்ற நாடுகளாகிய ஐக்கிய நாடுகள், அடிமை நாடுகளாயிருந்து தமது கூர்த்த மதியாலும், ஒற்றுமையாலும், தொழிற் சிறப்பாலும் வலியடைந்து நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர்த்தான் ஆங்கிலேயர்களது ஆதிக்கத்தினின்றும் விடுதலையடைந்து உரிமை பெற்று,குடியரசை ஏற்படுத்திக்கொண்டன. இன்றும் சுதந்திரம் பெற்ற ஜூலை, நாலாம் நாளை 'சுதந்திர தினம்' ஆகக் கொண்டாடி வருகின்றனர். அவர்கள் தங்களது குடியேற்ற நாடுகளாகிய ஐக்கிய நாடுகளுக்கென்று ஒரு தனிக் கொடியையும் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இன்றைய வுலகில் குபேர நாடாக விளங்குவன இந்த ஐக்கிய நாடுகளேயாகும். இந்நாடுகளில் உள்ள முக்கிய நகரங்களில் மிகப்பெரியது நியூயார்க் நகரமே. இதற்கு அடுத்தபடியாக விளங்குவது சிகாகோ நகரமாகும். இந்நகரங்களின் சிறப்பை என்னென்பது? வானமளாவிய உயர்ந்த மாளிகைகளையும், நூற்றுக்கணக்கான மாடிகளையுடைய பெரிய வாணிப




நியூயார்க் நகரம்

நிலையங்களையும், பலவகையான கட்டடங்களையும் அண்ணாந்து பார்த்தால் ஒழிய அவற்றின் சிறப்பைக் காண வியலாது. ஓங்கி விளங்கும் மாடங்களுக்கும் ஒரு கணத்தில் செல்லத் துணை செய்யும் மின்சாரத் தூக்கிகளைக் காண்போர் வியவாமல் இரார். "அருளி லார்க் கவ்வுலகமில்லை, பொருளிலார்க் கிவ்வுலகமில் லாதி யாங்கு" என்ற அறநூலாகிய வள்ளுவர் வாய் மொழிக் கிணங்க, அந்த நாட்டிலே பணம் என்பது ஆறுவது புலன். அதுவன்றி ஓரணுவும் அசையாது. அந்த அற்புதமான நாட்டைப் பற்றி நீங்கள் படித்தி ருக்கலாம். அதன்கண் செல்லும் புகைவண்டித் தொடர்கள், நிலத்தின் வயிற்றைக் குடைந்து கொண்டு, அதனூடே புழுக்கள் நெளிவது போல் நெளிந்து நெளிந்து செல்லும்.

அந்நாட்டு மக்கள், சாலைப் பக்கத்தில் போடப் பட்டிருக்கும் நடை பாதைகளில் மிகவும் பரபரப் போடு இங்குமங்கும் ஓய்வொழிவின்றிச் சென்று கொண்டிருப்பர். சலவைக் கல்லைப் போல மேடுபள் ளம் இல்லாமல், ஆயிரக்கணக்கான மைல் தொலை எங்கு காணினும் ஒரே நிலையில் அமைந்திருக் கும் சாலைகள் கண்களைக் கவரும். அதன்கண் விரைந்து ஓடும் மோட்டார்களைப் பார்க்கும்போது, வெறி பிடித்து ஓடுவதைப் போலக் காணப்படும்.

அந்நாட்டிலுள்ள நகரங்கள் எங்கும் தொழிற் சாலைகளே காட்சியளிக்கும். அவை ஒன்று போல் புத்தம் புதியனவாகவே காணப்படும். இத்தொழிற் சாலைகளின் தொகுதியே தொழிலாளிகளது மிகுதிப் பாட்டையும், அவர்தம் கைவன்மையையும், அயல் நாடுகளுக்கு அனுப்பப்படும் பொருள் அளவையும்,

செல்வப் பெருக்கத்தையும் வளர்க்கும். இத னலன்றே அமெரிக்கா வாணிபம் சிறந்த நாடாகவும், செல்வவளம் உள்ள நாடாகவும், செல்வம் உதவும் நாடாகவும், எந்த நாட்டினும் தலைசிறந்த நாடாகவும் விளங்குகிறது. இவைகளுக்கு அந்நாட்டிலுள்ள போக்கு வரவுக்குரிய சாதனங்களே காரணமாகும். ஆகாயப் போக்குவரவுக்குரிய சாதனங்களும் உண்டு. நமது நாட்டிலும் முன்னாட்களில் தொழில் வளர்ச் சிக்கும், செல்வப் பெருக்கிற்கும் இடம் இருந்தது. பேரரசர்களும் பெருஞ்செல்வர்களும் தொழிலாளி களை அன்புடன் ஆதரித்தார்கள். பலவகையான தொழில்களையும் வளர்ச்சியுறச் செய்தார்கள். ஒன்று பட்ட மனத்துடன் கடல்கடந்தும், தொகுதி தொகுதி யாகச் சென்றும் வாணிபம் நடாத்தினார்கள்.

இக்காலத்தில் தொழிலாளர்களுக்கும் தொழில் வளர்ச்சிக்கும் அரசியலார் ஆதரவு கொடுத்து வளர்க்க முன்வருவார்களானல், நமது நாடும் பழந் தொழிற் பெருக்கத்தைக் கைக்கொண்டு அமெரிக் காவுக்கு ஒப்பாகச் சிறந்து விளங்கும்.

அளவு கடந்த முகமனும், பணியாற்றுகையும் அவர்களது சிறந்த குணங்களாகும். அவர்கள், யாவரையும் வேறுபாடின்றி உபசரிப்பார்கள். அவர் களிற் பலர் நம்மைப்பற்றியும், நமது நாடுகளைப்பற்றி யும் தெரிந்துகொள்ள அவாமிக வுடையவர்கள். அவர் களிடத்தில் விளங்குகிற மற்றொரு சிறந்த குணம் தூய்மையாகும். 'கடவுட் பற்றுக்கு அடுத்தது தூய்மைப்பற்று' என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி. அங்கு, சாலைகளில் நமது நாட்டில் நடப்பதுபோல, உல்லாசமாகக் கைகளை வீசிக்கொண்டு நடக்க

வியலாது. அடுத்த விநாடியே உயிர்க்குஅழிவு நேரும். அங்கு ஒவ்வொரு வீட்டின் புறத்திலும் அழகிய பூந்தோட்டமோ பசும்புற்றரையோ அமைக்கப் பட்டிருக்கும். இவைகள் ஒவ்வொரு வீட்டையும் அழகுபடுத்தும். சுருட்டுப் பற்றவைப்பதற்குக் கொளுத்தும் தீக்குச்சியை அவர்கள் மறந்தும் வெளியில் எறியார். இதுபோலவே, அவர்கள் ஒவ்வொருவரும் தூய்மையைக் கையாளுவதால் சுகாதாரத் தொடர்பாக நேரும் பொருட் செலவு மிகக் குறைவே. மருத்துவச்சாலைகளில் நமது நாட்டில் நிறைந்திருப்பதுபோல் இல்லாது, கட்டில்கள் எல்லாம் நோயாளிகள் இல்லாதனவாகவே காணப்படும். ஆங்குள்ள பெரிய நகரங்களில் மருத்துவச்சாலைகள் ஒன்றோ பலவோ இருக்கும். அவைகளிலுள்ள ரண வைத்தியர்கள் முதலியவர்கள் மிகுந்த கைவன்மையுடையவர்கள். புதிய புதிய மருத்துவ முறைகளை அஞ்சாது கையாண்டு, நோயாளிகளைக் குணப்படுத்தி வருகின்றார்கள்.

இத்தகைய அமெரிக்கா ஓரின மக்களை மாத்திரம் கொண்டதன்று. எத்தனையோ நாட்டினர் அங்குக் குடியேறி இருக்கின்றார்கள். ஒரு காலத்தில் தனித்தனியே வெவ்வேறு கூட்டத்தினராய் வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்களாய் இருந்தவர்கள் அனைவரும், இப்போது ஆங்கிலம் என்னும் ஒரு மொழியையே பேசுகின்றார்கள். ஒரே கொடி நிழலில் ஓரின மக்களாய் ஒருமித்து அன்புடன் இன்பமாக வாழ்கின்றார்கள். நமது இந்திய நாடும் தன்பாற் கொண்டுள்ள சாதி மத வேறுபாடுகளைக் களைந்து, ஓரின மக்களாய் வாழும் நாள் எந்நாளோ? அந்நாளே நமக்கு நன்னாளாகும்.

சொற்பொருள்:—சீர் - சிறப்பு, திகழ்ந்து - விளங்கி, புலன் - அறிவு, முகமன் - உபசார மொழி, பணி ஆற்றுகை - தொண்டு செய்தல், அவா - விருப்பம்.

## வினாக்கள்

1. வட அமெரிக்காவின் இரு பகுதிகள் யாவை?
2. அமெரிக்கப் பெருமக்கள் யாவர்?
3. அமெரிக்க முன்னேற்றத்திற்குக் காரணம் என்ன?
4. அமெரிக்கரின் சிறந்த குணங்கள் யாவை?
5. தூய்மை பற்றிய ஆங்கிலப் பழமொழி என்ன?

## பயிற்சி

பின்வரும் தொடர்களை வைத்து வாக்கியம் அமைக்க.

மிரள மிரள, படபடப்பாக, இரவும் பகலும், தலைகால் தெரியாமல், வாழையடி வாழையாய்.

## இலக்கணம்

திணை வழுவமைதியையும் பால் வழுவமைதியையும் கூறுக.

தாய் தன் மகளைச் செல்வமே என்றழைப்பாள்.
மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.
நீ என் தாயல்ல நீ ஒரு நோய்.
நெஞ்சில் வீரமற்ற இவன் ஒரு பெண்.
அரசனே நாட்டில் தாய்.

## கட்டுரை

அமெரிக்காவின் சிறப்புக்களை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

## 21. எக்ஸ் - கதிர் அசைவுப் படக்கருவி

(திங்கள் இதழ் - செய்தி)

சாதாரணமாக ஒளி ஊடுருவிப் பாய முடியாத பொருள்களுக்கு அப்பாலுள்ளவற்றையும் காண்பதற்குத் துணையாக அமைவது எக்ஸ் - கதிர் (X - Ray) என்பது யாவரும் அறிந்தது. இக்கதிரைப் பயன்படுத்தி அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள ஐந்து மருத்துவர்கள் அருமையான ஒரு காரியத்தைச் சாதித்திருக்கின்றனர்.

எக்ஸ் - கதிர்ப் புகைப்படக் கருவியொன்றை அவர்கள் செய்திருக்கிறார்கள். இந்தப் புகைப்படக் கருவியில் மற்றொரு சிறப்பும் இருக்கிறது. இதனால் திரையில் காட்டக்கூடிய அசைவுப் படமாகவே பிடிக்க முடியும்.

இந்த எக்ஸ் - கதிர் அசைவுப்படக் கருவியின் உதவியால் உடலுக்குள் அமைந்துள்ள உறுப்புகளின் தொழில்களை யெல்லாம் திரைப்படமாகப் பிடித்து விடலாம். இந்த அற்புதமான கருவியானது, மருத்துவத் துறையின் ஆராய்ச்சி, பயிற்சி, சிகிச்சை ஆகியவற்றிற்குப் பெரிதும் பயன்படும் என்பது மகிழ்ச்சி தருவதல்லவா? இக்கருவியினை அண்மையில் சான்-பிரான்சிஸ்கோநகரில் நடந்த கதிரியல் துறைக் கழகத்தின் (Radiological Society) 34-வது ஆண்டு விழாவில் காட்டினார்கள். அப்பொழுது சில படங்களும் திரையில் காட்டப்பட்டன.

இருதயத் துடிப்பும், மணிக்கட்டு, தோள், முழங்கால் பட்டை, இடுப்பெலும்பு, ஆகியவற்றின்

அசைவுகளும் படங்களின் வாயிலாகக் காட்டப்பட்டன. இந்தப் பரிசோதனைக்கென்றே தனிப்பட்ட முறையில் ஒரு வகை நீர்ப்பொருள் செய்யப்பட்டது. ஒருவர் அதை உட்கொண்டபோது, அது வயிற்றை நோக்கிச் செல்லுங்கால் தசை நார்கள் எவ்வாறு அசைகின்றன என்பது தெளிவாகத் தெரிந்தது.

ரோச்செஸ்டர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கதிரியல்துறை (Radiology) வல்லுநர்களான ஐந்து மருத்துவர்களே சிறப்பு மிக்க இந்த எக்ஸ் - கதிர் அசைவுப்படக் கருவியைக் கண்டுபிடித்தவர்களாவர். அவர்கள் பெயர்கள் — டாக்டர்களான — ஜார்ஜ் எச். ராம்சே, ஜேம்ஸ். எஸ். வாட்சன், (இளையர்) ஜான். ஜே. தாம்சன், ஃபிராங்ட் ரீசிங்கர், சிட்னி வின்பர்க்.

இதற்கு முன்னரும் எக்ஸ் - கதிர் கொண்டு அசைவுப் படம் எடுக்க முயற்சி நடந்ததுண்டு. ஆனால், புகைப்படக் கருவிக்கு ஆற்றல் போதாத கண்ணாடி வில்லைகளே முன் கிடைத்தன. இது காரணமாகக் கதிரியக்கத்தின்போது, சுருளில் படம் பதிய அதிக நேரம் பிடித்ததால், திருப்தி தரக் கூடிய படங்கள் எடுக்க முடியவில்லை. இப்பொழுது இக்குறைகள் நீங்கி விட்டன.

இந்தக் கருவியைப் பயன்படுத்துவதில் ஓர் ஆபத்து இருக்கிறது. எக்ஸ் - கதிரை அளவுக்கு மீறி ஓர் உடலின் மீது செலுத்தினால், வீரியக் குறைவு முதலியன ஏற்பட்டுத் துன்பம் விளையும். புதிதாகக் கண்டு பிடித்துள்ள இந்தப் புகைப்படக் கருவி, தொழிற்படும்போது வேண்டிய இடத்தில் மட்டுமே எக்ஸ் - கதிர் செலுத்தப்படும். குறிப்

பிட்ட அளவுக்கு மேலும் செலுத்த மாட்டார்கள். உடலின் எந்தப் பாகத்தை ஆராய்கிறார்களோ அந்த இடத்தில் மட்டுமே எக்ஸ்-கதிர் செலுத்தப் படும். மேலும், படம் பிடிக்கிற கணத்தில் மட்டுமே கதிர், நோயாளியின் மேனியில் படும். வேண்டாத சமயத்தில்—அதாவது படம் எடுக்காத வேளைகளில் எக்ஸ்-கதிரின் இயக்கம் நோயாளியின் மீது ஏற்படுவதில்லை. அத்தகைய முறையால் ஆபத்து நேராமல் பாதுகாக்கிறார்கள்.

படம் பிடிக்கும் விதம்:— நோயாளியை ஒளிர் திரைக்கு முன்னர் நிறுத்த வேண்டும். இந்தத் திரையில் சில இரசாயனப் பொருள்கள் பூசப்பட்டிருக்கும். எக்ஸ்-கதிர் இதன் மீது படும்போது திரை நன்றாக ஒளிரும். திரையின் வெளிச்சத்தைக் கொண்டுதான் எக்ஸ்-கதிர் இயங்குவதை உணர்ந்துகொள்ள முடியும். இந்த வகையாகத் தான் எக்ஸ்-கதிரை அறியலாமே தவிர, எக்ஸ்-கதிர் என்ற பொருளை நேராகக் காணமுடியாது. கண்ணுக்குத் தெரியாத இந்தக் கதிரை எப்படிப் படம் பிடிக்க முடியும்? முடியாதல்லவா? அதற்காகத்தான் ஒளிர்திரை ஒன்று வேண்டியிருக்கிறது.

ஒளிர்திரைக்குப் பின்புறத்தில் (35 மில்லிமீட்டர்) படப்பிடிப்புக் கருவி ஒன்றைச் சரிசெய்து வைக்கவேண்டும். அதில் பொருத்தப்பட்டுள்ள புகைப் படக்கண்ணாடி மிக மிக ஆற்றல் வாய்ந்ததாக இருக்கும். படம் பிடிக்கும் கருவியும், எக்ஸ்-கதிர் தரும் குழாயும் ஒரே சமயத்தில் இயங்குகின்றன. இந்த ஒன்றிய இயக்கத்தை உண்டாக்குவதற்கு மிகவும் சிக்கலான மின்சாரப் பொறி யமைப்பு

ஒன்றை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த அமைப்பினைக்கொண்டு, முன்னரே கூறியபடி, படம் பிடிக்கும் அந்தக் கணத்தில் மட்டுமே எக்ஸ்-கதிரின் இயக்கம் நோயாளியின் உடலில் ஏற்படும் வண்ணம் செய்கிறார்கள். ஒருதடவை ஒளிப்பாய்ச்சல் ஏற்பட்டால் $\frac{1}{120}$ செகண்டுதான் நீடிக்கும். ஒரு செகண்டில் 60 படங்கள் எடுக்க முடிகிறது. இந்த வகையாக எடுத்து முடித்த அசைவுப் படங்களைத் திரையில் சாதாரண வேகத்தில் ஓட்டும்போது, இவை மெல்ல மெல்ல இயங்கும் படங்களாக நமக்குத் தோன்றுகின்றன.

இந்தக் கருவியானது மருத்துவத்துறையில் எக்ஸ்-கதிர் ஆற்றக்கூடிய பெருந் தொண்டின் கொடுமுடியாக இலங்கத் தக்கது. உடலினுள் ஓயாது இயங்கும் உள்ளுறுப்புக்களில் ஏற்படக்கூடிய கோளாறுகளைத் தெளிவாகக் கண்டு, பிணிகளினின்று விடுதலை பெறுதற்கு இக்கருவி ஒரு பெரிய அருள்வரம் என்றே கூறலாம்.

— 'யூசிஸ்'

சொற்பொருள்:— அண்மையில் - சமீப காலத்தில், ஆற்றல் - வன்மை, இயக்கம் - அசைவு, ஒளிரும் - பிரகாசிக்கும், ஒன்றிய - ஒன்றுபட்ட, கொடுமுடி - சிகரம், இலங்க-விளங்க.

## வினாக்கள்

1. எக்ஸ் - கதிர் என்பது என்ன ?

2. எக்ஸ் - கதிர்ப் புகைப் படக் கருவி எவ்வெவற்றில் பெரிதும் பயன்படுகிறது ?

3. இதனைக் கண்டுபிடித்த மருத்துவர்கள் யார் ?
4. எக்ஸ் - கதிர் படம் எவ்வாறு பிடிக்கப்படுகிறது?
5. எதனை ஒரு பெரிய அருள்வரம் என்றே கூறலாம் ?

## பயிற்சி

பின்வரும் தொடர்களைச் சேர்த் தெழுதுக:

| | |
|---|---|
| பாடத்தை + படி, | பத்து + பாட்டு, |
| நாய் + குட்டி, | ஓடி + போ, |
| உண்ண + சொல், | மாலை + காலம், |
| மருந்து + பை, | தேர் + கால், |
| மேற்கு + திசை, | ஆறு + பத்து. |

## இலக்கணம்

பின்வரும் வாக்கியங்களிலுள்ள இடைச் சொற்களின் பொருளை விளக்குக:

1. போர் செய்வதால் நன்மை விளையுமோ ?
2. உண்மையே வெல்லும்.
3. தீயும் அஞ்சும் தெய்வக் கற்புடையாள் இவள்.
4. அண்ணனும் தம்பியும் வந்தனர்.
5. புலையனும் விரும்பாத யாக்கை.
6. குறவரும் மருளும் குன்றம்.

## கட்டுரை

மின்சாரத்தைப் பற்றியாவது படக் காட்சியைப் பற்றியாவது ஒரு கட்டுரை வரைக.

# 22. கிருஷ்ண ராஜ சாகரம்

மக்கள் பசியில்லாமல் வாழ்தற்கு உண்பொருள்கள் தேவை. உணவுப் பொருள்கள் அருகுமாகில் மாந்தரைப் பசியும், பிணியும், வறுமையும் வாட்டும். இவைகளால் நாட்டில் அமைதி குலையும். சீரும் சிறப்பும் இரா. ஆகவே, மக்கள் அமைதியாக நல் வாழ்வு நடத்த உண்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இவ்வுற்பத்தியைப் பெருக்க நீர்வளம் பெருக வேண்டும். நீர்வளம் மிகுதற்கு ஆறுகளும், குளங்களும், ஏரிகளும், கால்வாய்களும் இன்றியமையாதன ஆகும்.

இக் கருத்தைக் கொண்டே, பண்டைக்காலத் தரசர்கள் ஆறுகளை வெட்டியும், அவைகளுக்குக் கரையிடுவித்தும், ஆறுகளைத் தடுத்துப் பல அணைகள் கட்டுவித்து நீர்த்தேக்கத்தை உண்டு பண்ணியும், பல கால்வாய்களை வெட்டுவித்தும் நீர்வளத்தைப் பெருக்கினர்கள். இதனல் இப்பொழுதுள்ள ஆறுகளும் குளங்களும் அவ்வரசர்கள் பெயராலேயே அழைக்கப்படுகின்றன. இந் நீர்வளத்தால் வேளாண்மை சிறந்து, மக்கள் நல்வாழ்வு பெற்று, இன்புற்று வாழ்ந்து வந்தனர். இங்கு நீர்வளத்திற்குக் காரணமாக அமைக்கப்பட்ட ஒரு நீர்த் தேக்கத்தைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

'சோழவளநாடு சோறுடைத்து', என்ற பெருமைக்குக் காரணமாகிய கால் பல கொண்ட காவிரியாருனது, மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த குடகு நாட்டில் தலைக்காவேரி என்னும் இடத்தில் உற்பத்தியாகி, மைசூர் நாட்டின் வழியே சேலம்,

கோயமுத்தூர் ஜில்லாக்களின் எல்லையாகச் சென்று திருச்சிராப்பள்ளி, தஞ்சை ஜில்லாக்களிற் புகுந்து பல கிளைகளாகப் பிரிந்து, வேளாண்மையைப் பெருக்கிக் கொண்டு ஓடிக் காவிரிப் பூம்பட்டினத்துக் கருகில் கடலொடு கலக்கின்றது.

மைசூர் நாட்டில் பெய்யும் மழைவளமே வளமிக்க காவிரியின் பெருக்குக்குக் காரணம் என்பதை உணர்ந்த மைசூர் அரசியலார், சோழ மண்டலத்தின் வளத்திற்குக் காரணமா யிருக்கின்ற காவிரியின் வெள்ளத்தைத் தமது நாட்டில் ஓர் அணையினல் தடைசெய்து தேக்கி, அதனைக் கொண்டு தமது நாட்டை வளம் படுத்திக்கொள்ளக் கருதுவாராயினர். இவ்வாறு காவிரி நதியின் வெள்ளத்தை அந்நாட்டில் தேக்க வேண்டுமென்ற எண்ணம், இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னரே ஏற்பட்டதாகும். அதாவது, திப்புசுல்தான் மைசூரை ஆண்டகாலத்திலேயே அரசியலார் அதற்கு வேண்டிய முயற்சிகள் யாவும் எடுத்துக் கொண்டதாகவும், ஆனல் அக்காலத்தில் ஏற்பட்ட போர்க் குழப்பத்தாலோ வேறு எக்காரணத்தினலோ அவ்வேலை நிறைவேருமல் நின்றுவிட்ட தெனவும் தெரிய வருகின்றது. இது பிற்காலத்தில் அணைக்கு அடிப்படை எடுக்கத் தொடங்கிய காலத்தில், அங்கு அகப்பட்ட ஒரு கல்வெட்டின் குறிப்பிலிருந்து தெரிய வந்தது.

நாட்டுக் கைத்தொழில்களைப் பெருக்கி, செல்வ நிலையை வளர்ச்சி செய்யக் கருதிய மைசூர் அரசியலார், அதற்கு உதவியாக, சென்ற 1902-ம் ஆண்டு அந்நாட்டிலுள்ள சிவ சமுத்திரம் என்னும் இடத்தில் காவிரியாற்றின் நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சார

சக்தியை உண்டு பண்ணத் தொடங்கினர். ஆனல், கோடைக் காலத்தில் காவிரி நதியில் வெள்ளங் குறைந்து விடுவது வழக்கமாதலின், அக்காலத்தில் அங்கு மின்சார சக்தியை மிகுதியும் சேர்க்க இயலாதென்று அறிந்தனர். அதனுல் அச் சிவசமுத்திர நீர்வீழ்ச்சிக்கு மேற்கே, காவிரி நதியில் ஓர் அணை கட்டி, அதன் அண்மையில் ஒரு பெரிய நீர்த் தேக்கத்தை ஏற்படுத்தினுல், அதனின்றும் எப்பொழுதும் ஆற்றில் வெள்ளப் பெருக்கை விடவும், அதனுல் முற்கூறிய சிவசமுத்திர நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சார சக்தியை மிகுதியும் உண்டு பண்ணவும் இடமாகுமென்பதையும், நாட்டின் நிலப்பரப்பின் பெரும் பகுதியை நீர்வளமுள்ளதாகச் செய்யலாம் என்பதையும் கண்டறிந்தனர். இவ்வாராய்ச்சியின் படி 1911-ம் ஆண்டில் அந்நாட்டின் முதற் பொறிவலாளராகவும், பின் அந்நாட்டுத் திவாஞகவும் விளங்கிய சர்.எம். விசுவேசுவர ஐயா அவர்களாலே அவ் வேலை தொடங்கப் பெற்றது.

மைசூர் நகருக்குப் பத்து மைல் தொலைவிலுள்ள கண்ணம்பாடி என்னும் இடத்திற்கருகே, மைசூர் அரசியலார், இரண்டு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய்களுக்கு மேலாகச் செலவிட்டுக் காவிரி நதியின் குறுக்கே, நூற்று முப்பது அடி உயரமும், எண்பத்தாருயிரம்அடி நீளமுமுள்ள ஒரு அணையை மிகுதியும் உறுதியாகக் கட்டியிருக்கின்றனர். அவ்வணையில் ஆற்றின் தரை மட்டத்திற்கு அறுபதடிகளுக்கு மேலாகப் பாசன வசதிகளுக்கு உதவியாக நீர் தேங்குமாறு வலிய கதவுகளுடன் கூடிய பல மதகுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வணையின்

அருகில் ஐம்பது சதுர மைல் பரப்புள்ள பெரிய ஏரி யொன்று அமைத்து அதில் ஆற்று நீரைத் தேக்கி வைத்திருக்கின்றனர்.

அப்பெரிய நீர்த் தேக்கத்திற்கு, அந் நாட்டை யாண்டுவந்த மன்னர் பெயரால், 'கிருஷ்ண ராஜ சாகரம்' என்ற பெயர் இடப்பட்டிருக்கின்றது.



இந்தக் கிருஷ்ண ராஜ சாகரத்தில், ஏராளமாக எப்பொழுதும் நீரைத் தேக்கி வைத்திருக்கிறபடியால், காவிரி யாற்றில் என்றும் வெள்ளம் பெருகி வரும்படி செய்து, அதனல் முற்கூறிய சிவ சமுத்திரம் என்னுமிடத்திலுள்ள நீர்வீழ்ச்சியினின்றும் அளவிறந்த மின்சார சக்தியும் சேர்த்து வைக்கப் படுகின்றது.

அந்த மின்சார சக்தியின் உதவியால் கோலாரி லுள்ள தங்கச் சுரங்க வேலையும், மற்றும் அந் நாட்டி



லுள்ள இயந்திரச் சாலைகளிற் பலவகைப் பட்ட தொழில்களும் நடைபெறுகின்றன. மேலும், முற்கூறப்பட்ட கண்ணம்பாடியிலுள்ள அணையின் இரு பக்கங்களிலும் அமைக்கப் பட்டிருக்கும் கால்வாய்களின்மூலமாய்த் தண்ணீர் பாய்ந்து, அந் நாட்டில் தரிசாகக் கிடந்த நிலங்களிற் பெரும் பாகம் பயிரிடுவதற்கு ஏற்ற நீர் வளப்ப முள்ளதாகச் செய்யப்பட்டுள்ளது.

அவ்வணையின் அமைப்பும், அதன்கண் கடல் போல் எப்பொழுதும் அலை மோதிக்கொண்டிருக்கும் நீர்த்தேக்கமும், காண்பவர்க்குப் பெரு மகிழ்ச்சி தரும். இவ்வணை மிகவும் நீளமானது. இதன் கரைகளில் பூந்தோட்டங்கள் அமைத்துக் கண்கவர் வனப்புடையதாகச் செய்திருக்கின்றனர். அதிலும் இராப்பொழுதில் பன்னிற மின் விளக்கங்கள் எரியும்

பொழுது தோட்டங்களும், அவ்வணையும், நீர்த்தேக்கமும் ஒளிவடிவாய்ப் பேரழகுடன் விளங்கும் காட்சி சொல்லுந்தரமன்று.

சொற்பொருள்:— அருகுமாகின் - குறையுமாயின், பொய்கை - தடாகம், அண்மை - சமீபம், பொறி - இயந்திரம், மதகு - மடை, தேக்கம் - தேக்கி வைத்தல்.

## வினாக்கள்

1. பண்டைக் காலத்தரசர் உணவுப் பெருக்கத்தின் பொருட்டுச் செய்தன யாவை?
2. காவிரி யாற்றைப்பற்றிக் குறிப்பு வரைக.
3. காவிரி யாற்றில் அணை கட்டும் எண்ணம் முதன் முதல் யாருடைய காலத்தில் ஏற்பட்டது?
4. கண்ணம்பாடி யணையைப்பற்றி வரைக.

## பயிற்சி

பின்வரும் தொடர்கள் எவ்வாறு புணர்ந்தன எனக் கூறுக:

படித்த பையன், எனது புத்தகம், தம்பியொடு சென்றான். பல தந்தான், ஒன்று கொடு, அது சென்றது.

## இலக்கணம்

பின்வரும் சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக:

யானை, வந்தான், படிப்பார், சென்றன, பாடினோம், வாரீர், சொல்வேன், ஓடிற்று.

## கட்டுரை

நீ பார்த்துள்ள ஒரு அணையைப்பற்றி வரைக.

# 23. அன்பின் வெற்றி

பல ஆண்டுகட்கு முன், பிரான்சு தேசத்தைச் சார்ந்த டீன் என்னுமிடத்தில் மடத்துத் தலைவராக மிரியல் என்ற துறவியொருவர் வாழ்ந்து வந்தார். அவருக்குதவியாக அவரது சகோதரி பாப்டிஸ்டீன் அம்மையாரும், ஒரு வேலைக்காரியும் மட்டுமே இருந்தனர்.

மிரியல் அன்பே வடிவாயுள்ளவர்; மக்களுக்குப் பணிபுரிதலே தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவர். ஒரு மடத்துத் தலைவருக்குரிய ஆடம்பரங்களைக்கூட விரும்பாமல் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். ஏழைகட்கு எச்சமயத்தும் உதவி புரிய விரைந்து செல்வார். ஒரு சமயம் தாம் வசித்து வந்த விசாலமான மடத்தை நோயாளிகள் வசதியாகத் தங்குதற்குரிய வைத்தியசாலைக்கு அளித்து விட்டுச் சிறியதான ஒரு கட்டிடத்தில் வசிக்கலானார். அவர் இருந்த மடத்தின் கதவுகள் திறந்தேயிருக்கும். எப்பொழுதும் யாரும் அவரிடம் உதவிபெற வரலாம்.

ஒரு நாளிரவு மிரியல் உணவருந்தச் செல்லும் சமயம், கதவு தாளில்லாமல் வறிதே மூடப்பட்டிருந்தது. கதவை யாரோ தட்டிய ஓசை கேட்டது. திரும்பிப் பார்ப்பதற்குள் கதவு தானாகவே திறந்து கொண்டமையால் ஒரு முரட்டு மனிதன் உள்ளே நுழைந்தான். அவன் பார்ப்பதற்கே பயங்கரமாயிருந்தான். பாப்டிஸ்டீன் அம்மையாரும், வேலைக்காரியும் அவன் தோற்றத்தைக் கண்டு நடுங்கி விட்டனர். துறவியார் மெதுவாகத் திரும்பி அவனைப் பார்த்தார்.

உள்ளே நுழைந்த மனிதன் துறவியாரை அடைந்து, 'ஐயா! என் பெயர் ஜீன்வால்ஜீன் என்பது. நான் பல ஆண்டுகள் சிறையில் கைதியாக இருந்து இப்பொழுதுதான் விடுதலை பெற்று வந்துள்ளேன். நான்கு நாட்களாக நான் உணவின்றி வாடுகின்றேன். நான் போகுமிடமெல்லாம் என்னை வெறித்துப்பார்த்துக் கதவை மூடிக்கொள்கின்றனர். விடுதலை பெற்றும் மக்கள் என்னை மனிதனாக எண்ணவில்லை. எனக்குச் சிறைச்சாலையே ஏற்ற இடம் என்று மீண்டும் அங்குச் சென்றேன். ஆனால் காவலர் என்னை அங்கும் சேர்க்கவில்லை. மீண்டும் கால் வந்தவாறு அலைந்தேன். பசி கண்ணையடைக்கிறது. முடிவில் ஒரு இளகிய மனமுடைய பெண் இவ்விடம் சென்றால் ஏதேனும் உதவி கிடைக்கலாம் என்றாள். இங்கு வந்தேன். என்னிடம் கொஞ்சம் பணமும் இருக்கிறது. அதை வேண்டுமானாலும் தருகிறேன். எனக்கு உணவளிக்க முடியுமா?' என்று தன் வரலாற்றைக் கூறி உணவு கேட்டான்.

உடனே துறவியார் வேலைக்காரியை நோக்கி அவனுக்கு உணவளிக்க உத்தரவிட்டார். உடனே அம்மனிதன் எல்லையற்ற வியப்படைந்து 'ஐயா! நான் யாரென்பதை அறிந்து கொண்டீர்களல்லவா? நான் ஒரு சிறைக் குற்றவாளி. பத்தொன்பது ஆண்டுகள் சிறைவாசம் செய்தவன். ஆபத்தானவன் என்று என்னை விளம்பரப்படுத்தி யிருக்கின்றனர். அப்படியே இதோ பிரயாண அனுமதிப்பத்திரத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே எனக்கும் இங்கு இடமளிப்பீர்களா? உண்டபின் குதிரை கட்டும் இடத்திலாவது சிறிது உறங்கிப் பொழுது புலர்ந்தபின் சென்றுவிடுகிறேன்' என்று கூறினான்.

துறவி ஒன்றும் சொல்லாமல் 'இப்பொழுது உண்பாய். உண்டு முடிவதற்குள் படுத்துறங்குமிடம் தயாராகிவிடும்' என்று கூறி வேலைக்காரியை நோக்கி அதற்கு வேண்டியவற்றைச் செய்யுமாறு கட்டளையிட்டார். இதைக் கண்டதும் ஜீன்வால்ஜீனுக்கு வியப்புத் தாங்கமுடியவில்லை. சென்றவிடமெல்லாம் வசைமாரி பொழிவதைக் கேட்டுக்கொண்டு திரும்பிய அவனுக்கு மிரியலின் அன்பு மொழிகளும் செய்கையும் நம்பக்கூடியனவாக இல்லை. நம்மை நல்ல மனிதரிடம் அனுப்பிவைத்தாள் என்று, வழி கூறிய முன் பின்னறியாத மங்கையை வாழ்த்தினான்.

துறவி அவனை அன்பு கனியப்பார்த்து 'ஐயா! இது எனக்குச் சொந்தமன்று. கடவுளுக்குரியது. யாரும் இங்கு வரலாம். இங்கு எனக்குள்ள உரிமை உமக்கும் உண்டு. இங்கிருக்கும் எல்லாப் பொருள்களும் உமக்கும் சொந்தமானவைகளே! ஆதலால் கலங்கவேண்டாம். பாவம், பல ஆண்டுகளாக மிக்க பெருந் தொல்லைகளை அனுபவித்திருக்கின்றீர். இனி உமது தொல்லைகள் அகன்றன' என்று கூறினார்.

அதுவரை தன்னைக்கண்ட யாரும் 'நாயே, பேயே' என்று வைது துரத்தியிருக்க, இப்பொழுது 'ஐயா' என்றும் 'நீங்கள்' என்றும் சொல்வதைக் கேட்டவுடன் அவன் தன் காதுகளையே நம்பமுடியாமல் திகைத்தான். துறவியை உளமார வாழ்த்தினான். இதற்குள் உணவு பரிமாறப்பட்டது. பசிதீர வுண்டான். அதன்மேல் துறவியார் அவனை அழைத்துச் சென்று ஒரு அறையில் படுத்துறங்கச் சொல்லிவிட்டு, ஒரு வெள்ளிக் குத்துவிளக்கையும் அங்கு வைத்துவிட்டு மீண்டும் தன்னறைக்கு வந்துவிட்டார்.

ஜீன்வால்ஜீன் மிகுந்த களைப்பினால் உடனே விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துறங்கி விட்டான்.

எங்கும் அமைதி குடிகொண்டது. மணி இரண்டடித்தது. ஜீன்வால்ஜீன் திடீரென்று எழுந்தான். அதன் பின் அவனுக்கு உறக்கம் வரவில்லை. அவன் சிந்தனையில் ஆழ்ந்தான். அவனுக்குப் பழக்கமான தீய நினைவுகள் தலைகாட்டத் தொடங்கின. வெள்ளி விளக்குகளும், வெள்ளித் தட்டுகளும் அவன் நினைவு அலையை மேலும் அலைத்தன. திருடர்கள் இயற்கையிலேயே திருடர்களாகவே பிறப்பதில்லை. சூழ்நிலையாலேயே அவர்கள் தீய செயலைச் செய்யத்தொடங்குகின்றனர். பிறகு, அதுவே அவர்கள் வாழ்க்கையாக மாறி விடுகிறது. ஜீன்வால்ஜீனும் அப்படிப் பட்டவனே.

ஜீன்வால்ஜீன் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். அவன் இளமையிலே பெற்றோரை இழந்தான். சில காலம் சகோதரியின் ஆதரவில் வாழ்ந்தான். சகோரியின் கணவரும் இறந்து விடவே சகோதரியையும் அவள் குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பு இவன்மேல் விழுந்தது. மிகவும் வருந்தி யுழைத்தும் உணவுக்குப் போதவில்லை. குடும்பம் பல சமயங்களில் பட்டினி கிடக்க நேர்ந்தது. ஒருநாள் ஜீன்வால்ஜீன் இதைப் பொறுக்காமல் ஒரு ரொட்டிக் கடையில் நுழைந்து திருட முயன்றான். ஆனால் அகப்பட்டுக் கொண்டான். சட்டம் அவனை ஐந்து ஆண்டுகள் சிறைக்குள் தள்ளியது. சிறையில் பலவாறு துன்புற்றான். நான்காவது வருடத்தில் சிறையிலிருந்து தப்பியோட முயன்று மீண்டும் அகப்பட்டான். இம்முறை மேலும் மூன்று ஆண்டுகள் தண்டிக்கப்பட்

டான். இவ்வாறே பத்தொன்பது ஆண்டுகள் சிறை வாசம் செய்தான். சிறையில் பலவகைக் குற்றவாளிகளுடன் பழகியதாலும், பலவகைத் துன்பங்களை அடைந்ததாலும் அவனது இயற்கை முற்றும் மாறி விட்டது. ஆகவே, அவன் சிந்தனை மீண்டும் அந்த வழியிலேயே சென்றது வியப்பல்லவே.

மணி மூன்றடித்தது. அவன் உள்ளத்தில் துறவியார் தூண்டிவிட்ட நல்லெண்ணத்திற்கும், அவனுக்கு நீண்டநாட் பழக்கமான தீய நினைவுகட்கும் பெரும் போராட்டம் நடந்தது. மணி நான்காயிற்று. முடிவில் தீய எண்ணங்களே வெற்றி கொண்டன. ஜீன் வால்ஜீன் ஒரு தீர்மானத்துடன் எழுந்தான். கதவைத் திறந்து கொண்டு அடிமேலடிவைத்துச் சென்றான். அவ் வெளியறையில் தான் துறவியார் உறங்கிக் கொண்டிருந்தார். பலகணி வழியாக வந்த நிலவொளியால் அவர் முகம் நன்றாகத் தெரிந்தது. "ஆகா! என்ன அமைதியும் அன்பும் விளங்கும் முகம்! என்ன பிரகாசமாயிருக்கிறது!" என்று வியந்தான். மீண்டும் உள்ளத்தில் போராட்டம். ஜீன்வால்ஜீன் சடக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு, துறவியார் தலைப்புறமிருந்த பெட்டியில் வைத்திருந்த வெள்ளித் தட்டுக்களை எடுத்துத் தன் பையில் வைத்துக் கொண்டு, திரும்பிப் பாராமலே வெளியேறி இருளில் மறைந்தான்.

பொழுது புலரும் சமயம் துறவியார் எழுந்து தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார். வேலைக்காரி பரபரப்புடன் ஓடிவந்து "ஐயா! பெட்டியில் வைத்த வெள்ளிப்பாத்திரங்களைக் காணவில்லையே" என்றாள். துறவியார் சிறிது நேரம் பேசாதிருந்து

விட்டு 'அம்மையே! இப்பாத்திரங்களை இவ்வளவு நாள் வைத்திருந்ததே தவறு. ஏழைக்குரிய பொருள்களை அவன் எடுத்துச் சென்றுவிட்டான்' என்று அமைதியாகக் கூறினர்.

இச்சமயம் கதவு திறந்தது. மூன்று போலீஸ்காரர்கள் ஜீன்வால்ஜீனைப் பிடித்துக்கொண்டு



அங்குத் தோன்றினர். போலீஸ் வீரர்தலைவன் துறவியாரை வணங்கினன். துறவியார் ஜீன்வால்ஜீனைப் பார்த்து 'அன்பரே! நீர் திரும்பி வந்ததற்கு மகிழ்ச்சி. நீர் செல்லும்பொழுது உமக்குரிய வெள்ளிக்குத்து விளக்கை ஏன்விட்டுச்சென்றீர்?' என்று கேட்டார். இக்கேள்வி போலீஸ் வீரரைத் திகைக்கச் செய்தது. அவர்கள் ஜீன்வால்ஜீனைப் பிடித்தது தவறு எனக் கருதினர். அவர்கள் உடனே 'அடிகாள்! இவரது தோற்றத்தால் தவருகக் கருதி இவரைக்

கைது செய்துவிட்டோம். தாங்கள் சொல்வதைக் கேட்டவுடன் எங்கள் பிழை தெரிந்து விட்டது. இனி நாங்கள் சென்று வருகின்றோம்' எனக் கூறி ஜீன்வால்ஜீனை விட்டுவிட்டுச் சென்றனர்.

ஜீன்வால்ஜீன் விடுதலை செய்யப்பட்டானாயினும், நாணத்தால் பேச்சுமூச்சற்றுத் தலைகவிழ்ந்து அசையாமல் நின்றான். துறவி அவனை நோக்கி "நண்பரே! இவற்றையும் எடுத்துச் செல்லலாம். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் இங்கு வரலாம். கதவு திறந்தேயிருக்கும்" என்று கூறினார்.

ஜீன்வால்ஜீன் தன்னை மறந்தவனாய் அவ் வெள்ளி விளக்கையும் வாங்கிக்கொண்டு பேச முடியாது கற்சிலைபோல் நின்றான். மீண்டும் துறவி "நண்பரே! நீர் இப்பொழுது நல்லவராய்விட்டீர். உமது தீய இயல்புகள் ஒழிந்து விட்டன. உம்மை இருளிலிருந்து ஒளிவடிவான கடவுளிடம் சேர்த்து விட்டேன். இப்பொழுது நீர் சென்று வரலாம்!" என்று கூறினார்.

ஜீன்வால்ஜீன் துறவியாரின் சொல்லாலும் செயலாலும் முற்றும் மாறிய மனிதனாக வெளியே சென்றான். அதன்பின் அவன் நல்வழியில் நடந்து செல்வம் திரட்டி மக்களுக்குத் தொண்டு செய்வதே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வரலானான்.

சொற்பொருள்:— எல்லையற்ற-அளவற்ற, வசைமாரி -வசவு மழை, தொல்லை-துன்பம், அடிகாள்-பெரியோரே, கற்சிலை-கல் உருவம், குறிக்கோள்-கொள்கை.

## வினாக்கள்

1. மிரியலின் சிறப்பியல்புகள் யாவை?

2. ஜீன்வால்ஜீன் துறவியாரிடம் தன்னைப்பற்றிக் கூறிக்கொள்வது என்ன?

3. ஜீன்வால்ஜீன் குற்றவாளியான வரலாறென்ன?

4. போலீஸார் பிடித்து வந்தபொழுது துறவியார் சொன்னதென்ன?

5. போலீஸார் சென்றபின் துறவியார் ஜீன்வால் ஜீனை நோக்கிக் கூறியதென்ன?

## பயிற்சி

ஏற்ற இடங்களில் தகுந்த நிறுத்துக் குறிகளை இடுக:

*அவன் எல்லையற்ற வியப்படைந்து ஐயா நான் யாரென்பதை அறிந்து கொண்டீர்களல்லவா நான் ஒரு சிறைக் குற்றவாளி ஆகவே எனக்கும் இங்கு இடமளிப்பீர்களா உண்ட பின் குதிரை கட்டும் இடத்திலாவது சிறிது உறங்கிப் பொழுது புலர்ந்தவுடன் சென்று வருகின்றேன் என்று கூறினான்*

## இலக்கணம்

பின் வரும் தொடர்களைச் சேர்த்தெழுதி இன்ன விகாரம் எனக் கூறுக:

திரும்பி + பார், முள் + செடி, தேசம் + மக்கள்.
சிறை + சாலை, மண் + புலன், மரம் + வேர்.

## கட்டுரை

நீ படித்துள்ள கதைகளில் ஒன்றை வரைக.

# 24. கோவில் - திருப்பணி

## (நாள் மலர்த்தாள்-செய்தி)

சென்னைப் பிரதமராயிருந்த ஸ்ரீ ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள், 1949-ம் வருடம் மார்ச்சு ஏழாம் நாள் ஸ்ரீ வேங்கடேஸ்வர கல்லூரி அஸ்திவாரக்கல் நாட்டு விழாவில் பேசியதாவது :—

உண்மைக் கல்வியானது உள்ளத்திற்கு ஒளியைத்தருகிறது. இருளை ஓட்டுகின்றது. வாழ்க்கையின் தளைகள் கட்டவிழ்கின்றன. இவ்வாறு இறைவனை அடைந்து அழியாத இன்பவுலகத்தை அடைய



வழி காட்டுகின்றது. இத்தகைய கல்வியறிவு வளர்ந்தோங்குதற்கு மூலமாயிருந்தவை, நமது நாட்டில் எழுந்த கோவில்களேயாம். இதன் பொருட்டே நமது நாடெங்கும் கோவில்கள் தோன்றின. நமது நாட்டுக் கோவில்கள் எல்லாம் வெறுஞ் சிற்பக்கலையும், சித்திரக் கலைகளும் விளங்குதற்கு எழுந்தனவல்ல. ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை அறிவிப்பதோடு, வீடு பேறடையச் செய்விப்பதே முக்கிய நோக்கமாகக் கொண்டு எழுந்தன. அதுவே நமது வாழ்க்கையின் குறிக்கோளாகும். அது ஆன்மாவுக்கு ஆக்கமளிப்பதுடன் உடலின் தேவைகளையும் உதவுகிறது. அதனால், ஒத்த வுணர்ச்சி, சமூக வாழ்வு, பொருளாதாரம் முதலியன இயங்குகின்றன.

தமிழ்நாட்டின் வட எல்லையாகச் சொல்லப்பட்டுள்ள வேங்கடத்தின் நிலைக் குன்றுகளில் இருந்து கன்னியாகுமரி முனை வரை நம் நாட்டின்கண் உள்ள நகரமைப்புத் திட்டங்களைக் கூர்ந்து பாருங்கள். ஒவ்வொரு ஊர் நடுவிலும் கோயிலே. 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற தமிழ்ப் பழமொழியில் வியப்புக் கிடமில்லை. கோவில் எங்கு இல்லையோ அங்கு உண்மையான கலைகள், ஒழுக்கமான வாழ்வு முதலியன இல்லையாகும். நுணுக்கமான சமூகநியதி இல்லை. போதுமான பொருளாதார வசதிகளும் இல்லாமற் போம்.

பண்டைக்காலத்தில் நம் கோவில்களெல்லாம் பூசைகளும் உற்சவங்களும் நடைபெறும் இடங்களை விட எவ்வளவோ மேலாக இருந்தன. இதை இந் நாட்டின் புராதனச் சின்னங்களைப் பற்றிச் சிறிதளவு தெரிந்தவர்கள் கூட உணர்வார்கள். தொன்று தொட்டே கோயில்களுடன், அறிவு வளர்ச்சிக்கான பலவகை நிலையங்களும் இணைக்கப்பட்டு வந்தன. இலக்கண நிபுணர்கள் வாதிக்கவும், கொள்கை மாறுபாடுள்ள தத்துவ நூல்களைப் பற்றிய வாதம் நிகழவும், வெவ்வேறு மண்டபங்கள் இருந்தன. வியாகர்ண மண்டபங்களும், வியாக்கியான மண்டபங்களும் இருந்தன. இசையரங்குகளும், நடனமண்டபங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

15 படுக்கைகள், ஒரு சத்திர சிகிச்சை நிபுண வைத்தியர் (சர்ஜன்), இரு பெண் நர்ஸ்கள், மற்றும் ஏராளமான சிப்பந்திகளுடன் கூடிய பெரிய மருத்து

வச்சாலை ஒன்று இருந்ததாக 11-ம் நூற்றாண்டு சோழசாசனம் ஒன்று கூறுகிறது. அநாதை விடுதிகள், எளியோர்களை ஆதரிக்குமிடங்கள்-இருந்தன. அவர்களுக்கு வாரம் இருமுறை தலைக்கெண்ணெய் கூட இலவசமாக வழங்கப்பட்டது. மாணவர்களுக்கான விடுதிகள் (ஹாஸ்டல்கள்) இருந்தன. மற்றொரு சோழசாசனம், 300 மாணவர்கள், பத்து ஆசிரியர்கள், பெரிய விடுதிகள் கொண்ட கல்லூரி ஒன்றைப் பற்றி யுரைக்கின்றது. ஒவ்வொரு கோயிலிலும் நூல் நிலையம் இருந்தது. அதற்குச் 'சரஸ்வதி மந்திரம்' என்று பெயர். பொருளாதாரப் புனரமைப்புக்குக் கோயில்கள் முக்கிய நிலைக்களமாக விருந்தன. கோயில்களுக்குக் கிடைத்து வந்த வருமானம் பெரும்பாலும் விவசாய வளர்ச்சியின் காரணமாகப் பயன்படுத்தப்பட்டது. கால் நடைகளும் நன்கு கவனிக்கப்பட்டு வந்தன.

புராதனக் கோவில்களின் நிருவாகத்தில், அதிகமான அளவு தனி அதிகாரம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவ்வதிகாரத்தில் அரசாங்கம் தலையிடுவது அருமையாக விருந்தது. ஆனல், அதிகாரம் முறை தவறிச் செல்லுமிடத்து அரசாங்கம் குறுக்கிடத்தான் செய்தது. சாளுவ நரசிம்மர் காலத்தில் விலைமதிப்புள்ள கோவில் நகைகளைக் களவு செய்த குற்றத்திற்காகச் சில குருக்கள்மீது குற்றம் கண்டு பிடிக்கப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டதென்று சாஸனம் கூறுகின்றது.

அறிவு வளர்ச்சிக்கான நிலையங்கள் யாவும், சமயச்சார்பான நிலையங்களைத் தாயாகவே கொண்டு வளர்ச்சியுற்றன. நமது நாட்டில் மிகப் புராதன

மான கோவில்களில் பல்கலைக் கழகங்கள் அமைக் கப்பட்டிருந்தன. மதுரைச் சோமசுந்தரர் கோவி லில் அடுத்தடுத்துத் தமிழ்ச் சங்கங்கள் இருந்தன. காஞ்சியில் புத்தர்கள், சமணர்கள், சைவர்கள், வைணவர்கள் என்ற பலதரப்பட்டோரின் பல்கலைக் கழகங்கள் இருந்தன. காசியிலும், நாலந்தாவிலும் கூட, அறிவு வளர்ச்சிக்கான கழகங்கள் இருந்தன வாம்.

அன்னியராட்சி தோன்றிய நிலையில், பள்ளி களும் கல்லூரிகளும் எங்கும் தோன்றலாயின. கல்வி பிரிந்தது. மதச் சார்பற்ற கல்வி, புனிதமான கல்வி போதிக்கப்பட்டது. ஆகவே, மதச் சார்பான கல்வி குன்றியது. தற்காலத்தில் புராதன புனித நகரான திருப்பதியில் தோன்றிய கல்லூரியும் நாளுக்கு நாள் வளர்ச்சியுற்று, பண்டைக் கோவில்கள் கொண் டிருந்த குறிக்கோள்கள் வளர்ச்சியடைய வேண்டும். அப்போதுதான் கல்லூரியின் அஸ்திவாரம் உண் மையில் உறுதியாக இடப்பட்டதாகும்—என்று பேசி முடித்தார்.

சொற் பொருள்:— தளை-பந்தம், வீடுபேறு - மோட் சம், குறிக்கோள் - கொள்கை, ஆக்கம் - சிறப்பு, புரா தனம் - பழமை, வியாகரணம் - இலக்கணம், வியாக்கியா னம் - விரிவுரை, நியதி - ஏற்பாடு, புனரமைப்பு - சீர் திருத்தம், புனிதம் - தூய்மை.

## வினாக்கள்

1. உண்மைக் கல்வி எத்தகையது?
2. கோவில்கள் தோன்றியதன் காரணம் என்ன?
3. கோவில்களில் இணைந்திருந்த நிலையங்கள் யாவை?

4. கோவில்களில் பல்கலைக் கழகங்கள் இருந்தன என்பதற்குச் சான்று தருக.

## பயிற்சி

எதிர்ப்பதம் கூறுக:

சுத்தம், விருப்பு, வாழ்வு, சத்தியம், புகழ், போற்றி இன்பம், அகம், புராதனம்.

## இலக்கணம்

செய்வினையைச் செயப்பாட்டு வினையாகவும், செயப்பாட்டு வினையைச் செய்வினையாகவும் மாற்றுக:

உண்மைக் கல்வி இருளை ஓட்டுகின்றது.
நம் நாடு நம்மவரால் ஆளப்படுகிறது.
மகாத்மா அஹிம்சையை உபதேசித்தார்.
ஜவஹர்லால் நேரு உலகத்தால் புகழப்படுகிறார்.

## கட்டுரை

நீ பார்த்த ஒரு திருவிழாவைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

# செய்யுள்

## வாழ்த்துப் பகுதி

### 1. தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

— திருநாவுக்கரசர்.

### 2. திருமாலை

விரும்பிநின் றேத்த மாட்டேன் விதியிலேன் மதியொன் றில்லை
இரும்புபோல் வலிய நெஞ்சம் இறையிறை உருகும் வண்ணம்
சுரும்பமர் சோலை சூழ்ந்த அரங்கமா கோயில் கொண்ட [ஆறே
கரும்பினைக் கண்டு கொண்டேன் கண்ணிணை களிக்கும் 1

குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி,
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலு மாகண்(டு)
உடலெனக் குருகு மாலோ! என் செய்கேன்? உலகத் தீரே! 2

— தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்.

### 3. திருவருட்பா

தேன்பிடிக்கும் தெள்ளமுதாம் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன் நானென்றே
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் எனநின்ற தனிக்கருணைப் பெருந்தகையே.

— இராமலிங்க சுவாமிகள்.

## 4. திருப்பள்ளி யெழுச்சி

பொழுது புலர்ந்தது; யாம்செய் தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்துநிற் கின்றேம்.
விழிதுயில் கின்றனை யின்னு மெந்தாயே
வியப்பிது காண்! பள்ளி யெழுந்தருளாயே.

—பாரதியார்.

## 5. இரக்ஷணிய யாத்திரிகம்

பத்தனய்ப் பாடேன் சுத்தன யொழுகேன்
பகலெலாம் பாவமே பழகி
எத்தனய்க் கழித்தே னின்றுளே னுனை
யிலனென வெண்ணவும் படுவேன்
பித்தனேற் குனது பேரரு ளல்லாற்
பிழைக்குமா றில்லையா தலினல்
அத்தனே யடியே னின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே.

—வித்வான் H. A. கிருஷ்ண பிள்ளை.

## 6. தாயுமான அடிகள் திருப்பாடல்

எத்திக்குந் தானகி என்னிதயத் தேயூறித்
தித்திக்கும் ஆனந்தத் தேவே பராபரமே. 1
அன்பைப் பெருக்கிஎன தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே. 2

— தாயுமான சுவாமிகள்.

# நீதிப் பகுதி

## 1. திருக்குறள்

### அன்புடைமை

அறத்திற்கே யன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை. 1

### இனியவை கூறல்

இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 2

### அடக்க முடைமை

யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 3

### ஒழுக்க முடைமை

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினு மோம்பப் படும். 4

### பொறை யுடைமை

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 5

### அழுக்காருமை

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 6

### புறங்கூறுமை

அறங்கூறு னல்ல செயினும் ஒருவன்
புறங்கூறு னென்ற லினிது. 7

### பயனில சொல்லாமை

பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும். 8

### தீவினை யச்சம்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினு மஞ்சப் படும். 9

### ஒப்புரவறிதல்

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு. 10

### புகழ்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 11

### இன்னா செய்யாமை

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல். 12

—திருவள்ளுவர்.

## 2. நான்மணிக் கடிகை

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை—மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ஈன்றாளோ(டு)
எண்ணக் கடவுளும் இல். 1

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்தில் சினம் குற்றம்; குற்றம்
தமரல்லார் கையகத் தூண். 2

மொய்சிதைக்கும் ஒற்றுமை யின்மை; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியை—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின். 3

—விளம்பி நாகனார்.

## 3. இனியவை நாற்பது

கற்ருர்முன் கல்வி யுரைத்தல் மிகவினிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானும் இரவாது தானீதல்
எத்துணையு மாற்ற வினிது. 1

கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருளினிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே
தெற்றென வின்றித் தெளிந்தாரைத் தீங்(கு) ஊக்காப்
பத்திமையின் பாங்(கு) இனிய தில். 2

மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமைத் தானடங்கி வாழ்வினிதே
ஊனமொன் றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க்(கு) எல்லா மினிது. 3

— பூதஞ்சேந்தனர்.

## 4. நாலடியார்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல — தெள்ளிதின்
ஆராய்ந்(து) அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. 1

அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மைஎஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல். 2

நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக்(கு) உமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கும் உண்டு. 4

— சமணமுனிவர்.

## 5. பழமொழி

உரைமுடிவு காணுன் இளமையோன் என்ற
நரைமுது மக்க ளுவப்ப — நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும். 1

எனக்குத் தகவன்ருல் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானுய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும் காணுர்
எனச்செய்யார் மாணு வினை. 2

மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா வொலிகடல்போல் — மிக்க
இனநலம் நன்குடைய வாயினும் என்றும்
மனநலம் ஆகாவாம் கீழ். 3

— முன்றுறையரையர்.

## 6. குமரேச சதகம்

### பலர்க்கும் பயன் படுவன

கொண்டல் பொழி மாரியும் உதாரசற் குணமுடைய
கோவும் ஊருணியின் நீரும்

கூட்டமிடும் அம்பலத் துறுதருவின் நீழலுங்
குடியாளர் விவசா யமும்

கண்டவர்கள் எல்லாம் வரும்பெருஞ் சந்தியில்
கனிபல பழுத்த மரமும்

கருணையுட னேவைத் திடுந்தண்ணீர்ப் பந்தலும்
காவேரி போலாற் றமும்

விண்டலத் துறைசந்தி ராதித்த கிரணமும்
வீசுமா ருதசீ தமும்

விவேகியெனு நல்லோர் இடத்திலுறு செல்வமும்
வேதுசனர்க் குபகா ரமாம்

வண்டிமிர் கடப்பமலர் மாலையணி செங்களப
மார்பனே வடிவே லவா

மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

—குருபாத தாசர்.

## 7. அறப்பளீசுர சதகம்

### கோபத்தின் கொடுமை

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடிகெ டுக்கும்

கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர்கொ டுக்கும்

கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே யுறவ றுக்கும்

கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணை போக்கும்

கோபமே யீனமாங் கோபமே யெவரையும்
கூடாம லொருவ னுக்குங்

கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழியி னிற்றள் ளுமால்

ஆபத் தெலாந்தவிர்த் தென்னையாட் கொண்டருளும்
அண்ணலே யருமை மதவேள்

அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே.

—அம்பலவாணக் கவிராயர்.

# வருணனைப் பகுதி

## 1. மழை

சோழனது சீமையிலே
 சோலித்தனவே மின்னல்கள்
நல்ல மழை பெய்ததனுல்
 நாடும் செழித்ததுவே;
தடாகங்கள் தாம்நிரம்பித்
 தாமரைகள் பூத்தனவே;
உலர்ந்த மரங்களெல்லாம்
 உயிருண்டாய்ப் பிழைத்தனவே
இலையும் தளிர்களெல்லாம்
 ஏகமாய்த் தளிர்த்தனவே;
செடிகள் கொடிகளெல்லாம்
 செழித்துத் தழைத்தனவே;
கிள்ளப் பழுத்தனவே,
 கிளிகள்வந்து சேர்ந்தனவே;
அள்ளப் பழுத்தனவே,
 அளிகள்வந்து பாய்ந்தனவே;
செந்நெல் விளைந்தனவே,
 தேசம் செழித்தனவே;
பயிர்கள் விளைந்தனவே,
 பலனைக் கொடுத்தனவே;
சோலைகளில் சாலைகளில்
 சூழ்ந்த தடாகங்களிலே
குயில்கள் அடுத்தனவே,
 குருவிகளும் வந்தனவே;
மயில்கள் அடுத்தனவே;
 வான்கோழி வந்தனவே.—அல்லி அரசாணிமாலை.

## 2. கடல்

எல்லை அறியாப் பெருங்கடலே — நீதான்
இரவும் உறங்கா யோகடலே
அல்லும் பகலும் அலைகடலே — உனக்(கு)
அலுப்பும் இல்லையோ கருங்கடலே! 1

உருண்டு திரண்டு வருங்கடலே — உடைந்(து)
ஓடிப் போவ தேன்கடலே
வெருண்டு மதிகெட் டாய்கடலே — பாறை
விலகிப் போகு மோகடலே! 2

பொங்கு திரைக ளோகடலே — அவை
புரவி நிரைதா மோகடலே
எங்கும் உனதொலி யோகடலே — அன்றி
இடியின் முழக்க மோகடலே! 3

ஓடம் எடுத்தெறி யும்கடலே — தயை
உனக்குச் சற்றிலை யோகடலே
ஆடல் வேடிக் கனக்கடலே — நீயும்
அழிப்ப தழகா மோகடலே! 4

மலையை வயிற்றடக் கும்கடலே — எண்ணில்
மகர மீனுல வும்கடலே
விலைகோள் முத்தளிக் கும்கடலே — சிப்பி
விளையா டற்குத வும்கடலே! 5

மழைக்கு மூலமும் நீ கடலே — அதை
வாங்கி வைப்பதும் நீ கடலே
வழுத்து மகிமை யெலாம்கடலே — எவர்
மதித்து முடிக்கவல் லார்கடலே! 6

— கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை.

# 3. உடற் பயிற்சி

## குழந்தைகளின் உடற்பயிற்சி

அறந்தழைக்கும் நிலவுலகில் ஆயசிறு குருவிகளும்
பிறந்தநாள் முதலாகப் பிரியமுடன் கைகாலை
உரம்பெறவே ஆட்டுகின்ற உண்மைதனை நோக்குவமேல்
சிறந்த பயன் உடற்பயிற்சி செய்யுமென அறிவோமே. 1

## இளங்கன்று இயற்றும் பயிற்சி

இளங்கன்று பிறந்தவுடன் எழுந்தோடி விளையாடி
உளம்பெற்ற மகிழ்ச்சியுடன் உடற்பயிற்சி செய்வதினுல்
வளம்பெற்று நாடோறும் வளருவதைக் காண்போமேல்
விளங்குமுடற் பயிற்சி நிதம் வேண்டுமென உணர்வோமே. 2

## உடற்பயிற்சியின் பயன்

கடற்கரைசூழ் நிலவுலகில் காணுமுயிர்க் கூட்டமெலாம்
உடற்பயிற்சி செய்வதினுல் உறுப்புரனை அடைவதனுல்
குடற்சூரனும் உண்டாகிக் கொண்ட வுண(வு) இரத்தமதாம்;
இடர்ப்பாடொன் றிலதாகும்; எழிலுமிக உளதாகும். 3

## உடற்பயிற்சி யின்மையால் உளதாகும் தீமை

செப்பரிய உடற்பயிற்சி செய்யாதார் மெய்த்தொகுதி
உப்பிருந்த பாண்டமென உழுத்துவிடும்; அல்லாமல்
வெப்பகன்ற நார்த்தசைகள் வெறும்பஞ்சை ஒப்பாகி
இப்புவியில் நடைப்பிணமாய் இன்பமென்ப தறியாரே. 4

## பெற்ருேர்க்கு நல்லுரை

பெற்ருேரே, இளமையில்நும் பிள்ளைகளைப் பலகலைகள்
கற்ருேத வைப்பது போல் காலையுடற் பயிற்சியையும்,
சொற்ருேத வைப்பீரேல் சுகமாக வாழ்வுறுவர்;
எற்ருேமற் றக்கல்வி இளைத்தபிணி யாளருக்கே! 5

— கா. சி. சிவசங்கர முதலியார்.

## கதைப் பகுதி

# 1. புத்தர்

### ஆட்டு மந்தையைக் கண்டு இரங்குதல்

மந்தை பெரிய மந்தை — உணவின்றி
வாடி மெலியு மந்தை

சிந்தை தளரு மந்தை — நடக்கவும்
சீவ னிலாத மந்தை. 1

கண்ணிலே கண்ட புல்லை — நின்றேருவாய்
கௌவிட வோட்டா ரையோ

தண்ணீர் குடிப்ப தற்கும் — விலகிடச்
சம்மதி யாரே ஐயோ! 2

காடு மலைக ளெல்லாம் — ஓடியோடிக்
கால்களு மோய்ந்த னவோ

ஆடுக ளாயி டினும் — எவரிவ்
அநியாயம் செய்வா ரையோ! 3

தன்னந் தனி யாகி — ஒருமறி
தாவிமுன் னோடு தையோ!

பின்னே ரிள மறியும் — பிந்தியிங்கு
பீடை படுதே ஐயோ! 4

கல்லெறி கொண்ட துவோ — விழுந்தொரு
கால்முட மான துவோ

செல்லும் வழி நீள — உதிரமும்
சிந்திப் பெருகு தையோ! 5

ஓடும் மறி தேடித் — தாயுமுன்னில்
ஓரடி வைத்த வுடன்
வாடும் மறியை யெண்ணி — விரைந்துபின்
வந்து தயங்கு தையோ ! 6

## தாயாட்டின் துயர் போக்குதல்

*வேறு*

இத்தனையுங் கண்டுமன மிரங்கி நொண்டும்
இளமறியை யிருகரத்தி னெடுத்து வையம்
அத்தனையும் தாங்குபுய மணிய ஏந்தி
அருளுருவா மண்ணலுமத் தாயை நோக்கி, 7

*வேறு*

அல்ல லுற வேண்டாம் — இனித்துயர்
ஆறி வருவா யம்மா !
செல்லு மிடத்தி லுன்றன் — மதலையைச்
சேர்த்து விடுவே னம்மா ! 8
" ஏழைப் பிராணி களின் — இடர்களைந்(து)
இன்ப மளிப்ப துபோல்
வாழு மூல கிதனிற் — செயுமொரு
மாதவம் வேறு முண்டோ ? 9
மீளாத் துயர்க் கடலில் — உயிரெலாம்
வீழ்ந்து முழு கையிலே
பாழாங் குகை தேடிச் — செயுந்தவம்
பாவமே யாகு மம்மா " 10

## இடையரைக் கண்டு வினவுதல்

*வேறு*

என்றுகனிந் துளமுருகி நின்ற காலை
எமன்விட்ட தூதுவர்போல் ஆட்டை யெல்லாம்
குன்றிருந்து துரத்திவரு மவரைக் கண்டு
குவலயத்தில் அருள்மாரி பொழியு மையன், 11

*வேறு*

" மாலைப் பொழுதின்னு மாகவில்லை — வெயில்
மண்டை பிளந்து வெடிக்குதையோ!
சாலை வழியிந்த ஆடுகளும் — எங்கு
சாய்ந்து செலுமையா கூறும்" என்றார். 12

## இடையர் மறுமொழி கூறுதல்

அம்மொழி கேட்டவ் விடையருமே — " எம்மை
ஆளு மிறைவன தாணையினால்
செம்மறி நூறுவெள் ளாடும்ஒரு — நூறு
சேர்த்து வருகின்றோம்" என்றுரைத்தார்; 13

இன்றிரா யாகம் முடியுதென்றார் — அதில்
இத்தனை யுங்கொலை யாகுமென்றார்;
நின்றுசொல நேரம் இல்லையென்றார்; — இன்னும்
நீண்ட வழிபோக வேண்டுமென்றார். 14

வள்ளலு முள்ளம் வருந்தியானும் — அந்த
மாமகம் காண வருவேனென்று
தள்ளு மறியுஞ் சுமந்துகொண்டு — தாயும்
சோர்ந்து தொடர வழிநடந்தார். 15

— கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை.

# 2. நளவெண்பா

(சுயம்வர காண்டம்)

## நளன் பூஞ்சோலையை அடைதல்

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக. 1

## நளன் முன் அன்னம் தோன்றல்

நீணிறத்தால் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தால் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு. 2

## அன்னத்தின் கலக்கம்

அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. 3

## நளன் அன்னத்தைத் தேற்றல்

'அஞ்சல் மடவனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மடநடையும்—விஞ்சியது
காணப் பிடித்தது காண்,' என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். 4

## அன்னம் தமயந்தியின் குண நலன்களை அறிவித்தல்

'நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக் கீழ்
ஆளுமே பெண்மை அரசு.' 5

### அன்னப் பறவை தமயந்தியை அடைதல்

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய—நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடம்சேர்ந் தாங்கதனை
என்னுடல் சொல்கென்றாள் ஈங்கு. 6

### அன்னம் நளனது சிறப்பைத் தமயந்திக்குக் கூறுதல்

செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு. 7

### வீமன் தமயந்திக்குச் சுயம்வரங் குறித்தல்

'மங்கை சுயம்வரநாள் எழென்று வார்முரசம்
எங்கும் அறை'கென் றியம்பினான்—பைங்கமுகின்
கூந்தல்மேல் கங்கைக் கொழுந்தோடும் நன்னாடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு. 8

### நளன் புறப்படுதல்

சடைச்செந்நெல் பொன்விளைக்கும் தன்னாடு பின்னாக்
கடல்தானை முன்னாகக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் போற்றும வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழும் நகர். 9

### இந்திரன் முதலிய தேவர்கள் வருதல்

மால்வரையை வச்சிரத்தால் ஈர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் திருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து. 10

### தமயந்தி சுயம்வர மண்டபம் புகுதல்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்-மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 11

### தோழி தமயந்திக்கு அரசர்களை அறிவித்தல்

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 12

### தமயந்தி நளனுருவாயிருந்த தேவர்களைக் கண்டு மயங்கல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்(று)
ஊசலா டுற்றாள் உளம். 13

### தமயந்தி நளனை அறிதல்

கண்ணிமைத்த லால்அடிகள், காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்,—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு. 14

### தமயந்தி நளனுக்கு மாலை சூட்டல்

விண்ணரசர் எல்லோரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 15

—புகழேந்திப் புலவர்.

# 3. கம்ப ராமாயணம்

## பரதன் சகோதரப் பற்று

(பரதன் பரிவாரங்களுடன் வருவதை இலக்குவன் கண்டு கடுஞ் சினங் கொண்டு கூறுதல்.)

குதித்தனன் பாரிடைக் குவடு நீறெழ
மிதித்தன னிராமனை விரைவி னெய்தினான்
மதித்திலன் பரதனின் மேல்வந் தான்மதிற்
பதிப்பெருஞ் சேனையின் பரப்பினா னென்றான். 1

கட்டினன் சுரிகையுங் கழலும் பல்கணைப்
புட்டிலும் பொறுத்தனன் கவசம் பூட்டமைத்
திட்டன னெடுத்தனன் வரிவி லேந்தலைத்
தொட்டடி வணங்கிநின் றினைய சொல்லினான். 2

இருமையு மிழந்தவப் பரத னேந்துதோட்
பருமையு மன்னவன் படைத்த சேனையின்
பெருமையு நின்னொரு பின்பு வந்தவென்
னொருமையுங்கண்டினி யுவத்தி யுள்ளநீ. 3

ஒருமகள் காதலி னுலகை நோய்செய்த
பெருமக னேவலிற் பரதன் றன்பெறு
மிருநில மாள்கைவிட் டின்றென் னேவலால்
அருநர காள்வது காண்டி யாழியாய். 4

வையகம் துறந்துவந் தடவி வைகுதல்
எய்திய துனக்கென நின்னை யீன்றவள்
நைதல்கண் டுவந்தவள் நவையி னோங்கிய
கைகயன் மகள்விழுந் தரற்றக் காண்டியால். 5

## இராமன் விடை

இலக்குவ வுலகமோ ரேழு மேழுநீ
கலக்குவ னென்பது கருதி னலது
விலக்குவ தரிதது விளம்பல் வேண்டுமோ
புலக்குரித் தொருபொருள் புகலக் கேட்டியால். 6

பெருமக னென்வயிற் பிறந்த காதலின்
வருமென நினைகையு மண்ணை யென்வயின்
தருமென நினைகையுந் தவிரத் தானையாற்
பொருமென நினைகையும் புலமைப் பாலதோ. 7

பொன்னொடும் பொருகழற் பரதன் போந்தன
னன்னெடும் பெரும்படை நல்க லன்றியே
யென்னொடும் பொருமென வியம்பற் பாலதோ
மின்னொடும் பொருவுற விளங்கும் வேலினாய். 8

சேணுயர் தருமத்தின் றேவைச் செம்மையி
னாணியை யன்னது நினைக்க லாகுமோ
பூணியன் மொய்ம்பினாய் போந்த தீண்டெனைக்
காணிய நீயிது பின்னுங் காண்டியால். 9

### பரத சத்துருக்நர் வருகை

என்றன னிளவலை நோக்கி யேந்தலு
நின்றனன் பரதனு நிமிர்ந்த சேனையைப்
பின்றரு கென்றுதன் பிரிவில் காதலிற்
றன்றுணைத் தம்பியுந் தானு முந்தினான். 10

### பரதனை இராமன் பார்த்தல்

தொழுதுயர் கையினன் றுவண்ட மேனிய
னழுதழி கண்ணின னவல மீதென
வெழுதிய படிவமொத் தெய்து வான்றனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினான். 11

### இராமன் இலக்குவனிடம் கூறுதல்

கார்ப்பொரு மேனியக் கண்ணன் காட்டினு
னூர்ப்புறு வரிசிலை யிளைய வையநீ
தேர்ப்பெருந் தானையப் பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கெனு. 12

### இலக்குவன் உண்மை யுணர்ந்து வருந்துதல்

எல்லொடுங் கியமுகத் திளவ னின்றனன்
மல்லொடுங் கியபுயத் தவனை வைதெழுஞ்
சொல்லொடுஞ் சினத்தொடு முணர்வு சோர்தர
வில்லொடுங் கண்ணநீர் நிலத்து வீழவே. 13

### பரதன் அன்பு

கோதறத் தவஞ்செய்து குறிப்பி னெய்திய
நாதனைப் பிரிந்தன னலத்தி னீங்கினுள்
வேதனைத் திருமகண் மேலிகின் ருள்விடு
தூதெனப் பரதனுந் தொழுது முன்சென்ருன். 14

அறந்தனை நினைந்திலை யருளை நீத்தனை
துறந்தனை முறைமையை யென்னுஞ் சொல்லினுன்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தன
னிறந்ததன் ருதையை யெதிர்கண் டென்னவே. 15

### இராமன் பரதன் அன்பினைக் கண்டு கண்ணீர் பெருக்குதல்

உண்டு கோல் உயிரென வொடுங்கி னுருக்
கண்டனன் நின்றனன் கண்ணன் கண்ணெனும்
புண்டரீ கம்பொழி புனல வன்சடா
மண்டல நிறைந்துபோய் வழிந்து சோரவே. 16

### இராமன் பரதனைத் தழுவுதல்

அயாவுயிர்த் தழுகணீர் அருவி மார்பிடை
உயாவுறத் திருவுள முருகப் புல்லினுன்
நியாயமத் தனைக்குமோர் நிலைய மாயினுன்
தயாமுத லறத்தினைத் தழுவி யென்னவே. — கம்பர். 17

# 4. வில்லிபுத்தூரார் பாரதம்

(நிரைமீட்சிச் சருக்கம்)

## துரோணர் அர்ச்சுனனை எதிர்த்தபோது அவன் அவரை நோக்கிப் பணிமொழி பகர்தல்

"யாதுமோன் றறியா வென்னை
யிவ னலா(து) இலையேன்(று) இந்த
மேதினி மதிக்கு மாறு
வின்முதல் படைகள் யாவுந்
தீதறத் தந்த வுண்மைத்
தெய்வநீ யென்றால் பஞ்ச
பாதகந் தன்னி லொன்றுன்
பதயுகம் பிழைப்ப(து) ஐயா. 1

## துரோணர் விசயனுடன் செஞ்சோற்றுக் கடன் கழிக்கப் போர் புரிவேன் எனல்

அம்முனி தன்னோ டிவ்வா(று)
அருச்சுனன் புகல வல்விற்
கைம்முனி வனுஞ்செஞ் சோற்றுக்
கடன்கழித் திடுதல் வேண்டும்,
தெம்முனைமதியா வீரா!
தேவர்தம் பகையை வென்ற
வெம்முனை காணு மாறுன்
வில்வளைத் திடுக" என்றான். 2

## இருவரும் போர் செய்தல்

அதிரதர் தம்மை யெண்ணில்
அணிவிரல் முடக்க வொட்டா
முதிர்சிலை முனியும் வீர
முனிவிலா முகனும் விட்ட

கதிர்முனைப் பவன வேகக்
கடுங்கோடும் பகழி யாவும்
எதிரெதிர் கோத்த வல்லாற்
பட்டில இருவர் மேலும். 3

## துரோணர் தோல்வியுறல்

ஏறுதேர் முரிய வேத
மெழுதிய துவசம் வீழத்
தாறுபாய் புரவி நான்குஞ்
சாரதி தலையுஞ் சிந்தக்
கூறுபோர் நாணி யோடு
குனிசிலை துணியப் பின்னர்
ஆறுகோல் தொடுப்ப வெள்கி
ஆரியன் முதுகிட் டானே. 4

## அருச்சுனன் பகைவரது ஆடைகளைப் பறித்தல்

இத்தரை யிடங்கொ ளாமல்
இறந்தனர் போல வீழ்ந்த
மத்தரை மயிர்கோய் தென்ன
மணிக்கொடித் தூசுந் தூசும்
உத்தரை வண்டல் பாவைக்(கு)
உடுத்துதற் கென்று கொய்தான்
அத்தரை மவுலித் திங்கள்
அமுதுகப் புடைத்த வில்லான். 5

## பகைவர்கள் விசயனை வாழ்த்தித் திரும்புதல்

விழுந்தவர் நெடும்போ தாக
மெய்யுணர் வெய்தி மெல்ல
அழுந்திய பகழியோடும்
அரில்படு கவசத் தோடும்
எழுந்துதம் இரதம் யானை
இவுளியி னேறி யேறித்

தொழுந்தகு தெய்வ மன்ன
சூரனைத் துதித்து மீண்டார். 6

## துரியோதனன் மகுடபங்கம் செய்யப்படுதல்

கொடிமதிற் பாகை வேந்தன்
கொங்கர்கோன் புரவிக் காலால்
வடதிசை யரசர் தங்கள்
மாமணி மகுடம் போல
அடலுடை விசய னேற்றை
யம்பினன் மீண்டுஞ் சென்று
படவர வுயர்த்த கோவைப்
பண்ணினன் மகுட பங்கம். 7

(மறைந்துறை காலம் நிறைவேறு முன் பாண்டவர் வெளிப் பட்டனர் என்ற துரியனுக்கு வீடுமன் மறுமொழி கூறல்)

“வல்லினி லழிந்து நின்முன்
மன்னவை தன்னின் அன்று
சொல்லிய காலம் செல்லா
முன்னிவர் தோற்றஞ் செய்தார்
புல்லிய கானின் இன்னம்
போக நீ புகறி” என்று
வெல்படை வேந்தன் சொல்ல,
வீடுமன் மீண்டுஞ் சொல்வான். 8

செந்நெலே கன்னல் காட்டச்
சேர்ந்தயற் செறுவி னின்ற
கன்னலே கமுகு காட்டுங்
கங்கைநீர் நாட கேண்மோ!
இன்னலே யுழந்தோர் காலம்
இந்துவி னியக்கந் தன்னால்
நென்னலே சென்ற(து)” என்றான்
நெஞ்சினில் அழுக்கி லாதான். 9

—வில்லிபுத்தூராழ்வார்.

## 5. சிலப்பதிகாரம்

(கோவலன் கொலையுண்டதைக் கேட்ட கண்ணகி ஒற்றைச் சிலம்பினைக் கையிற்கொண்டு கண்ணீருடன் தன் முன்னே நிற்கக்கண்ட பாண்டியன் 'நீ யார்?' என்று வினவிய போது, கண்ணகி தன்னை உணர்த்தினது.)

தேரா மன்ன செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்ன நின்னகர்ப் புகுந்திங்(கு)
என்கால் சிலம்பு பகர்தல்வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி என்ப(து) என்பெய ரேஎன.

— இளங்கோவடிகள்.

## 6. மணிமேகலை

### அறவுரை

(ஊனையும் கள்ளையும் ஒழித்தல் வேண்டும் எனல்)

மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்!
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற(து) உண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல(கு) அடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநர(கு) அடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்.

— சீத்தலைச்சாத்தனார்.

# பல்சுவைப் பகுதி

## தனிப் பாடல்கள்

### 1. தமிழ் நாட்டின் சிறப்பு

வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து — பூழியர் கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

— ஔவையார்.

### 2. சீதக்காதிப் பிரபு இறந்தபோது பாடியது

பூமா திருந்தென்ன ? புவிமா திருந்தென்ன ? பூதலத்தில்
நாமா திருந்தென்ன ? நாமிருந் தென்ன ? நன் னாவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமா னிறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே.

— படிக்காசுப்புலவர்.

### 3. பாம்புக்கும், எலுமிச்சம்பழத்துக்கும் சிலேடை

பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணு மூப்புமே லாடும் — எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம்.

—காளமேகப் புலவர்.

### 4. எல்லோருக்கும் விசனம் உண்டு

பாலுக்குச் சர்க்கரை இல்லையென் பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போடவுப் பில்லையென் பார்க்கும் குற்றித்தைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென் பார்க்கும் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லையென் பார்க்கும் விசனமொன்றே.

## 5. செண்பக ராமன் பள்ளு

### பாண்டிய நாட்டு வளம்

கன்னல், முத்தம் கழனியிற் சிந்தும்
கமல முத்தம் கமலத்திற் சிந்தும்
சேந்நெல் முத்தம் வயல்தோறுஞ் சிந்தும்
சிப்பி முத்தம் திரைதோறுஞ் சிந்தும்
வன்ன மேகமுத் தெங்கணுஞ் சிந்தும்
வால்வ ளைமுத்தம் வண்டலிற் சிந்தும்
அன்ன தாதாவெம் வஸ்திய ஞாயஞ்சோல்
ஆணை சேர்பாண்டி நாடெங்கள் நாடே.

## 6. நாரை விடு தூது

நாராய்! நாராய்! சேங்கால் நாராய்!
பழம் படு பனையின் கிழங்கு பிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் சேங்கால் நாராய்!
நீயும்நின் பேடையும் தேன்திசைக் குமரி ஆடி
வடதிசைக் கேகுவீ ராயின் எம்மூர்ச்
சத்தி முற்ற வாவியுள் தங்கி,
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லிப்
பாடு பார்த் திருக்கும்எம் மனைவியைக் கண்டே,
'எங்கோன் மாறன் வழுதி கூடலில்,
ஆடை யின்றி வாடையில் மெலிந்து,
கையது கொண்டு மெய்யது போத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்' எனுமே.

—சத்திமுற்றப் புலவர்.

## 7. திருவரங்கக் கலம்பகம்

### மறம்

கோற்றவன்தன் திருமுகத்தைக் கோணர்ந்த தூதா
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்

அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலமென் றறியாய் போலும்

மற்றதுதான் திருமுகமே யானல் அந்த
வாய் செவிகண் மூக்கெங்கே மன்னர் மன்னன்

பெற்றவிள வரசானல் ஆலின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்பப் பேசு வாயே.

## 8. புறநானூறு

### கல்வியின் சிறப்பு

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
"மூத்தோன் வருக" என்ன(து) அவருள்
அறிவுடை யோன(று) அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

## 9. குறத்தி மலை வளங்கூறல்

கயிலையெனும் வடமலைக்குத் தெற்குமலை யம்மே
கனகமகா மேருவென நிற்குமலை யம்மே

சயிலமுனி தென்மலைக்கு வடக்குமலை யம்மே
சகலமலை யுந்தனக்கு ளடக்குமலை யம்மே

வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை யம்மே
வானி ரவி முழைகடோறும் நுழையுமலை யம்மே

துயிலுமவன் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும்
துங்கர்திரி கூடமெங்கள் சொந்தமலை யம்மே.

—திரிகூடராசப்பக் கவிராயர்.

## 10 கால மழை

எங்கள்புர மெல்லாம் திங்கள்மழை பெய்யும்;
வேங்கிபுர மெல்லாம் விடியநிலாக் காயும்;
தோழிபுர மெல்லாம் சோதிநிலாக் காயும்;
கன்னிபுர மெல்லாம் காலமழை பெய்யும்;
மின்னலும் இடியும் வேகமாய்ச் சோரியும்;
கானலும் மழையும் கறக்குமந்த மானம்;
ஊசிபோல மின்னல் உறியைப்போலக் காலும்
மாசிபோல மின்னல் மழையிறங்கிப் பெய்யும்.

— நாடோடிப் பாடல்-இலக்கியம்.

## 11. திரிகைப் பாட்டு

பாட்டுக்கள் பாடியிதைச் சுற்றுவோமே—மூளை
பையவே கழன்றிடாமல் பற்றுவோமே

வீட்டுக்கு நன்மைதரும் யந்திரமம்மா—இது
வேண்டும் பொருள்கள்பல தந்திடுமேம்மா ! 1

நெல்லைப்போட்ட வொரு நொடியினிலே—மிக
நேர்த்தியரிசிவிழும் அடியினிலே

சொல்லும் அரிசியெனில் மாவாக—வெகு
சுகமாய்ச் சொரிந்துவிழும் பூவாக 2

உழுந்தை யுடைப்பதற்கும் பயன்படுமே—மிக
ஒன்றிரண்டாய்த் துவரையும் உடைந்திடுமே

பழம்புகழ் கொண்டவொரு கருவியிதே—பல
பண்டம் செயவுதவும் திரிகையிதே. 3

—நா. லக்ஷ்மீநரசிம்மன்.

## 12. கயிறு திரித்தல்

பொன்னிலும் பட்டிலுமே—பலரும்
புகழும் பஞ்சிலுமே
மன்னு பல வடிவில்—கயிறாய்
வந்து விளங்கிடுவேன். 1

தென்னஞ் சவுரியிலும்—எளிமை
சேரும் கற்ருழையிலும்
இன்னும் நவ நவமாம்—பொருளாய்
எங்கணும் வந்திடுவேன். 2

தேரை இழுத்திடுவேன்—இனிய
தெண்ணீரிறைத் திடுவேன்
கூரையைக் கட்டிடுவேன்—பிறகு
கூடை முடைந்திடுவேன். 3

—சீ. நாராயணன்.

## 13. கதராடை

எங்கள் நாட்டுப் பருத்திப் பஞ்சை
யெடுத்து வில்லால் அடிப்போம்—அதில்
இருக்கும் கொட்டை பிரித்துப் பட்டை
யியற்றிச் சுருட்டி மடிப்போம்! 1

மடித்த பஞ்சைத் தக்கிளியால்
ராட்டினத்தால் ஏற்போம்—அதை
மலர்க் கரத்தின் நகத்துணையால்
மணி மணியாய் நூற்போம்! 2

நூற்ற நூலைச் சிட்ட மாக்கிப்
பாவாற்றி முடிப்போம்—வேகு
நூதனம் நூதன மெனவே
சாய வகை கொடுப்போம்! 3

கைத்தறியால் நெசவு செய்து
கதருடையே உடுப்போம்—ஒரு
காந்தி தரும் போது வாழ்வில்
கலந்து மனம் களிப்போம்! 4

வித்துவரத்தினம்-இராம. சுப்பிரமணியம்.

# குறிப்புரை

## 1. வாழ்த்துப் பகுதி

### 1. தேவாரம்

வாழ்த்து - முதனிலைத் தொழிற்பெயர். பகுதி - பிரிவு. தேவாரம் - தே + வாரம். தெய்வத் தன்மையுடைய இசைப் பாட்டு என்பது பொருளாகும். (வாரம்- இசைப் பாட்டு) தே + ஆரம் எனவும் பிரிக்கலாம். தே - தெய்வத்துக்குரிய, ஆரம் - மாலை. பூமாலை போன்ற பாமாலை.

தேவாரத்தைப் பாடியவர்கள் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் என்ற மூவராவர். இங்குள்ள தேவாரத்தைப் பாடியவர் திருநாவுக்கரசர். இவரது ஊர் திருஆமூர், தந்தையார் - புகழனார். தாயார்- மாதினியார். தமக்கையார்-திலகவதியார். குலம் - வேளாளர் குலம். மதம் - சைவம். காலம் 7-ம் நூற்றாண்டு. காலத்திருந்த அரசன் - பல்லவன். நாயன்மார் - திருஞானசம்பந்தர், அப்பூதியடிகள் முதலியோர்.

மாசு - குற்றம். மாலை - மாலை நேரம். மதியம் - சந்திரன். தென்றல் - தென்றிசையினின்றும் வீசும் காற்று. வீங்கு - முதிர்ந்த. மூசு - மொய்க்கும். அறை - ஒலிக்கும். பொய்கை - நீர்நிலை. எந்தை - எமது தந்தை, எமது தந்தை போன்றவன். இணை - இரண்டு. அடி - பாதம்.

### 2. திருமாலை

இந்நூல் வைணவ சமயாசாரியர் பன்னிருவரால் பாடப்பட்ட நாலாயிரப் பிரபந்தத்தில் உள்ளது. திருமாலையைப் பாடியவர் தொண்டர் அடிப் பொடியாழ்வார்.

இவரது ஊர் - திருமண்டங்குடி. இவரது இயற் பெயர் - விப்பிரநாராயணர். மதம் - வைணவம்.

1. ஏத்த - போற்ற. விதி - நல்வினை. மதி - அறிவு. இறை யிறை - சிறிது சிறிதாக. கண் இணை - இரு கண்களும்.

2. குடதிசை - மேற்றிசை. முடி - தலை. குண திசை-கிழ்த்திசை. பின்பு - முதுகு. கடல்நிறக் கடவுள் - நீல நிறக் கடவுள். (மால்). எந்தை - எமது தந்தை. அரவு அணை - பாம்புப் படுக்கை. (ஆதிசேடன் பாயலாக விளங்குகின்றான் என்பர்) துயிலல் - உறங்கல்.

## 3. திருவருட்பா

திருவருட்பாவைப் பாடியவர் இராமலிங்க சுவாமிகள். ஊர் - மருதூர். தந்தை - இராமைய பிள்ளை. 1823-ல் பிறந்தவர். இவர் வடலூரில் தருமச்சாலை, ஞான சபை, தண்ணீர்பந்தல் முதலியன அமைத்தார். இவர் அன்புருகப் பாடிய பாடலின் தொகுதியே அருட்பாவாகும். இவர் ஜீவகாருண்யம், மனுச்சோழன் முதலிய உரை நடை நூல்களும் எழுதியுள்ளார்.

தெள்ளமுதாம் - தெளிந்த அமுதம் போன்ற. ஊன் - உடல். பெருந்தகையே - மிகச் சிறந்தவனே.

## 4. திருப்பள்ளியெழுச்சி

இதனைப் பாடியவர் சுப்பிரமணிய பாரதியார். இவர் திருநெல்வேலியைச் சார்ந்த எட்டையபுரத்தில் சின்னச்சாமி ஐயர் புதல்வராக 1882-ல் பிறந்தார். இவர்பால் இயல்பாகவே அமைந்த கவி பாடும் திறமையால் பாரதியார் என்றழைக்கப் பெற்றார். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்பன இவரது குறிக்கோள்களாம். நாட்டுப்பற்றை வளர்க்கும் பாடல்களைத் தவிர குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய

கவிதை நூல்களும் பல உரை நடை நூல்களும் எழுதியுள்ளார். புன்மை இருட்கணம் - துன்பங்களாகிய இருள் கூட்டம், இரவி - சூரியன், தொண்டர் - அடியார்.

### 5. இரக்ஷணிய யாத்திரிகம்

இந்நூலை இயற்றியவர் - வித்துவான் கிருஷ்ண பிள்ளை. சமயம் - கிருத்துவ சமயம். இந்நூல் ஐந்து பருவங்களை யுடையது.

சுத்தன் - தூயன், அத்தனே - உயர்ந்தோனே, எத்தன் - வஞ்சகன், சரண் - அடைக்கலம்.

### 6. தாயுமான அடிகள் திருப்பாடல்

இதனை இயற்றியவர் தாயுமான அடிகள். இவரது ஊர் வேதாரண்யம். தந்தையின் பெயர் கேடிலியப்ப பிள்ளை என்பது. மௌன தேசிகரிடம் உபதேசம் பெற்றுத் துறவியாகிப் பல தலங்கட்கும் சென்று சமரஸ சன்மார்க்கமாகப் பாடல்களைப் பாடி வரலானார். மதம் சைவம்.

இதயம் - மனம், தேவே - தெய்வமே, பராபரமே - மேலான பரம்பொருளே, இறையே - கடவுளே.

## அறவுரைப் பகுதி

### 1. திருக்குறள்

இந்நூல் குறட் பாக்களால் ஆக்கப்பட்டதால் திருக்குறள் எனப் பெயர் பெற்றது. இது அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால், என முப்பால்களையுடையது பற்றி முப்பால் எனப் பெயர் பெற்றது. இதற்குத் தமிழ் மறை, பொது மறை, பொய்யாமொழி எனப் பல பெயர்களும் உண்டு. இந்நூல் அதிகாரம் ஒன்றிற்குப் பத்துக் குறள்களாக நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையுமுடையது. இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைச்

சேர்ந்தது. இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர். இவரது ஊர் மயிலை என்றும், மதுரை என்றும் சொல்லப் படும். இவரது மதம் இன்னதென்று துணிந்துரைக்க முடியவில்லை. இவரது வரலாற்றை அறிந்துகொள்ளத் தக்க ஆதாரங்களும் இல்லை. காலம் கடைச்சங்க காலம்.

1. அறம்-பெரியோர்களால் வகுக்கப்பட்ட நல்வழி, மறம்-தீயவழி, அறம் × மறம்.

2. இனிய - இனிய சொற்கள், இன்னாத - கடுஞ் சொற்கள், கனி-ஔவையுண்ட நெல்லிக்கனி போன்றது.

3. யா-எவற்றை, நா-நாவு, காக்க-தீய சொற்களி னின்றும் காக்க, சோகாப்பர் - துன்புறுவர், இழுக்கு - குற்றம்.

4. ஒழுக்கம் - நல்லொழுக்கம், விழுப்பம்-சிறப்பு, ஓம்பப்படும்-பாதுகாக்கப்படும்.

5. அகழ்வாரை - தோண்டுபவரை, இகழ்வார் - இகழ்பவர், தலை-முதன்மையான அறமாம்.

6. அழுக்கறுப்பான்-பொறாமைப்படுபவன், சுற்றம்- உறவினர், உடுப்பதூஉம் - உடுக்கும் உடையும், உண் பதூஉம் - உண்ணும் உணவும்.

7. அறம் கூறான்-அறத்தின் வழி ஒழுகாது, அல்ல- தீயன, புறங் கூறான்-புறங் கூறுதவன்.

8. பல்லார்-பலர், முனிய-வெறுக்க, பயன் இல- பயன் அற்ற சொற்கள், எள்ளப்படும்-நிந்திக்கப்படுவான்.

9. தீயவை-தீய செயல்கள், பயத்தல்-தரல், தீ-எரி.

10. ஊருணி - ஊரார் உண்ணுதற்குரிய நீர் நிலை, உலகு அவாம் - உலகத்தாரால் விரும்பப்படுகின்ற, திரு - செல்வம்.

11. தோன்றுக - பிறப்பாராக.

12. இன்னா - துன்பம், ஒறுத்தல் - தண்டித்தல்.

## 2. நான்மணிக்கடிகை

இந்நூலும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களைச் சேர்ந்தது. இதனைப் பாடியவர் விளம்பி நாகனார். மதம்-வைணவம். காலம் - கடைச் சங்க காலம். நான்கு மணிகளால் கோக்கப்பட்ட மாலைபோல, ஒவ்வோர் செய்யுளிலும் நானான்கு பொருள்கள் சொல்லப்பட்டிருத்தலின் இப் பெயர் பெற்றது.

1. உறுப்பு - அவயவம், கொண்டான் - நாயகன், துன்னிய - நெருங்கிய, கேளிர் - சுற்றம், சான்ற - மிகுந்த, ஈன்றாள் - தாய், இல் - இல்லை.

2. கல்லாமை - படியாதிருத்தல், வளம் - செல்வம், போழ்து - பொழுது, வள்ளன்மை - ஈகைத் தன்மை, கிளைஞர் - உறவினர், சினம் - குற்றம், தமர் - தம்மவர், ஊண் - உண்ணல்.

3. மொய் - வலி, சிதைக்கும் - அழிக்கும், கலம் - பாண்டம், குலம்-இனம், கூடார் - சேரத்தகாதவர்.

## 3. இனியவை நாற்பது

இந்நூலும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைச் சேர்ந்தது. இதனை இயற்றியவர் பூதஞ்சேந்தனார். தந்தையார் பூதன் எனப்படுவார். காலம் - கடைச் சங்க காலம்.

1. கல்வி உரைத்தல் - கற்ற கல்வியைச் சொல்லல், மிக்கார் - அறிவில் மேம்பட்டவர், மாண - பெருமையாக, எள்துணை-எள்ளளவு, இரவாது - யாசியாது, எத்துணையும் - எவ்வகையிலும், ஆற்ற இனிது - மிகவும் இனியது.

2. கருமப்பொருள் - காரியத்தின் பயன், பற்று - அன்பு, வாழாமை - வாழாதிருத்தல், முன் இனிது - மிக இனிது, தெற்றென - தெளிவாக, தெளிந்தாரை - தன் கண் நம்பிக்கை வைத்தார்க்கு, ஊக்கா - செய்யாத, பத்திமை - அன்புடைமை.

3. தானம்-இருப்பிடம், ஊனம்-குறைவு, மானிடவர்க்கு - மக்கட்கு.

## 4. நாலடியார்

நாலடியார், இது திருக்குறளை யொத்த சிறப்புடையது. இதுவும் பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்தது.

நூல் வரலாறு:— இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே 8000 சமண முனிவர்கள் பஞ்சத்தின் கொடுமையால் தமது நாடுவிட்டுப் பாண்டிய நாட்டையடைந்து பாண்டியனது ஆதரவில் இருந்து வந்தனர். பின்னர் மழை பெய்து தமது நாடு செழிப்புற்றதை உணர்ந்த அவர்கள் தம் நாடு செல்லப் பாண்டியனிடத்தில் உத்தரவு கேட்டனர். அரசன் உத்தரவு கொடுக்க மறுத்ததனால், அவர்கள் அனைவரும் ஒவ்வொரு வெண்பாவை எழுதித் தத்தம் இருக்கையில் வைத்துவிட்டு நள்ளிரவில் புறப்பட்டுப் போயினர். மறு நாள் அவ்வேடுகளை எடுத்து வையையில் எறிய நானூறு ஏடுகள் மாத்திரம் நீரை எதிர்த்துச் சென்றன. பாண்டியன் அவைகளை எடுத்துப் பதுமனார் என்ற சமணப் பெரியாரைக்கொண்டு உரை எழுதுவித்து ஒரு நூலாகத் தொகுப்பித்தான்.

1. கரை இல - அளவு இல்லாதன, பிணி - நோய், தெள்ளிதின் - தெளிவாக, அமைவு உடைய - பொருத்தமான நூல்கள், கற்ப-கற்க, குருகின்-அன்னத்தைப் போல, தெரிந்து - அறிந்து.

2. அறிமின் - அறியுங்கள், அறநெறி - அறத்தின் வழி, அஞ்சுமின் - பயப்படுங்கள், கூற்றம் - இயமன், பொறுமின் - பொறுத்துக் கொள்ளுங்கள், கடுஞ்சொல்-தீச்சொற்கள், போற்றுமின் - அடையாது காத்துக் கொள்ளுங்கள், வெறுமின் - வெறுப்புக் கொள்ளுங்கள், கேண்மை - உறவு (எ+ஞான்று) எஞ்ஞான்றும் - எப்பொழுதும், பெறுமின் - அடையுங்கள்.

3. நல்லார் - நற்குணமுடையார், நனி - மிகுதியும், அல்லார்-தீயோர், அடக்கி-அவர்களது தீய குணங்களை வெளி விடாது மறைத்து, புல்லிதழ், (புன்மை - இதழ்) சிறிய இதழ், பூ-தாமரை.

## 5. பழமொழி

ஒவ்வொரு செய்யுளுக்கும் ஒவ்வொரு பழமொழியைக் கொண்டுள்ள நூல் ஆதலால் பழமொழி எனப்பட்டது. இது நானூறு பாடல்களை யுடையது. இதுவும் கடைச்சங்க நூல்களைச் சேர்ந்தது. இதனை இயற்றிய ஆசிரியர் முன்றுறையரையர். இவர் அரையர் எனப்படலால் அரச குலத்தினராவர். இவரது ஊர் - முன்றுறை எனப்படும். மதம் சமணம். காலம் கடைச் சங்க காலம். இந்நூலால் பண்டைய மக்களது பழக்க வழக்கங்களைக் கண்டறியலாம்.

1. உரை முடிவு - வழக்கின் முடிவு, இளமையோன - சிறியவன், முதுமக்கள் - கிழவர்கள், உவப்ப - மகிழ, நரைமுடித்து - பொய்யாக நரை மயிர் முடியைக் கொண்டு, சொல்லால் - அவர் தம் சொற்களால், முறை செய்தான், நீதி வழங்கினான், குலவிச்சை - குலத் தொழில், பாகம்படும் - கை வரும்.

2. தகவு - தகுதி, கரி - சாட்சி, தவறு - குற்றம், குறைத்தான் - வெட்டிக்கொண்டான், தென்னவன் - பாண்டியன், மாணு - பெருமையில்லாத, வினை - செயல்.

3. புனல் - நீர், உப்பு - உவர்ப்புத் தன்மை, ஒலி - சத்தம், நலம்-சிறப்பு, கீழ்-கீழ் மக்கள்.

## 6. குமரேச சதகம்

குமரேசன் - குமர + ஈசன் = குமார தேவன், குமரேச சதகம் = குமார தேவனைப்பற்றிய சதகம், சதகம் - நூறு பாடல்களைக் கொண்ட ஒரு பிரபந்தம். இதன் ஆசிரியர் குருபாத தாசர் எனப்படுவர்.

கொண்டல் - கார்மேகம், மாரி-மழை, உதாரம் - ஈகை, கோ-அரசன், ஊருணி-ஊரரால் உண்ணப்படும் நீர் நிறைந்த குளம், அம்பலம்-சபை, தரு-மரம், சந்தி - வீதிகள் ஒன்றுகூடும் இடம், விண்டலம் - விண் + தலம் = வானம், மாருதம் - காற்று, சீதம் - குளிர்ச்சி, விவேகி - அறிஞன், இமிர் - ஒலிக்கின்ற, களபம் - சந்தனம், புல் வயல் - என்பது ஓர் ஊர்.

### 7. அறப்பளீசுர சதகம்

அறப்பளீசுரம், சதுரகிரி என வழங்கும் கொல்லி மலையிலுள்ள கோவில். இதனை இயற்றியவர் அம்பலவாணக் கவிராயர்.

குடி - குலம், உறவு - சம்பந்தம், பழி - பழிக்கத்தக்க செயல், கருணை-அருள், மறலி - யமன், சதுரகிரி-சதுரமாயிருக்கும் மலை.

## வருணனைப் பகுதி

### 1. மழை

இச் செய்யுள் அல்லியரசாணி மாலையிலுள்ளது. இதனை ஒட்டக்கூத்தர் கட்டளையால் சிறையிலிருந்த பொழுது பெண்களின் பொழுது போக்குக்காகப் புகழேந்திப் புலவர் பாடினர் என்று கூறுவர்.

சீமை - நகர், சொலித்தன - விளங்கின, குமுறின - ஒலித்தன, வார்த்தால் - பெய்தால், பொய்கை - நீர் நிலை, கால்வாய் - வாய்க்கால், அளி - வண்டு.

### 2. கடல்

இதனை இயற்றியவர், கவிமணி - தேசிக விநாயகம் பிள்ளை. இவர், சுசீந்திரத்தை அடுத்துள்ள தேரூரில் கி. பி. 1876-ம் ஆண்டில் பிறந்தவர். இவர் ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டு வாழ்ந்து

வருகின்றார். இவர் பாடல்கள் மலரும் மாலையும் என்ற நூலில் உள்ளன.

உறங்காயோ - தூங்காயோ, அலுப்பு - களைப்பு, மதி - அறிவு, திரை - அலை, புரவி - குதிரை, நிரை - வரிசை, மகரமீன் - ஒருவகை மீன்.

### 3. உடற்பயிற்சி

இப் பாக்களை இயற்றியவர் சிவசங்கர முதலியார் என்பவராவர்.

1. அறம் - தருமம், நல்வழி, உரம் - வலிமை.

2. விலங்கும் - மிருகமும், நிதம் - நாளும்.

3. நிலவுலகு - பூமி, குடற்கு = குட லு க் கு, இடர்ப்பாடு - துன்பம், எழில் - அழகு.

4. செப்பு - சொல்லுதல் - (திசைச்சொல்) உப்பிருந்த பாண்டம் - உப்பு வைக்கப்பட்டிருந்த பாத்திரம் (உப்பிருந்த பாண்டம் உவமை), தசை-சதை, புவி - பூமி.

5. கலைகள் - நூல்கள், ஓத - படிக்க, பிணியாளர் - நோயாளிகள்.

## கதைப் பகுதி

### 1. புத்தர் ஆட்டுமந்தையைக் கண்டு இரங்கல்

இதன் ஆசிரியர் முற் கூறிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களே யாவர்.

(1) சிந்தை-மனம், தளரும் - சோரும், சீவன் - உயிர், (2) கௌவிட - பற்றிட, (4) மறி - செம்மறியாடு, பீடை - துன்பம், (5) முடம் - நொண்டி, உதிரம் - இரத்தம், (7) இளமறி - செம்மறிக் குட்டி, கரம் - கை, வையம் - பூமி, புயம் - தோள், அருள் - கருணை, அண்ணல் - பெருமையுடையோன், (8) அல்லல்-துன்பம்,

ஆறி - மாறி, மதலை - குட்டி, (9) இடர் - துன்பம், (10) துயர்-துன்பம், (11) எமன் - காலன், குன்று-சிறு மலை, குவலயம் - பூமி, மாரி - மழை, ஐயன் - பெருமை யுடையவன், (12) சாலை - பாதை, (13) இறைவன் - அரசன், ஆணை - கட்டளை, (14) இரா - இரவு, யாகம் - வேள்வி, (15) வள்ளல் - கொடையாளி, மகம் - யாகம்.

## 2. நளவெண்பா

நளனைப் பற்றிக் கூறும் வெண்பாவாலாகிய நூல். நளனது சரித்திரம் பாரதத்தில் வரும் ஒரு கிளைக்கதை. நளனது சரித்திரம் கூறும் மற்றொரு நூல் நைடதம். நள வெண்பா, சுயம்வர காண்டம், கலி தொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் என மூன்று காண்டங்களை யுடையது. இங்குப் பாடமாயுள்ளது சுயம்வர காண்டம். இதனை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர். இவர் மள்ளுவ நாட்டை யாண்ட சந்திரன் சுவர்க்கி என்ற சிற்றரசனால் ஆதரிக்கப் பெற்றார். அவ்வரசனது வேண்டுகோளால் இந்நூலை இயற்றினர். இவர் காலத்துப் புலவர்கள் ஒளவை, ஒட்டக்கூத்தர், கம்பர் முதலியோராவர். இவரது காலம் 800 ஆண்டுகளுக்கு முன்னதாகும்.

1. வாங்கு - வளைந்த, வதனம் - முகம், குவளைக் காடு - குவளை மலர்கள் நிறைந்த காடு (மகளிர் கண் களின் தொகுதி), ஆடி - மூழ்கி, நாடி - விரும்பி.

2. நீள்நிறம் - மிகுந்த வெண்ணிறம், பொய்கை - நீர் நிலை, மாண் - பெருமை, அப்புள் - நீரில், மூளரி - தாமரை, அன்னப் புள் - அன்னப் பறவை.

3. ஆயிழையார் - பணிப் பெண்கள், மலங்கிற்று - மயங்கிற்று, கிளை - கூட்டம், சுற்றம்; கலங்கிற்று - கலக் கம் அடைந்தது.

4. மடம் - அழகிய, வஞ்சி - பூங்கொடி, விஞ்சி யது - சிறந்தது, மன் - அரசன்.

5. நாற்குணம் - நான்கு + குணம் (நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு), நாற்படை - தேர், கரி, பரி, காலாள் என்பன, ஐம்புலன் - ஐந்து + புலன்-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன, சிலம்பு - காலணி, மதி - சந்திரன்.

6. வடிவு - அழகு, திகழ்கின்ற - விளங்குகின்ற, என் நாடல் - என்ன விருப்பம்.

7. செம்மனம் - களங்கமற்ற மனம், தண்ணளி - கருணை, (செம்மை + மனம், தண்மை + அளி), செங்கோல் - நீதியோடு கூடிய ஆட்சி (செம்மை + கோல்), மேனிலம் - வானுலகம், (மேல் + நிலம்), நானிலம் - நான்கு + நிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் இந்த நான்கினாலும் ஆகியதனால் பூமி நானிலம் எனப்பட்டது.

8. சுயம்வரம் - சுயமாக வரனைத் தேடிக்கொளல், கமுகு — பாக்கு மரம், கூந்தல் - மடல், தூது - தூதுவர்.

9. கடல்தானை - கடல் போன்ற சேனை, அடல் - போர், வில்லியர் - வில் வீரர், பொற்றாமம் - பொன் மாலை.

10. மால்வரை - பெரிய மலை, ஈர்ந்தான் - வெட்டினான், சால்புடைய - சிறப்புடைய.

11. பாவை - பதுமை, புக்காள் - புகுந்தாள், மின் - மின்னல், வாய் - இடம், மின்னிறத்துச் செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம், செங்கமலப் பொய்கை வாய்ப் போவது - உவமானம், விழித்தாமரை பூத்தமண்டபத்தே பொன்னின் மடப்பாவை போய்ப் புக்காள்-உபமேயம்.

12. பரிசு - தன்மை, இயல் அணங்கு - கற்றறிந்த தோழி, கொடி - பூங்கொடி போன்ற தமயந்தி.

13. காவலர் - காவலில் வல்ல அரசர், சேடி - தோழிப்பெண், ஈரிருவர் - நால்வர், மாசு - குற்றம்,

காணுநின்று - கண்டு, ஊசலாடுற்றாள் - ஊஞ்சல் போல் நிலை கலங்கினாள்.

14. இமைத்தல் - மூடுதல், காசினி - பூமி (காரணப் பெயர்), தோய்தல் - படுதல், வண்ணம் - அழகிய, நன்னுதல் - அழகிய நெற்றியையுடைய இலக்குமி, அன்னாள் - ஒத்தாள்.

15. விண்ணரசர் - தேவர், வெள்கி - நாணி, ஞாலம் - பூமி, களி - களிப்பு, கூர - மிக, வன்மாலை — வலிய மயக்கம், வயம் - வெற்றி, பொன் - அழகிய, மாலை - சுயம்வர மாலையை, பொன் - இலக்குமி போன்ற தமயந்தி.

## 3. கம்ப ராமாயணம்

இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம். இதனை வடமொழியில் இயற்றியவர் வால்மீகி முனிவர். இதனைத் தமிழிற் பாடியவர் கம்பர். ஆதலின் கம்பராமாயணம் எனப் பெயர் பெற்றது. இவர் கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புப் பெயரையுடைய சிறந்த கவிஞர். இவரது ஊர் திருவழுந்தூர். தந்தை ஆதித்தர் எனப்படுவார். குலம் வேளாளர் குலம். உவச்சர் குலம் என்பாரும் உளர். இவருக்கு அம்பிகாபதி என்றொரு புதல்வர் இருந்ததாகவும் அவரும் சிறந்த கவிஞராக விளங்கினார் என்றும் கூறுவர். மதம் வைணவம். இவரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பவள்ளல். இவரது காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இவர் இயற்றிய வேறு நூல்கள் — சரஸ்வதியந்தாதி, சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது முதலியன.

1. பார் - பூமி, குவடு - மலைச்சிகரம், நீறுஎழ - புழுதிதோன்ற.

2. சுரிகை - உடைவாள், கழல் - காலணி, கணைப்புட்டில் - அம்புக்கூடு, ஏந்தல் - இராமன்.

3. இருமை - இம்மையும் மறுமையும், உவத்தி - மகிழ்வாய்.

4. நோய் செய்த - துன்பம் செய்த, பெருமகன் - தசரதன்.

5. வையகம் - நாடு, அடவி - காடு, வைகுதல் - தங்குதல், நைதல் - வருந்துதல், நவை - குற்றம், கைகயன் மகள் - கைகேயி, அரற்ற - கதற.

6. விலக்குவதரிது - தடுக்க முடியாது, புலக்குரித்து - அறிவிற்குரியது, புகல - சொல்ல.

7. மண்ணை - நாட்டை, தானை - சேனை, பொரும் என - போர் செய்வான் என்று.

8. பெரும் படை - பெருஞ்சேனை, மின்னொடும் பொருவுற - மின்னலோடு ஒப்ப.

9. சேண்உயர் - மிகவும் உயர்ந்த, செம்மையின் ஆணி - நேர்மைக்கு உரையாணிபோல்பவன், மொய்ம்பு - வலிமை.

10. இளவல் - தம்பி, ஏந்தல் - இராமன், முந்தினன் - விரைந்து வந்தான்.

11. அவலம் - துக்கம், படிவம் - உருவம்.

12. கார் - மேகம், ஆர்ப்புறு - ஆரவாரம் செய்த, வரிசிலை - கட்டமைந்த வில்.

13. எல்ஒடுங்கிய - ஒளிகுறைந்த, மல்ஒடுங்கிய - அழகு குறைந்த.

14. கோதற - குற்றமற, திருமகள் - இலக்குமி.

15. மலர் அடி - மலர்போன்ற பாதம், தாதை - தந்தை.

16. புண்டரீகம் - தாமரை, சடாமண்டலம் - சடைமுடி.

17. அயாவுயிர்த்து - பெருமூச்சுவிட்டு, உயாவுற - பெருகி வழிய, நிலையம்-இருப்பிடம், தயாமுதல் - அருளை யுடைய முதற் கடவுள்.

## 4. வில்லிபுத்தூராழ்வார் பாரதம்

வில்லிபுத்தூர் ஆழ்வார் இயற்றிய பாரதம் வில்லி புத்தூராழ்வார் பாரதம் எனப்படும். இதற்கு முதல் நூல் வால்மிகியால் எழுதப்பட்ட வடமொழிப் பாரதம். பரதனது குலத்தார்களைப் பற்றிக் கூறுவதால் பாரதம் எனப்பட்டது. இங்கு எடுத்துக்கொண்ட பகுதி நிரை மீட்சிச் சருக்கம். துரியோதனாதியர் விராடனது பசுக் கூட்டங்களைக் கவர்ந்து சென்றனர். அதையறிந்த அருச் சுனன் விராடன் பொருட்டுப்பொருது, பசுக்கூட்டங்களை மீட்டல்.

இந்நூலை இயற்றியவர் வில்லிபுத்தூர் ஆழ்வார். ஊர் சனியூர். குலம் வைணவப் பிராமணர் குலம். காலம் 500 ஆண்டுகளுக்கு முன்னதாகும். ஆதரித்த வன் வரபதியாட் கொண்டான்.

1. மேதினி - பூமி, படை-ஆயுதம், பஞ்ச பாதகம்- ஐந்து பாதகங்கள், பதம் - திருவடி.

2. சோற்றுக் கடன் - சோறு தின்ற கடன், தெம் முனை - போர் முனை.

3. அதிரதர் - தேர் வீரரில் சிறந்தவர், சிலைமுனி - துரோணன், பவனம் - காற்று, பகழி - அம்பு.

4. துவசம் - கொடி, புரவி - குதிரை, நாணி - கயிறு, குனிசிலை - வளைந்த வில்.

5. கொடித்துகில் - கொடிச்சீலை, வண்டல் பாவை - விளையாடும் பாவை, மவுலி - முடி, அத்தர் - சிவன், திங்கள் - பிறைச் சந்திரன், புடைத்த - அடித்த.

6. பகழி - அம்பு, அரில்படு - துளைபட்ட, கவசம் - இரும்புச் சட்டை, இவுளி - குதிரை.

7. பாகை - வக்கபாகை, புரவி - குதிரை, பட அரவு உயர்த்தகோ - துரியோதனன்.

8. வல் - சூது, தோற்றம் செய்தார் - காணப்பட்டார், புல்லிய - அடைந்த, கான் - காடு, புகறி - சொல்வாய்.

9. கன்னல் - கரும்பு, இன்னல் - துன்பம், இந்து- சந்திரன், நென்னல்-நேற்று.

## 5. சிலப்பதிகாரம்

இந்நூல் தமிழில் உள்ள பெருங்காப்பியங்களில் ஒன்று. ஐம்பெருங்காப்பியங்கள் - சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி. சிலப்பதிகாரம் கண்ணகியின் வரலாற்றைக் கூறும் நூல்.

இதனை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் சேர நாட்டையாண்ட சேரலாதனது மகனாவார். இளமையிலே துறவு பூண்டார். இவரது தமையனார் செங்குட்டுவன். மதம் சமணம். காலம் 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகும்.

தேரா - தெளிவில்லாத, செப்புவது - உரைப்பது, எள்ளறு - குற்றமற்ற, இமையவர் - தேவர், வியப்ப - அதிசயிக்க, புள் - பறவை (புறு), புன்கண் - துன்பம், தீர்த்தோன - நீக்கியவன் (சிபி), வாயில் - இல்வாய், ஆ - பசு, உகு - சிந்தும், ஆழி - தேர்ச்சக்கரம், மடித்தோன் - கொன்றவன், (மனு), புகார் - காவிரிப்பூம் பட்டினம், பதி - ஊர், ஏசா - பழிப்பில்லாத, இசை - புகழ், மகனையாகி - மகனாகி, ஊழ்வினை - பழவினை, கழல் - வீர கண்டை, பட்ட - இறந்த.

## 6. மணிமேகலை

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறும் நூல். இதுவும் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகும். இந்நூலை இயற்

றியவர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் எனப்படுவார். இவரது ஊர்—மதுரை, தொழில்—கூலவாணிகம். மதம்—பௌத்தம். சமகாலப் புலவர் - இளங்கோவடிகள். அரசர்—செங்குட்டுவன். காலம்—2000 வருடத்திற்கு முன்னதாகும்.

மன்னுயிர் - உடலோடு கூடிய உயிர், கோறல் - கொல்லல், கயக்கு - கலங்குதல், கடிந்தனர் - கைவிட்டனர், நல்லுலகு - வீட்டுலகம், அல்லறம் - பாவம், உரவோர் - அறிவுடையோர், களைந்தனர் - கைவிட்டனர். இச் செய்யுட் பகுதியில் மூன்றாவது நான்காவது வரிகளில் "உறங்குவது போலும் சாக்கா டுறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்ற திருக்குறட் கருத்தமைந்திருப்பது காண்க.

## பல்சுவைப் பகுதி

### தனிப் பாடல்கள்

#### 1. தமிழ் நாட்டின் சிறப்பு

இச் செய்யுளைப் பாடியவர் ஔவையார். இவர் வரலாறு செவ்வையாகத் தெரியவில்லை பாணர் குலத்திலே பிறந்தவர் என்பர். வேறு சிலர் வேறு வகையாகக் கூறுவர். இவர் அரசராலும் வள்ளல்களாலும் ஆதரிக்கப்பட்டவர். இவர் காலம் 800 ஆண்டுகளுக்கு முன்னதாகும்.

வேழம் - யானை, மலை - மலைக்ளையுடைய சேர நாடு, மேதக்க - மேன்மை பொருந்திய, சோறு - உணவு, பூழியர் - பாண்டியர், கோன் - அரசன், தென்னாடு - பாண்டி நாடு, தெண்ணீர்—தெள் + நீர், நன்னாடு - நல் நாடு, சான்றோர் - அறிவிற் சிறந்தோர்.

#### 2. சீதக்காதிப் பிரபு இறந்தபோது பாடியது

இதனை இயற்றியவர் படிக்காசுப் புலவர். ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன் தொண்டை மண்டலத்

துப் பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர். மதம் சைவம். சிதம்பரத்தில் பஞ்சாக்ஷரப்படியில் பொற்காசு பெற்ரு ராதலின் இப்பெயர் பெற்றதாகக் கூறுவர். இவர் சந்தப்பா பாடுவதில் வல்லவர்.

பூமாது - பூவில் வசிக்கும் இலக்குமி, புவிமாது - பூமிதேவி, பூதலம் - பூமி, நாமாது - பிரமனது நாவில் இருக்கும் கலைமகள், நாவலவர் - நாவில் வல்லவர், புலவர், கோமான்-அரசன், மால் - திருமாலையொத்தவர்.

3. பாம்புக்கும் எலுமிச்சம் பழத்துக்கும் சிலேடை

இச் செய்யுளைப் பாடியவர் காளமேகப் புலவர். காளமேகம் போல் கவி பாடும் தன்மைபற்றிக் காளமேகப் புலவர் எனப்பட்டார். இவர் திருவரங்கத்திலும், திருவானைக் காவிலும் இருந்ததாகச் சொல்லப்படுவர். வசை பாடுவதில் திறமையுடையவர். இவர் கி. பி. 15-ம் நூற்ருண்டில் திருமலை நாயக்கர் காலத்தில் இருந்தவர். இவர் காலப் புலவர் இரட்டையர் முதலியோர்.

தேம் பொழியும் - தேன் பாய்கின்ற, சோலை - பூஞ் சோலைகளையுடைய, திருமலை ராயன் - திருமலை ராய னுடைய, வரையில் - மலையில், பாப்பு - பாம்பானது, பெரிய விடமே சேரும் - உயிரைக் கொல்லக்கூடிய நஞ்சை யுடையதாகும், பித்தர் - பித்தர் என்னும் பெய ரையுடைய சிவபெருமானது, முடி ஏறும் - திருமுடியின் மீது தங்கியிருக்கும், அரி உண்ணும் - காற்றை உட்கொள் ளும், உப்பும் - (காற்றினல்) உடல் பருக்கும், மேல் ஆடும்- தலைதூக்கி ஆடும், எரி குணம் ஆம் - கோபக் குண முடையதாகும்.

எலுமிச்சம் பழம் - எலுமிச்சம் பழமானது, பெரிய இடமே சேரும் - பெரியவர்கள் கையில் கொடுக்கப்படும், பித்தர் முடி ஏறும் - அதன் சாறு பித்தர்கள் முடியில் தேய்க்கப்படும், அரி உண்ணும்-(ஊறுகாய்க்காகத் துண்டு துண்டாக) அரியப்படும், உப்புமேல் ஆடும் - உப்பு அதன்

மேல் தூவப்படும், எரி குணம் ஆம் - அதன் சாறு பட்டால் எரிச்சல் உண்டாகும், (ஆதலால்) பாம்பு எலுமிச்சம் பழத்துக்குச் சமமாகும். இவ்வாறு இரு பொருள்படக் கூறுவது சிலேடையாகும்.

## 4. எல்லோருக்கும் விசனம் உண்டு

இச்செய்யுளைப் பாடியவர் இன்னார் என்று விளங்கவில்லை.

என்பார்க்கும் - என்று சொல்பவர்க்கும், பருக்கை - சோறு, குற்றி - துளைத்து, கனகம் - பொன், தண்டி - பல்லக்கு, பஞ்சணை - பஞ்சினாலாகிய அணை, விசனம் - கவலை.

## 5. சேண்பகராமன் பள்ளு

இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. காப்பு வணக்கம் முதலிய செய்யுள்களை நோக்கும்பொழுது இவர் கிருஸ்துவர் எனத் தெரிகிறது. இவர் சிறந்த செந்தமிழ்ப்பற்றுடையவர்.

### பாண்டிய நாட்டு வளம்

கன்னல் - கரும்பு, முத்தம் - முத்து, கழனி - வயல், கமலம் - தாமரை, செந்நெல் - அழகிய நெல் அல்லது சிவந்த நெல், திரை - அலை, வால் — ஒளி, வளை - சங்கு, வண்டல்- வண்டல் மண், அன்னதாதா - அன்னத்தை தானம்பண்ணும் கொடையாளி, ஆணை - கட்டளை.

## 6. நாரைவிடுதூது

இதனைப் பாடியவர் சத்திமுத்தப்புலவர். சத்திமுற்றம் என்ற ஊரில் இருந்தவர். இவர் வறுமையின் காரணமாகப் பொருள்தேடி வரப் புறப்பட்டுப் பாண்டிய நாடு சென்று நிலவொளியில் தேரடியில் படுத்துக்கொண்டிருந்தபோது வானத்திலே பறந்து சென்ற நாரைக் கூட்டங்களைப் பார்த்துத் தூதாகப்பாடிய பாடல்.

தூது - ஒருவகைப் பிரபந்தம், செங்கால் - சிவந்த கால், படு-உண்டாகும், கூர்வாய் - கூரியவாய், பெடை பெட்டை, குமரி - கன்னியாகுமரி, ஆடி - நீராடி, ஏகு வீராயின் - செல்வீராயின், வாவி - குளம், நனைசுவர் - நனைந்த சுவர், கனை - ஒலிக்கும், பல்லிப்பாடு - பல்லி சொல்லல், கோன் - அரசன், மாறன், வழுதி - பாண்டி யன், கூடல் - மதுரை, வாடை - வடக்குத் திசையினின் றும் வீசும் காற்று, தழிஇ - தழுவி, பேழை - பெட்டி, உயிர்க்கும் - பெருமூச்சுவிடும், கண்டனம் - பார்த்தோம், எனும் - என்று சொல்லுங்கள்.

## 7. திருவரங்கக் கலம்பகம்

திருவரங்கம், சீரங்கம் எனப்படும். இது ஒரு வைணவத் தலம். இது திருச்சிராப்பள்ளியில் உள்ளது. கலம்பகம் பல வகைப் பாக்களும் உறுப்புக்களும் கலந்து வரப் பாடப்படும் ஒரு வகைப் பிரபந்தம். மறம் என்பது மறக்குலத்துதித்தோர் தமது வீரத்தைப் புகழ்ந்து கூறுவது.

இச் செய்யுளை இயற்றியவர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். ஊர் - திருமங்கை, மதம் - வைணவம், காலம்- 760 ஆண்டுகளுக்கு முன். இவர் பாடிய நூல்கள் - திருவ ரங்கத்து மாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம் பகம், அழகர் அந்தாதி முதலியன.

கொற்றவன் - அரசன், திருமுகம் - அழகிய முகம், ஓலை, கொணர்ந்த - கொண்டுவந்த, குறையுடல் - தலை யற்ற வுடல், மறவர் - வீரர், அற்றவர் - உலக பாசமற் றவர், தோழன் - குகன், அவதரித்த - தோன்றிய, திருக்குலம் - சிறந்தகுலம், மன்னர் மன்னன் - அரசர்க் கரசன், இளவரசு - இளவரசன், ஆலின் கொம்பு - ஆலமரத்தின் கொம்பு.

## 8. புறநானூறு

புறத்தைப்பற்றிய நானூறு பாடல்களையுடைய நூல். இது புறம் எனவும் சொல்லப்படும். புறம் - அறமும் பொருளும் பற்றியன. இவை பலராலும் பாடப்பட்டவை. கடைச்சங்க காலத்தில் இருந்த புலவர்கள் பாடிய பாடல்கள் 400 ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இது தொகுக்கப்பட்டுள்ளதாகையால் தொகை நூலாகும். இச் செய்யுள் கல்வியின் சிறப்பைப் பற்றியது. பாண்டியன் அறிவுடை நம்பியால் பாடப்பட்டது.

உற்றுழி - ஆசிரியர் துன்புற்ற சமயத்தில், உதவியும்- உதவி செய்தும், உறு பொருள் - வேண்டிய பொருள், பிற்றை - பின் ஒழுகவேண்டிய, முனியாது வெறுப்பில்லாது, பிறப்பு - தோற்றம், ஓர் அன்ன - ஒரு படித்தான, சிறப்பின் பாலால் - செய் தொழிலின் சிறப்பின் பகுதியால், மனம் திரியும் - மனம் மாறுபடும், பலர் - பல சகோதரர், அறிவுடையோன் - கற்றறிந்தவன், அரசு-அரசன், வேற்றுமை - வேறுபாடு, நாற்பால் - நான்கு வகைப்பட்ட குலம், கீழ்ப்பால் - கீழ்க்குலம், மேற்பால் ஒருவன் - மேற்குலத்தான் ஒருவன்.

## 9. குறத்தி மலைவளம் கூறுதல்

இதனை இயற்றியவர் திரிகூட ராசப்பக் கவிராயர். இவர் குற்றாலத்தைச் சார்ந்த மேலகரம் என்னும் ஊரில் வேளாளர் மரபில் சுமார் 200 ஆண்டுகட்கு முன் பிறந்தவர். இவர் இயற்றிய நூல்கள் திருக்குற்றாலப் புராணம், குற்றாலக் குறவஞ்சி, குற்றாலமாலை, குற்றாலச் சிலேடை வெண்பா, குற்றாலம் பிள்ளைத்தமிழ் முதலியனவாம்.

சயிலம் - மலை, இரவி, சூரியன், முழை - குகை, அகிலம் - உலகம், துங்கர் - தூயரான இறைவர்.

## 10. கால மழை

இது நாடோடிப் பாடல்களைச் சேர்ந்தது. இதனை இயற்றியவர் பெயர் இன்னதென்று தெரியவில்லை.

திங்கள் - மாதம், சோதி - ஒளி, காலும் - கக்கும்.

## 11. திரிகைப் பாட்டு

இதனை இயற்றியவர் லக்ஷ்மீ நரசிம்மன் என்பவர். இவர் தமிழாசிரியப் பணிபுரிந்து வருகிறார். மாணவர்க்குரிய தமிழ்ப்பாட புத்தகங்களும் இலக்கண நூல்களும் இயற்றியவர்.

நேர்த்தி - அழகான, கருவி - யந்திரம், பற்றுவோம்-பிடிப்போம்.

## 12. கயிறு திரித்தல்

இதனை இயற்றியவர் ஒரு தமிழாசிரியர். நாராயணன் என்பது இவர் பெயர். சிறந்த தமிழ்ப்பற்றும் பயிற்சியும் உடையவர்.

மன்னு - நிலைபெற்ற, நவநவமாம் - புதிது புதிதாக தெண்ணீர் - தெளிந்த நீர்.

## 13. கதராடை

இதனை இயற்றியவர் வித்துவரத்தினம் - இராம. சுப்பிரமணியம் என்பவர். இயற்கையாகக் கவி பாடும் திறமை மிக்கவர். தேசீயப் பற்றுடையவர். வேதாந்த நாட்ட முடைய பல பாடல்களும் தேசீயப் பாடல்களும் பாடியுள்ளார்.

இயற்றி - செய்து, மலர்க்கரம் - மலர் போன்ற கை, நூதனம் - புதுமை, களிப்போம் - மகிழ்வோம்.

---

600 009 12862

RTR
331